# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



பங்குனி இதழ் 2021

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

பங்குனி - 2021

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

ஆசிரியர் : சோபா

வடிவமைப்பு : நெகிழன், 7904748374

படைப்புகள் அனுப்ப : R.Mahendran,
34 Redriffe Road, Plaistow,
London, e13 0JX, UK

மின்னஞ்சல் : neythal34@gmail.com
mahendran54@hotmail.com

காசோலைகள் : R.Mahendran எனும் பெயருக்கு எழுதுங்கள்.

நன்றி : இணையம்


## வணக்கம்,

பங்குனி மாத இதழ்(2021)தங்கள் பார்வைக்கு வருகிறது.

20 வருடங்களுக்கு மேலாக வெளிவரும் காற்றுவெளி படைப்பாளர்களினதும், வாசகர்களினதும் தருகின்ற ஊக்குவிப்பே தொடர்ந்து வருகின்றமைக்கான முதன்மைக் காரணியாகும். எனியும் வரும் என்கிற நம்பிக்கையும் வருகிறது. மறந்துவிடாதபடி வெ.நாராயணன், குடந்தை கீதப்பிரியன், கார்த்திகா.ம, ஓவியா பதிப்பகம், தமிழ்நெஞ்சம் அமீன், ராஜன் ராஜ், நெகிழன் என தொடர்கின்ற வடிவமைப்பாளர்களின் ஒத்துழைப்புமே காற்றுவெளியின் சிறப்பிற்குக் காரணமும் கூட. நினைத்துப்பார்க்கையில் பெருமிதமும் தான். எனினும் சிற்றிதழுக்கேயான தொடர் சறுக்கலும் இல்லாமலுமில்லை. உலகெங்கும் அச்சுறுத்தலுக்குள்ளாகிவிட்ட யுத்தமும், கொறோணாவும் சூழ மக்களும் ஒருவகை பீதியுடன் வாழ்கின்ற நிலையில் அச்சு ஊடகங்களின் வருகையின் சுருக்கமும் காற்றுவெளியும் பாதிப்புள்ளாக்குவதை ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும்.

மேலும்,

ஈழத்தமிழர்க்கான நம்பிக்கையான சமிக்ஜைகூட மேற்குலகத்தால் தந்துவிடாத இந்த நிலையில், ஏமாற்றமே தொடர்ந்து தமிழர்களுக்குக் கிடைக்கையில் அகிம்சை சாத்தியப்படுமா என்கிற கேள்வியும் எல்லோர் மனங்களிலும் எழாமலும் இல்லை.

காற்றுவெளியின் சித்திரை மாத இதழ் மீண்டும் சிறுகதைகளை மட்டுமே தாங்கிவரவுள்ளது.


நம்பிக்கையைத்தவிர வேறென்ன வேண்டும் நமக்கான பயணம் தொடரட்டுமே..

நட்புடன்,

சோபா

சிறுகதை

● நௌஷாத் கான் லி



# நலாஸ் கடை ஆப்பமும் - தேங்காய் பாலும்

வாழ்க்கைல நாம்ம எப்போதும் ஒரே மாதிரியே இருக்கிறதில்லை.சில நேரங்களில் நம் சுயம் கூட கால ஓட்டத்தால்,நாம் பழகும் மனிதர்களால் மாற்றப் படும் அல்லது நம்மை சுற்றியுள்ள சந்தர்ப்பங்களால் மாற்றப் படும்..சில நேரங்களில் நீங்கள் செய்யும் விஷயங்கள் அந்த காலகட்டத்தில் சரின்னு பட்டாலும் ஒரிஜினாலிட்டி இல்லாமல் போலித் தனமாய் நீங்கள் நடந்து கொள்வது உங்களை நீங்களே ஏமாற்றி கொள்வதற்கு சமம்.

விஸ்காம் படிச்சிட்டு சினிமாவுல பெருசா புடுங்கிடணும்னு ஆசைப்பட்டேன் ஆசையெல்லாம் நிஜத்துல நிராசையா தான் போகும்னு புரிஞ்சுக்கிட்டேன்..அப்பா அம்மா அவங்க ஆசைப்பட்ட மாதிரி பி.காம் தான் படிக்க வச்சாங்க அவங்க பி.காம் படிக்க வச்சாலும் அதற்க்கு மேல சென்னையில் அல்லது பெங்களூரில் பெரிய யுனிவர்சிட்டியில் எம்.பி.ஏ முடிச்சிட்டு ஏதாவது ஒரு எம்.என்.சி கம்பெனியில் நல்ல சம்பளத்துல செட்டிலாகனும்னு நினைச்சேன்..நான் நினைச்சமாதிரி எம்.பி.ஏ படிக்க வைக்க எங்க வீட்ல ஆசையிருந்தாலும் படிக்க வைக்க வசதி இல்லாத காரணத்தாலே பி.காமோட என் படிப்புக்கு முற்று புள்ளியானது..

ஒரளவு உள்ளூர்ல அதிக சம்பளம் சம்பாதிக்கணும்னா மார்க்கெட்டிங் வேலைல தான் கிடைக்கும்.பணத்துக்காக அட்லீஸ்ட் தொலைதூர கல்வி மூலமாவது

எம்.பி.ஏ படிக்க எனக்கு பிடிக்காத மார்க்கெட்டிங் வேலையில் சேர்ந்தேன்.. வேலையில் சேர்ந்த முதல் மாத சம்பளத்தில் எம்.பி.ஏ.தொலைதூர கல்வியில் சேர்ந்தேன்..

ஒரு புறம் படிப்மீபு,ஒரு புறம் வேலை என்று வாழ்க்கை சக்கரமாய் சுழல தொடங்கியது. தினம் ஒரு ஊர்,ஊர் குருவியாய் தினம் தினம் ஒரு ஊர் அலைந்தேன்..நாய் பொழப்பு என்பது மார்க்கெட்டிங் துறை தான் என்பதை அனுபவத்தால் உணர்ந்து கொண்டேன்.. சார்,ஜி,அக்கா,சிஸ்டர்,மேடம்,அண்ணா என்று விற்பனைக்காக வேண்டி எவ்வளவு போலி புன்னகைகளை உதிர்த்து,பல அவமானங்களுக்கிடையில் சில இடங்களில் தன்மானத்தையும் இழந்து பணம் சம்பாதிக்க வேண்டி இருந்தது.. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊர்,தினம் தினம் ஒவ்வொரு ஊரில் தண்ணீர்,ஹோட்டல் சாப்பாடு,களைப்பில் பெப்சி,கோக் குடித்ததன் விளைவு வயிற்றில் அல்சர்..அந்த அல்சரோடு என் எம்.பி.ஏ.படிப்பை முடிப்பதற்காக சகித்து கொண்டு வேலை செய்தேன்..இரவில் லேட்டாக தான் வீட்டிற்கு வருவேன் கடையில் சாப்பிட்டு வந்தாலும் உனக்காக உலை வச்சேன் சோறு வீணாப் போகுது என்பாள் அம்மா,தண்ணி ஊத்தி வை என்பேன்..தண்ணி ஊத்துனா காலையில யாருடா சாப்பிடுவா என்பாள்..இரவு சாப்பிடாம வந்தா சோற்றை எடுத்து வைத்து விட்டு காக்கா,குருவி தூங்குற நேரத்துல வர்ற,உனக்கு கதவு தொறந்து விட்டு சோறு வைக்குறதாலே எனக்கு தூக்கமே போயிடுது,உன்னாலே எனக்கு உடம்பு முடியாம போயிடுது என்பாள் அம்மா..அந்த சோற்றை ஒரு வாய் உள்வைக்கும் போது சொல்வாள் ஊர்ல உள்ளதை எல்லாம் பாரு வெளிநாடு போய் வீடு,வாசல்னு கட்டி கல்யாணம் பண்ணி குழந்தை குட்டியோட வாழுது அவ்வளவு ஏன் உன் தோஸ்த்து மாலிக் போய் அஞ்சு வருஷம் தான் ஆச்சு,வீட்டை கட்டினான்,கல்யாணம் பண்ணான் இப்ப பாரு குழந்தை,குட்டின்னு நல்லா இருக்கான் அவன் மூத்திரத்தை குடிச்சா கூட உனக்கு புத்தி வராது..கவிதை,கதை,சினிமா,படிப்புனு பணத்தோட மதிப்பு தெரியாம உள்ளூர்லேயே குதிரை ஓட்டினா எப்படிடா நீ உருப்படுவ என்று அவள் சொன்ன அடுத்த நொடி சாப்பாடு தட்டு சுவற்றில் பறந்தது..

அதன் பிறகு மேன்ஷனில் தங்கி கொண்டு ஒரு வழியாக எம்.பி.ஏ.முடித்தேன் அதன் பின் உறவினர் ஒருவர் மூலம் விசிட் விசா எடுத்து துபாய் வந்தேன்..அப்பா என் மீது உயிரையே வைத்திருந்தார் அம்மாவுக்கும் பாசம் அதிகம் ஆனால் அவ கூட பொறந்ததுங்க எல்லாம் வசதி வாய்ப்பா இருக்கு,அவங்க எல்லாம் வசதி வாய்ப்பா இருக்குறது பிரச்சனையில்லை ஏதாவது ஒரு விசேஷத்துல வந்து அதுங்க குத்தி காட்டுறது இருக்குமே அது ஒரு ஆயிரம் கத்தியை நெஞ்சுல குத்துற மாதிரி இருக்கும் அக்கா தங்கச்சி புள்ளைங்க மாதிரி வசதி வாய்ப்பா நான் இருக்கணும்னு அம்மா ஆசைப்பட்டா,என்னை பொறுத்தவரைக்கும் ஊர் உலகத்துக்காக வாழ கூடாது,நமக்காக,நம் மனசுக்கு பிடிச்ச மாதிரி வாழணும் அவ்வளவு தான்..அப்பா கூட சொல்வார்,டே யூசுப் ஒரு மூணு வருஷம் பல்லை கடிச்சுக்கிட்டு அந்த ஊர்ல இரு என்றார்..ஏதோ படிச்ச படிப்புக்கு ஏத்த மாதிரி வேலை இல்லைன்னாலும் கம்பியூட்டர் முன்னாடி உட்கார்ந்து வேலை செய்யுற மாதிரி ஒரு வேலை,ஆனா அப்பா சொன்ன அந்த மூணு வருசத்துல இமயத்தை எல்லாம் புரட்ட முடியாதுன்னு புரிஞ்சுக்கிட்டேன்..எனக்கு பக்க பலமா இருந்த அப்பா மஞ்சள் காமாலையில் கல்லீரல் -மண்ணீரல் பாதிக்க பட்டு சென்னையில் ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார் அதன் பின் பல லட்சம் கடனை வாங்கி செலவு செஞ்சும் அவருடைய உயிரில்லாத உடல் மட்டும் தான் கிடைத்தது.. அப்பாவின் மருத்துவத்துக்காக வாங்கிய கடன்,வீடு கட்டும் கனவுக்காக உழைத்ததில் என்னுடைய பத்து வருடம் முடிவு பெற்று இருந்தது..என்னுடைய முப்பது வயது இறுதியில் தான் அம்மா அவங்க இஷ்டப் படி பெண் பார்த்து திருமணமும் நடந்தது..அம்மா,தங்கை தவிர நான் பார்த்த ஒரு சில பெண்களால் மற்ற பெண்கள் மீது அவ்வளவாக அபிப்ராயம்

இல்லை..சின்ன வயசிலிருந்தே குழந்தை பைத்தியம் நல்லா படிச்சு நல்லா வேலையில சேர்ந்து,மனசுக்கு பிடிச்ச மாதிரி ஒரு பொண்ணை லவ் பண்ணி கல்யாணம் பண்ணி நிறைய குழந்தைகளை பெத்துக்கணும்னு ஆசைப்பட்டேன் ஆனா என் ஆசையெல்லாம் நிராசையா தான் போச்சு..தங்கச்சியின் வாழ்க்கைக்காக சொல்லாமலே என் காதல் என் மனசுக்குள்ளேயே பொசுங்கி போச்சு..கடவுள் நல்லவனை தான் அதிகம் சோதிப்பார்னு புரிஞ்சுக்கிட்டேன்..சின்ன வயசிலிருந்தே புகை,மதுன்னு ஒரு கெட்ட பழக்கமும் கிடையாது..ஏன்னா இந்த கெட்ட பழக்கமெல்லாம் இருந்துச்சுன்னா குழந்தை பொறக்காதுன்னு நான் படிச்சு இருக்கேன்..என்ன தான் எண்ணெய்யை தடவிக்கிட்டு மண்ணுல புரண்டாலும் ஒட்டுற மண் தான் ஒட்டும்னு புரிஞ்சுக்கிட்டேன்,கடவுள் நம்ம தலையில என்ன எழுதி இருக்கிறானோ அது நடந்தே தீரும்.. முதல் குழந்தை ஏழு மாதத்தில் என் மனைவி வயிற்றிலேயே இறந்து விட்டது, என் மனைவிக்கு ஒரு சில குறைகள் இருப்பதால் தான் அந்த நிகழ்வு நடந்தது என்பதை புரிந்து கொண்டேன் இருந்தாலும் குழந்தை ஆசையில் ஒரு சில லட்சம் செலவு பண்ணி என் மனைவியின் குறைகளை நிவர்த்தி பண்ணி பல இக்கட்டான சூழ்நிலையில் அவள் இரண்டாவது குழந்தையை கருவுற்றிருந்தாள்.டாக்டர் பல விதிமுறைகளை கூறியும் அவற்றை எல்லாம் பின் பற்றாமல் அவள் இஷ்டத்துக்கு அவளுக்கு எது பிடிக்குமோ (தீயவையாக இருந்தாலும்,வயிற்றிலுள்ள குழந்தைக்கு கெடுதல் என்றாலும் ) அதை தான் செய்தாள்..

டாக்டர் கீரை,காய்கறிகள்,பழங்கள் தினமும் சாப்பிட சொன்னார்கள் அவள் ஒரு நாளும் அதை காதில் போட்டு கொண்டதே இல்லை,அவள் நாக்குக்கு எது பிடிக்குமோ அதை வளைத்து வளைத்து சாப்பிட்டாள்..மக்ரோனி,மேகி,கொத்து பரோட்டா,சன்னா மிர்ச்சி மசாலா,காரமான ஊறுகாய்,நண்டு,இறால்,காடை,பேக்கரி வகைகள்,ஸ்வீட்ஸ் இதை தான் சாப்பிட கூடாது என்று சொன்னாலும் அடம் பிடித்து அவள் இஷ்டத்துக்கு ஆட்டம் போட்டு சாப்பிட்டாள்,வயிற்றில் என் குழந்தை வளர்கிறது என்ற ஒரு காரணத்திற்க்காக அவள் ஆடுவதற்கு எல்லாம் தலையாட்டினேன்..அந்த ஒன்பது மாதத்தில் ஒரு ஐம்பது தடவையாவது ஆஸ்ப்பிட்டல் பெட்டில் அட்மிட் ஆகி இருப்பாள்..டாக்டர் கொடுத்த நாட்களுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே குழந்தை பிறந்தது அதுவும் எடை மிகவும் குறைவாக,இடது கால் வளைந்து குழந்தை பிறந்து இருந்தது..நான் ஒன்றும் பெரிய டாட்டவோ-பிர்லாவோ கிடையாது மாத சம்பளத்தில் குடும்பம் நடத்துபவன் ஒவ்வொருத்தன் மாமனார்-மாமியார் வீட்டையே மொட்டை அடிப்பானுங்க எனக்கு அதில் எல்லாம் உடன் பாடு கிடையாது..நான் ஐந்து பவுன் மகர் கொடுத்து என் சொந்த காசில் குறைந்தது மூன்று லட்சம் செலவு செய்து (மாமியார் வீட்டுக்கு செலவு வைக்காமல்) திருமணம் செய்தேன் அவள் எங்களை போல மிடில் கிளாஸ் குடும்பம் என்ற ஒரே காரணத்திற்க்காக தான் திருமணம் செய்தேன்..அம்மாவையும் -வீட்டையும் பராமரித்து சமையல் செய்தால் போதும் என்று நினைத்தேன்..மிடில் கிளாஸ் குடும்பத்தை சேர்ந்தவள் கொஞ்சம் கட்டு சிட்டாக குடும்பத்தை நடத்துவாள், படித்த பெண் கொஞ்சம் பொறுப்போடு இருப்பாள் என்று நினைத்தேன் என் நினைப்பெல்லாம் தவிடு பொடியாய் போனது வயதான காலத்தில் அம்மா தான் இழுத்து போட்டு வேலை செஞ்சாங்க,கோபப்பட்டு பேசினால் மட்டும் ஏதோ கடமைக்கு அவள் வேலை செய்வாள் அவளிடத்தில் பேசி சமாளிக்கவும் முடியவில்லை,அவளிடத்தில் கோபம் -ஈகோ அதிகமாகவே இருந்தது..குழந்தை பிறந்த ஒரே காரணத்துக்காக அவளுடன் சகித்து கொண்டு வாழ்கிறேன்,அதுவும் கர்ப்ப காலத்தில் அவள் எந்த வேலையும் செய்யாமல் இருந்ததாலும்,முறையான உணவு எடுத்துக் கொள்ளாததாலும் மற்றும் அவளது கவனக்குறைவாலும்,அலட்சியத்தாலும் தான் குழந்தைக்கு


இடது கால் அப்படி வளைந்து இருந்தது..டாக்டர் கவலைப்படாதீங்க குழந்தை வளருவதற்கு முன்னாடியே ரெண்டு மாவு கட்டு அதிலும் சரியாக விட்டால் காலை நேராக்குவதற்கு ஷூ அதிலும் சரியாக விட்டால் காலில் சின்ன ஆபரேஷன் செய்தால் சரியாகி விடும் என்றனர்.. காசு கூட எப்படியாவது சம்பாதித்து விடலாம் ஆனால் எனக்கு பிறந்த பெண் குழந்தையின் கால் தான் முக்கியம்..ஆண்டவா என் குழந்தைக்கு நல்ல படியா காலை சரியாக்கு,அப்படி சரியாக்குனா சட்டி சோறு ஊரு முழுதும் தரேன்னு வேண்டிக்கிட்டேன்,குழந்தை பொறந்த போதே ஹக்கிக்காவாக ஒரு ஆடு குர்பான் கொடுத்து விட்டேன்..பணம் ஒரு புறம் செலவு ஆனாலும் என் குழந்தை காலில் கட்டு போடும் போதும் அதை பிரிக்கும் போதும் அந்த ஒரு மாதத்து குழந்தை கத்துவது,அழுவது என் ஈரக்குலையை சுக்கு நூறாய் கிழித்து போட்டது அந்த நேரங்களில் மனைவி மீது வெறுப்பு தலைக்கு மேல் வரும்,இருந்தாலும் என் குழந்தையை பெற்று கொடுத்திருக்கிறாள் என்ற ஒரே காரணத்திற்க்காக வந்த கோபத்தை என் காலுக்கு கீழ் போட்டு விட்டு நகர்வேன் ஆனால் ஒன்று அந்த ஆண்டவன் தான் என் மனைவிக்கு நல்ல புத்தியை கொடுக்க வேண்டும்..

காலம் அவளை மாற்றும் என்ற நம்பிக்கையில் தான் என் வாழ்க்கை செல்கிறது..என்ன தான் அன்பு,பாசம்னு நாம்ம வாயாலே சொல்லிக்கிட்டு திரிந்தாலும் பணம் இல்லைன்னா கூட இருக்கிறவங்களே மதிக்க மாட்டாங்க உண்மையில பணம் இல்லைன்னா வாழ்க்கை இல்லை அந்த பாழாய் போன பணத்துக்காக பிடிக்காத நாடு,பிடிக்காத உணவு,பிடிக்காத வேலை,பிடிக்காத இடம் தேடி மீண்டும் வந்தேன்..வருடமும் போனது வயசும் போய் தலையில் நரையும் வந்தது கூடவே ஒண்ணு ரெண்டு வியாதியும் வந்தது..சின்னதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு வலிகளை கொடுத்த அல்சர் இப்பவெல்லாம் ரொம்பவும் வலி கொடுத்தது..தயிர்,மோர்,பால்,நெய் தவிர பேருக்கு கூட சாம்பார்,குழம்பு வகைகளை தொட கூட முடியாத நிலைமைக்கு வாழ்க்கை தள்ளியது..சாப்பிடும் காலத்தில் பணத்துக்காக இங்கே வந்தோம் இன்னும் ஒரு விசாவோ,ரெண்டு விசாவோ அடித்து விட்டு ஊருக்கு போகும் போது இந்த உடம்பில் உயிர் இருக்கிறதோ,இல்லையோ தெரியவில்லை..ஒரு நாள் நண்பன் மற்ற அலுவலக நண்பர்களுடன் நலாஸ் ஆப்பக் கடை அழைத்து சென்றான் நிறைய அசைவ வகைகள் அந்த ஹோட்டலில் இருந்தாலும் என் உடம்புக்கு ஒத்து வராது என்று ரெண்டு ஆப்பமும்-தேங்காய் பாலும் ஆர்டர் செய்தேன்..நிறைய நண்பர்கள் மற்றும் ஒரு பெண் தோழியும் கூட இருந்ததால் ஆப்பத்தின் மீது ஒரு நான்கு ஸ்பூன் தேங்காய் பால் ஊத்தி பேருக்கு சாப்பிட்டேன் மீதமுள்ள தேங்காய் பாலை ஸ்பூன் மூலம் இருபது நிமிடம் நாகரீகம் கருதி குடிக்க வேண்டியதாயிற்று ஊரில் வேலை செய்யும் நாட்களில் அம்மா அப்பப்ப திட்டினாலும் என் மேல் பாசம் அதிகம் சிறு வயதிலிருந்தே காரம் எனக்கு பிடிக்காது தேங்காய் பால்,ஆப்பம் என்றால் கொள்ளை உசுரு ஒரு நாள் ஒரு சட்டி தேங்காய் பாலில் ஒரு நாலு,அஞ்சு ஆப்பம் போட்டு குழைத்து குடித்து அடிச்ச கதையை இப்போதெல்லாம் நினைத்து பார்த்து மனசு சந்தோசப் பட்டு கொள்கிறது..

மனுசனா பொறந்தா கஷ்டம்,நஷ்டம் இருக்க தான் செய்யும் மத்தவனை விட அந்த ஆண்டவன் நமக்கு கஷ்டத்தை கம்மியா கொடுத்திருக்கான்னு நினைச்சுகிட்டு நம்ம வாழ்க்கையில நடந்த நல்ல நிகழ்வுகளை அசை போட்டுக்கிட்டு வாழ்ந்தா தான் வாழுற வாழ்க்கை சாகுற வரைக்கும் என்ன வாழ்க்கைடா என்று எண்ணாமல் வாழுறதுக்கு உதவும்..

வாழ்க்கை நதி போல..ஓடி கொண்டே இருக்கும்..உடலில் உயிருக்கும் வரை !!

❑



● தி. கலையரசி.

அப்பா
அரைகுறையாக உபயோகித்துத்
தூக்கி எறிந்திருந்த டைரி
அது.

அவர் எழுதாத பக்கங்களை
சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறாள்
அம்மா.

வாயில் நுழையாத
உணவு பெயர்களின் செய்முறைகளை
கட்டுரையாக்கி இருக்கிறாள்.

நேர்ப்புள்ளி சந்துப்புள்ளி
என்று எழுதி
சிக்கலான கோலங்களும்
புள்ளியில்லாத ரங்கோலிகளும்
ஓவியமாகி வழிகின்றன.

இஸ்திரி அட்டவணைக்குள்
அப்பாவின் வேட்டி சட்டைகளையும்
என் சுடிதார் துணிகளையும்
அடுக்கி வைத்திருக்கிறாள்.

பால் கணக்கும் மளிகை பாக்கியும்
தெள்ளத்தெளிவான கையெழுத்தில்
மிளிர்கின்றன.

பக்கத்து வீட்டு சந்திராவோடு
கொடுத்தல் வாங்கல் தொகையும்
அதில் அடங்கும்.

விரல் ஒடிய எழுதி முடித்த
‘ ஓம் முருகா’ வாசகம்
விடாது ஒலிக்கிறது
சில தாள்களில்.

ஒன்றே ஒன்று மட்டும்
எவ்வளவு யோசித்தும்
ஏன் என்று விளங்கவே இல்லை
கடைசி வரை.

நடுநடுவே
ஒரு குழந்தையைப் போல்
வட்ட வட்டமாக
மிக அழுத்தமாக
காகிதம் கிழியும் அளவிற்குக்
கிறுக்கி வைத்திருக்கிறாள்
அம்மா.

❑

● சங்கர சுப்பிரமணியன்

# தொலைந்து போனதை மறந்துமே!

அங்கும் இங்கும் அலைந்து திரிந்து
எங்கெங்கோ ஓடித் தேடினேன்
காடு மேடு கழனி என்று நானும்
காணும் இடமெங்கும் தேடினேன்

பூதக்கண்ணாடு கொண்டு விடாது
பொதுவெளி எங்கும் தேடினேன்
இருந்தால்தானே கிடைப்பதற்கென
எத்தனையோபேர் சொன்னாலும்

கும்பிடச் செல்லும் இடத்திலெல்லாம்
காசிருப்பவர் மட்டுமே தெரிகின்றார்
இனமென ஆசையோடு சென்றாலவன்
நீ வேறு நான் வேறென்று சொல்கிறான்

கற்கவேண்டி அவாவுடன் விரும்பினால்
கற்கவிடாதே பலவழிகளில் தடுக்கிறார்
விலைவைத்து விற்று பழகிப் போனதால்
கல்விக்கும் ஒரு விலை வைத்தார் அவர்

மேடேயில் நின்று வாய்கிழிய பேசுவார்
அண்ணன் என்பார் தங்கை என்பார்
அனைவரும் என் சொந்தமென கூவுவார்
மனிதம் தொலைந்து போனதை மறந்துமே!

❑

● வளவ. துரையன்

# விலை

இங்கே எல்லாவற்றுக்கும்
ஒரு விலை இருக்கிறது.
எல்லாமே தரத்திற்கேற்றபடி.

எதுதரம் என்பதைத்தான்
யாராலும் சொல்லமுடியவில்லை.


ஓரிடத்தில் முதலிடமும்
மற்றோரிடத்தில் ஐந்தாமிடமும்
அடையும்போதுதான்
விலையின் ஞாபகம் வருகிறது.

பாலியல் தொழிலாளி கூட
பட்டவர்த்தனமாய்
விலைசொல்லி
நியாயமாய் இருக்கையில்
படித்தவர் படுத்தும்பாடு
பரிதாபமாய் இருக்கிறது.

படைப்பும் கொடுத்துப்
பணமும் அளித்துப்
பதிப்பகத்திடம் மாட்டிக்கொண்ட
படைப்பாளிக்கும்
விலை இருக்கிறது.

❑

● கவிஞர். த. மதி




# “ஊசி இலையும் உன்னதம் பெறும் காலம்“

இளவயதிலேயே பன்முக ஆளுமை நிறைந்த ஈழத்துப்பித்தன் எனும் புனை பெயர் கொண்ட இணுவையூர் மயூரனின் “ஊசி இலையும் உன்னதம் பெறும் காலம்“ எனும் கவிதைத் தொகுப்பில் வரும் நாற்பது கவிதைகளும் உண்மை நிகழ்வுதனை உறைக்கச் சொல்லும் ஏற்றமுறு கவிதைகளாகவே காணக்கூடியதாக உள்ளது. உறுதியுள்ளது பிழைக்கும். தக்கன பிழைக்கும் என்று பட்டனெச் சொல்லும் துணிச்சல்க்காரன். இந்தச் சந்ததி காணாத கிராமிய மணம் வீசும் கோலங்கள், சிறுவயதுக்கு மீண்டும் அழைத்துச் சென்று விடுகிறார். இதுவும் எம் தலைமுறையோடு தொலைத்தவையாகப் போகின்ற பழந்தமிழர் விளையாட்டுகள். புதிய விளையாட்டுகள் தெரியாத சோத்துக் கூட்டமென அடுத்த தலைமுறை பழிக்கும் நிலைக்கு ஆளாகிப் போனோமா என ஏக்கம் கொள்ள வைக்கிறார். கலங்கரை விளக்கில் தெளிவு பெறாதவரை தீர்வுமில்லை. விடிவுமில்லை. நூலகத்தை அழித்தாலும் தமிழர் மரபில் வந்த நுண்ணறிவை அழிக்க முடியுமா? எனக் கேட்கும் போது ஓர் ஆறுதல். அதில் ஒற்றைப் புத்தகத்தை வைத்த இடம் மறந்தாலே உள்ளம் பதைபதைக்கும். ஒட்டு மொத்தமும் எரிந்ததே எனும் வரிகள் உணர்வைச் சுடுகிறது. ஊரெனும் தலைப்பில் இணுவையூரின் புகழ் மணக்கிறது. எடுத்துக்காட்டுக்கு இணுவையூர். இப்படித்தான் எல்லா ஊரவர்க்கும் தமது ஊர்கள். யாழ்ப்பாணம் வந்து விட்டதா வெசாக் பண்டிகை. பண்பாட்டுச் சீரழிவு. பொங்கலில் வரும் ஊர்களின் சிறப்பு, பொங்கலைவிட சிறப்பு. மேல் நாட்டுக் குளிர் காலம் என்ன வாழ்க்கையிதுவில் குளிர்கிறது. உயிருள்ளவரை முள்ளிவாய்க்கால் பெருந்துயரம் கூடவே வரும். விசுவாமித்திரனின் தவத்தைக் குலைத்த மேனகையாளுக்கு, இணுவையூர் மயூரன் எம்மட்டும். கலைக்குமரனோடு அலையாடிய பொழுதுகள். மனம் வலிக்கிறது. கண்ணகையாளோடு

கவிஞனின் கடுங்கோபம். பழிகளின் மீது படி வைத்து நடக்கிறேன். வீழ்வேனென்று நினைத்தாயோ? பழிகளின் மீது படி வைத்து நடக்கும் கவிஞன். சீனிப்புளியடியின் புதினங்கள். பள்ளியில் வராத பாட்டெல்லாம் அங்கு மட்டும் வருவதன் மகத்துவம் தெரிகிறது. அது இன்றில்லாத வருத்தம். புதல்வி புராணத்தில், பாரதி போல் மாறிவிடும் கவிஞரின் மனவியல்புகளை அறிய முடிகிறது. பகல் நிலவு வதனக்காரி. தந்தவனே பறித்துக் கொள்ளும் பதின்மூன்று மாதச் சம்பளத்தில் கனவுகள் சிதைகிறது. ஓட்டைக் கூரைகளால் சிதையும் வீடுகளால் பொய்த்துப் போகட்டும் மழை என்கிறார். காணாமல் ஆக்கப்பட்டோர் அவலங்களின் வேதனை உயிரைப் பிழிகிறது. அணில் கடித்த நுங்கும், அம்பலவியும் ஒரு தனிச்சுவை தான். தாமரை இலைத் தண்ணீர் போல் ஒட்ட முடியாத வாழ்வு, யுத்த நிறுத்தம், நீளநடக்கின்றேனில்,, புதுவை இரத்தினதுரை, சு வில்வரெத்தினம் போன்றோரைக் கவிஞரில் காண்கிறேன். ஏற்றுமதியில் ஊர்த்தம்பி ஒருவனின் புலம்பல். செண்பகத்தின் குரலும் முடங்கிப் போகுமா என்கிறார். மனிதனைப் போலல்ல பறவைகள், விலங்குகள் அவை தம் நிலையிலிருந்து மாறுவதில்லை. என்பது எனது கணிப்பு. பசித்தாலும் புலி புல்லைத் தின்னாது. செண்பகத்தைத் தேசியப் பறவையாக தேர்ந்தெடுத்ததற்கான காரணம். அதனால் நெடுந்தூரம் பறக்க முடியாது. அது உள்ளூரிலேயே வாழக்கூடியது. புதுவையரின் கவிதையொன்றில் புலம் பெயராச் செண்பகம் என்பார். நாற்பது கவிதைகளையும் நயமுடன் படித்தேன். வியந்தேன். சிறுவயதில் புலம் பெயர்ந்து தமிழ் மொழியின் ஆற்றலை வளர்த்து இன்று உலகறிந்த கவிஞனாக, தன்மானம் மிக்க தமிழனாக நெஞ்சு நிமிர்த்தி நம்பிக்கையுடன் வளர்ந்து வரும் ஒரு பன்முகப் படைப்பாளி, இன்னும் பலவற்றைப் படைத்துப் புகழோடு வாழ்கவென வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன்.

❑

● அ. லில்லி ஏஞ்சல், திருக்கோவிலூர்

# காலங்கள் கடந்திடினும்

மூளையின்
மூலையில்
ஒட்டிக்கொண்டுதானே
உன்னில்நானும்
என்னில்நீயும்..
புறப்போரில்
பொருது வெல்லநினைக்கும்
நீ
அகப்போரில்
என்னிடம்
தோற்பதற் கென்றே
ஆயிரம் யுக்திகளை
வகுத்தவன்
முத்தச் சண்டையில்
என்மூச்சை நிறுத்தி
முழுவதுமாய் என்னை..
கொள்ளையடித்திடத்
துடிக்கும்
களவாணி..நீ!


❑

---

● க. புனிதன்

குருவிகளின் சப்தம்
கேட்டு படுத்திருக்கும்
ஆனந்த போகினி
தென்னை மரத்தடி
பூக்கள் உதிருவதை
வெறுமனே பார்த்திருக்கும்
மலை தொடரை
ரசித்திருக்கும்
விருந்தினர் வந்தால்
வாலாட்டி வாழ்த்துகள் சொல்லும்
ஜானி நாய்.

❑



# ஆண்மை - பெண்மை

நிறைந்த பௌர்ணமி நிலா வெளிச்சம்..

மொட்டை மாடியில், நிலாவைப் பார்த்தபடி கயிற்றுக் கட்டிலில் படுத்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் சஞ்சய்.

வெண்ணிலவை மறைத்து, தன் முகம் காட்டினாள் இனியா.

“நம்ம ரெண்டு பேரு அப்பா அம்மாவும் வந்தாச்சு. கீழ வாங்க.” என்றாள்.

“ஹும்ம்ம்,,”என்று பெருமூச்சுடன் எழுந்தான் சஞ்சய்.

“எனக்கு ரொம்ப பதட்டமா இருக்கு” என்று கூறினாள் இனியா.

இனியாவின் தோளை அணைத்துக் கொண்டு,

"நான் பார்த்துக்குறேன் மா" என்று கூட்டிச் சென்றான்.தன் தாயின் சாடலில் இருந்து இனியாவை எப்பொழுதும் அரணாக நின்று பாதுகாத்து வருகின்றான் சஞ்சய்.

இப்பொழுதும்..

இருவரும் கீழே சென்றனர். இருவரின் பெற்றோரும் சோபாக்களில் அமர்ந்து இருந்தனர்.

இனியாவின் பெற்றோர் முகத்தில் கலக்கமும் கவலையும். பெண்ணைப் பெற்றோருக்கே உரித்தானது என குத்திவிட்ட முத்திரையைப் போல அமர்ந்திருந்தனர்.

எதிரே சஞ்சயின் பெற்றோர். கோபமும் எரிச்சலும் புரண்டு ஓடியது அவர்கள் முகத்தில்.

"வாடா வா.. ரொம்ப பெரிய மனுஷன் ஆயிட்டியா? என் கிட்ட ஒரு வார்த்தை கூட கேட்காம, எவ்வளவு பெரிய முடிவு எடுத்திருக்க? எங்கிருந்தோ வந்த அவ பேச்சக் கேட்டு மயங்கிட்டியா?" என்று சாடினார் சஞ்சயின் தாய் காமாட்சி.

"ஒரு பொண்ணுகிட்ட ஒரு ஆண் மயங்குறது தானமா உலக நிமித்தம். அது தானே உலக நியதி. என்னப்பா,நான் சொல்றது சரிதானே?" என்று பதிலை தாய்க்குக் கொடுத்துவிட்டு, கேள்விக் கணையை தந்தையின் மீது தொடுத்தான் சஞ்சய்.

"ஆமாப்பா.. ஆமா..." என்று தலையாட்டினார் சஞ்சயின் தந்தை செல்வம்.

"என்ன??" என்று முறைத்தார் காமாட்சி.திருதிருவென முழித்து விட்டு அமைதியானார் செல்வம்.

"உனக்கு என்னடா குறைச்சல். எம்புள்ள ஆம்பள. உனக்கு ஆயிரம் பொண்ணு கிடைக்கும். இவள டைவர்ஸ் பண்ணிட்டு, வேற நல்ல பொண்ணா ஒரு குறையும் இல்லாதவளாப் பார்த்துக் கட்டி வைக்கிறேன். இந்த மலடிய தூக்கிப் போடு" என்று நெருப்புத் துண்டுகளாய் வார்த்தைகளை அள்ளி இறைத்தார் காமாட்சி.

இதயம் கனத்தது இனியாவின் பெற்றோருக்கு. தன் மகள் குழந்தை தரிக்க தகுதியற்றவள் என்று அறிந்த நாள் முதல் இடி சுமந்து வாழ்கின்றனர்.

தன் பெற்றோர் அவமானப் படுவதைக் கண்டு மனம் நொந்து போனாள் இனியா.

இனியாவின் தந்தை சந்திரன் அனாதை ஆசிரமத்தில் வளர்ந்தவர். தன் பெற்றோர் - மூதாதையர் பெயர் அறியாதவர். இனியாவின் தாய், தமிழ்ச்செல்வியைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர். அதனால் தன் மகளின் காதலுக்கும் தடையேதும் சொல்லாமல் ஒப்புக்கொண்டார்கள்.

சஞ்சய் - இனியாவிற்குத் திருமணமாகி ஐந்து வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லை. மருத்துவமனைப் பரிசோதனையில் இனியாவிற்குக் குழந்தை பெறும் பாக்கியம் இல்லை என தெரிந்ததால், சஞ்சயும் இனியாவும் அனாதை இல்லத்தில் இருந்து குழந்தையைத் தத்தெடுக்க முடிவு செய்தனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து விவாதம் செய்கின்றனர் சஞ்சயின் பெற்றோர்.

“என்னடா அமைதியா இருக்க?” என்று கேட்டார் காமாட்சி.

“அம்மா, எங்களுக்குக் குழந்தை பாக்கியம் இல்ல. நாங்க ரெண்டு பேரும் ஒரு மனசா எடுத்த முடிவுதான், தத்தெடுக்குற முடிவு.” என்றான்.

“ரெண்டு பேருக்கும் இல்லன்னு சொல்லாத. அவதான் மலடி. உனக்கு என்ன அழகு ராஜா நீ.” என்று பாய்ந்தார் காமாட்சி. “இனியாவத் திரும்ப திரும்ப மலடினு சொல்லாதீங்க” என்று கத்தினான் சஞ்சய்.

“ அமைதியா பேசுங்க” என்று இனியா சஞ்சயின் தோளைப் பிடித்தாள்.

“என்ன நாடகம் ஆடுரியா?. நீ கொடுக்கிற சாவியில தானே என் புள்ள இப்படி ஆடுறான். ஏன் என் புள்ள வாழ்க்கைய நாசம் பண்ற. அவன விட்டு வெலகிடு. அவன் அழகுக்கும் பர்சனாலிட்டிக்கும் பொன்னுங்க கியூவுல நிக்கிறாங்க.” என்று வார்த்தைகளை நெருப்பாகக் கொட்டிக் கொண்டே போனார் காமாட்சி.

தன் மகளை துன்புறுத்துவதைக் காண முடியாமல் கண்ணீர் சிந்தினர் இனியாவின் பெற்றோர்.

“இதுக்கு மேல ஒரு வார்த்தை இனியாவப் பத்திப் பேசாதீங்க.” என்று எச்சரித்தான் சஞ்சய்.

“நான் ஏன்டா பேசக் கூடாது. ஜான் பிள்ளையானாலும் ஆண் பிள்ளையப் பெத்தவடா நான் ..... இவ..”என்று மறுவார்த்தையை காமாட்சி விடுவிப்பதற்குள், சஞ்சய்,

“இனியா கிட்ட குறை இல்லம்மாாாாா.....என்கிட்ட தான்.” என்று உறக்க அழுத்திக் கத்தினான்.

வாயைப் பிளந்த வண்ணம் சிலை போல நின்றனர் சஞ்சயின் பெற்றோர். அதிர்ச்சியாய்ப் பார்த்தனர் இனியாவின் பெற்றோர்.

“என்னப்பா சொல்ற???!!!!???” என்று வாய் திறந்தார் சஞ்சயின் தந்தை.

“ஆமாப்பா..... எனக்குத்தான் குழந்தை கொடுக்கிற பாக்கியம் இல்ல. இப்ப சொல்லுங்க நான் இனியாவுக்கு டைவர்ஸ் கொடுக்கணுமா. இல்ல இனியா எனக்கு டைவர்ஸ் கொடுக்கணுமா.??” என்று கேட்டான்.

“மாப்பிள்ள சொல்றது உண்மையா??!!!” என்று தன் மகளைப் பார்த்துக் கேட்டார் சந்திரன்.

“ ஆம்” என்று தலையை அசைத்துக் கண்ணீர் சிந்தினாள் இனியா.

“ நீ பொய் சொல்ற சஞ்சய். உன் பொண்டாட்டியக் காப்பாத்தப் பொய் சொல்ற.!!” என்று கத்தினார் காமாட்சி.

“ இல்லம்மா..... இந்தாங்க.” என்று ஹாஸ்பிடல் ரிப்போர்ட்டைக் காட்டினான் சஞ்சய்.

“என்னய யாரும் தப்பாப் பேசக்கூடாதுனு இவ்வளவு நாளும் இனியா பலிய சுமந்தாம்மா.

போதும். அவ பட்ட கஷ்டம் எல்லாம்." என்றான்.வெடித்து முடித்த எரிமலையைப் போல பேச மொழி இல்லாமல் அமைதியாக அமர்ந்திருந்தார் காமாட்சி. ஆண் பிள்ளையைப் பெற்ற ஆணவம் உடைந்தது போல வெட்கித் தலைகவிழ்ந்து அமர்ந்திருந்தார்.

"அத்தை" என்று காமாட்சியின் கையைப் பிடித்து இனியா பேசத் துவங்கினாள், "ஒரு குழந்தைக்குத் தந்தையானா தான் ஆண்மகன்னு அர்த்தம் இல்ல. ஒரு குழந்தைக்குத் தாயானாத் தான் பெண்ணுன்னும் அர்த்தமில்ல. எந்த சூழ்நிலையிலும் கற்புநெறி தவறாத பிள்ளையா தான் உங்க மகன வளர்த்திருக்கீங்க. அதுதான் ஆண்மை. அதுவேதான் பெண்ணுக்கும் பொருந்தும். சஞ்சய்யோட குறைய நான் பெருசா நினைக்கல. என் மேல உயிரா அன்பா இருக்காங்க. எந்த இடத்திலேயும் யார்கிட்டயும் என்னைய விட்டுக்கொடுக்காம அரணா இருக்காங்க. எனக்கு அந்த அன்புதான் பெருசு. நாங்க எடுத்த இந்த முடிவுக்கு சப்போர்ட் பண்ணுங்க. ப்ளீஸ்." என்றாள்.

இனியாவின் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் சிந்தினார் காமாட்சி. இனியாவின் பெற்றோரும் சேர்ந்து காமாட்சியை சமாதானம் செய்தனர்.

இரவு உணவை சேர்ந்து உண்டனர்.

"என்ன குழந்தை மாப்பிள்ளை, ஆணா பெண்ணா.?" என்று கேட்டார் இனியாவின் தாய்.

"என்னப்பா வயசு?" என்று கேட்டார் சஞ்சயின் தந்தை.

இனியாவின் தந்தையும், சஞ்சயின் தாயும் தங்கள் கேள்வியைக் கேட்க வாய் திறப்பதற்குள்,

"சஸ்பென்ஸ் அண்ட் சர்ப்ரைஸ். நாளைக்குக் காலையில பத்து மணிக்கு உங்களுக்கு எல்லா கேள்விக்கும் பதில் கிடைக்கும்." என்றான் சஞ்சய்.

எல்லோரும் பெருமூச்சுடன் உறங்கச் சென்றனர்.

விடிந்தது...காலை உணவை உண்டு விட்டு, இனியாவும் சஞ்சயும் பாரதியார் இல்லத்திற்குச் சென்றனர்.

இருவரது பெற்றோரும் வீட்டை அலங்காரம் செய்யத் துவங்கினர். காமாட்சியின் முகம் வாட்டமாக இருந்தது. அதை உணர்ந்த தமிழ்ச்செல்வி, "அண்ணி.. ஏன் இன்னும் வருத்தமா இருக்கீங்க. நம்ம புள்ளைங்க சந்தோஷம் தான் நமக்கு முக்கியம். அவங்க முடிவுக்கு நாம சப்போர்ட் பண்றது தான் சரி." என்றார்.

"என்னய மன்னிச்சுடுங்க அண்ணி. இனியாவ.... நான்...." என்று அழ ஆரம்பித்தார்.

"பரவாயில்ல அண்ணி..அத இனியாவே பெருசா எடுத்துக்கல. இல்லன்னா என் பொண்ணே நேத்து உங்க கிட்ட சமாதானமாக பேசி இருப்பாளா?" என்று கூறினார் தமிழ்ச்செல்வி.

"சரி சரி.. ரெண்டு பேரும் பட்டுப்புடவை கட்டி ரெடி ஆகுங்க." என்று கூறிக்கொண்டே பட்டு வேட்டி சட்டையோடு வந்தனர் இரு தந்தைகளும்.

அரை மணி நேரம் கழிந்தது...

இரு பெற்றோர்களும் பலபலக்கும் உடையோடு வராண்டாவில் அமர்ந்து காத்திருந்தனர்.

கார் ஹாரன் சத்தம் கேட்டது. வாட்ச்மேன் மணி கேட்டைத் திறந்தார்.

இரு பெற்றோர்களும் ஆரத்தித் தட்டோடு எழுந்து நின்றனர்.

டிரைவர், பின்சீட்டின் கதவுகளைத் திறக்க, சஞ்சயும் இனியாவும் இறங்கினர்.

அவர்கள் இருவரையும் கண்டு,ஆச்சரியத்தோடும் அதிர்ச்சியோடும் மகிழ்ச்சியோடும் எந்த உணர்வை காட்டுவது என்று புரியாமல் திணறிப் போயினர் இருவரின் பெற்றோரும்.

சஞ்சயின் கையில் ஆறு மாதம் ஆன பெண் குழந்தையும், இனியாவின் கையில் ஆறு மாதம் ஆன ஆண் குழந்தையும் இருந்தனர். மகிழ்ச்சியோடு ஆரத்தி எடுத்தனர் தமிழ்ச் செல்வியும் காமாட்சியும்.

வலது காலை முன் வைத்து சஞ்சயும் இனியாவும் வீட்டின் உள்ளே சென்றனர். அலங்கரிக்கப்பட்ட வீட்டைக் கண்டு மகிழ்ந்தனர்.

இருவரின் பெற்றோரும் உள்ளே சென்று குழந்தைகளை மாறி மாறி எடுத்துக்கொண்டு கொண்டாடினர்.

“என்ன பேரு பா செலக்ட் பண்ணியிருக்க?” என்று செல்வம் கேட்டார்.

“ சரண் மற்றும் சஹானா. இவங்க ரெண்டு பேருக்கும் ஃபேமிலி நேம் ‘சந்திரன்’னு வைக்க முடிவு பண்ணி இருக்கோம் என்றான் சஞ்சய்.

இனியாவின் தந்தைக்கு மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது.

“என் மூதாதையர் பெயரே தெரியாத என் பெயரயா வைக்கப் போறீங்க!!!” என்று கேட்டார்.

“மூதாதையர் இல்லன்னா என்ன மாமா. என் பிள்ளைகளுக்கு நீங்கதான் மூதாதையர்.” என்று தோளோடு அணைத்துக் கொண்டான் சஞ்சய்.

“நல்ல விஷயம் தான் சஞ்சய்!!” என்றார் செல்வம்.

பெருமையோடு கண் கலங்கினார் தமிழ்ச்செல்வி.

“சரி சரி. வாங்க. குழந்தைகளக் குளிப்பாட்டி சாப்பாடு ஊட்டலாம்.” என்று அனைவரையும் அழைத்தார் காமாட்சி.

இரு தாத்தா பாட்டிகளும் தன் பேரக் குழந்தைகளை மாறி மாறி கவனித்துக் கொண்டனர்.

சஞ்சய் - இனியாவிற்கு மனம் நிறைவானது, வாழ்க்கையும் நிறைவானது!!!.

❑

● தேடன்

# ராஜாஜி காய்கறி சந்தை!

*ராஜாஜி திறந்து வைத்ததோ,*
*என்னவோ??*
*இன்னமும் அப்படியே இருக்கிறது!*
*தார்ப் பாய் பந்தல்,*
*பழங்குகையென வழிகள்*
*தரையெங்கும் மணல் அழுக்கு*
*எங்களூரின் காய்கறி சந்தை!*

*நுழையும் போதே இடமாகப்*
*பெரியவர் வாழையிலையைத் துண்டுப்*
*போடுகிறார்,*
*வாழையடி வாழையாக*
*அங்கேயே அமர்ந்தவராய்!*

*வாய் சிவந்த*
*வெற்றிலை பாக்கு வியாபாரி*
*கூடைக்குப் பின் அலுத்து அலைக்கழிக்கிறார்.*
*நமக்கும் சிவக்கிறது!*

*மூட்டை சுமந்து போகும்*
*கூலிகள் இடும் சத்தம்,*
*கம்பீரமாக ஓடுகிறது*
*ஓயாத சுமையோடு!*

*வாழைப்பழம் விற்பவர்*
*வாய்விட்டுக் கூவுகிறார்*
*ஒரு டசன் முப்பதிற்கென*
*நாற்பதிற்கு விற்கும்*
*கூவிடாத கடையில் கூட்ட நெரிசல்!*

*வெங்காய வியாபாரி*
*தொங்கும் சணல் கயிற்றைப் பிடித்தபடியே*
*அமர்ந்து*
*முன்னும் பின்னும் எதற்கோ*
*ஆடுகிறார்; ராகமாய் கூவுகிறார்!*


*தக்காளி வியாபாரி*
*பெங்களூரையும் சேர்த்து விற்கிறார்!*
*கருவேப்பிலை கொத்தமல்லி*
*சேர்ந்து தரும் வாசம் நிற்கவைக்கும்*
*(எப்)போதும் ஐந்து ரூபாய்க்கு!*

*கேரட் பீன்ஸ் நூக்கல்*
*உருளை முள்ளங்கி பீட்ரூட்*
*மாங்காய் முருங்கை கத்திரி*
*வரிசைப் படுத்துகிறான்*
*பள்ளிக் கூட வரிசையில் தப்பியவன்!*

*வெளிவாசல் பூ விற்கும் குடும்பம்*
*ஒரே சாயலில் சந்தை எங்கும்*
*கதம்பம் ஒரு பக்கம்*
*சிதறலென!*

*இம்மனிதர்கள் சந்தையின்*
*அடையாளமா?*
*சந்தை இம்மனிதர்களின்*
*அடையாளமா?*
*என்ற கோழி முட்டை கேள்வியோடு*
*மொத்தமாய் சந்தையைப் பொறுக்கி*
*குவித்து வீடு திரும்பும் போது*
*எதையோ மறந்துவிட்டோமே*
*என்ற உணர்வே இதுவரையிலும்!*

❑



● மா. காளிதாஸ்


அவ்வளவு உவப்பான புன்னகையை
இனி உன்னிடம் எதிர்பார்க்க முடியாது.
உண்மையான கண்ணீரை
ஒரு துளி கூட
இனி விரயமாக்கப் போவதில்லை. கூர்மையான
பார்வையிலிருந்து கசியும் அர்த்தமுள்ள
செய்திக்காகக்
காத்திருப்பது வீணே.
பற்றுதலின் மூலம் நானிருக்கிறேன் என
வெளிப்படுத்தும் விரல்கள்
இறுக மூடியுள்ளன.

கதவிடுக்கு வழியாகத் தூக்கிப் போட்ட
பதில்சொல்
பெரும் வடிவெடுத்துக்
குரல்வளையை நெரிக்கிறது.

தப்பிக்கும் நோக்கில் எக்கி எக்கி
அனுப்பத் தயங்கிய குறுஞ்செய்தியைக் கண்முன்
நீட்டுகிறேன்.

திடீர்த் தாக்குதலில் நிலைகுலைந்து கொலை
மற்றும் தற்கொலை எண்ணத்தைக் கைவிடுகிறது
மீட்கப்பட்ட நம் பேரன்பு. ❑

● மகிழ்ச்சிஆ.ராம்குமார்



# கருப்புசாமியும் நானும்

யப்போ.. என்னடா கத்துர சொல்லு.ஆடு குட்டி போட்டுருக்குப்பா வா. சரி, போ வர.சீக்கிரம் வாப்போ..ம்.. கெடா குட்டி போட்டுருக்கு.சரி சும்மா வாடா பேசிகிட்டே.

அப்பா நா அத எப்படி கூப்புடனும்.அத வா போ.இந்தேரினு கத்துனா போதுடா.நீ லூசுப்பா, உன்ன யாராவது வா போ இந்தேரினு கூப்டா திரும்பி பேசுவியா?..

டேய் அது ஆடுடா அதுக்கு என்ன தெரியும்.நீ தான சொன்ன ஒருத்தருக்கு எதாவது தெரிலனா அத நமக்கு சாதகமா வச்சி யாமாத்தக் கூடாதுனு.அத, நா ஆட்டுக்கு பேர் வக்கப் போர..ம்..

எதோ பன்னு.என்ன பேர்டா..இருப்பா யோசிக்கனும்ல.பெரிய விஞ்ஞானி இவுரு.யப்போ அதவுட பெரிய வேலப்பா இது. ம்..சொல்லுடா பெரிய மனுசா.யப்போ, கருப்பு சாமி எப்படி இருக்கு பேரு.அது நம்ம குடியசாமிபேருடா.

இருக்கட்டுப்பா.பெருசானா சாமிக்கி வெட்டிப்புடுவ அதா இந்த பேரு வச்ச.இப்ப இத குடியசாமிக்கு வெட்டுனா சாமியவே வெட்ர மாதிரி தான.சரி போ..கருப்புசாமிய பாத்துக்ரது தா என் வேல..டேய்,பள்ளிக் கூடம் அங்க எவ போவாப்பா இப்ப அஞ்சாவுதுக்கு எதோ பெரிய பரீட்சையா அதா இனி நா போகல..டேய் போய் படிடா..

பள்ளிக்கூடத்துக்கு போடா.. சில நாள் பள்ளிக்கூடமும் கருப்புசாமியுமாக வாழ்க்கைய கழிச்சா..என்ன யோசிச்சானோ தெரயல..யப்போ கருப்புசாமிய சாமிக்கு வேன்டிவுடாதப்பா அவ நம்பக்கூடவே இருக்கட்டும்..சரிடா..கொஞ்ச நாள் கருப்புசாமி வளந்துட்டா. எப்படி இவ வளந்த..யப்பாகருப்புசாமி வளந்துட்டா நா மட்டும் ஏ வளர்ல.டேய் அது ஆடுடா.யப்போய் ஆடு சொல்லாதப்பா சரி,கருப்புசாமிலா ஒரு வருசத்துல பெரியாள வளந்துடுவான்டா. அவங்க சனம்லா அப்படிதா..ம்..நா எப்ப வளர்வ..வுடுப்பா வளந்தவல்லா என்ன செஞ்சு கிழிச்சா..போடா போய் சாப்ட்டு..கருப்புசாமிக்கு புள்ளப் போடுனு சொல்லிட்டு அப்பா காட்டுக்கு போய்ட்டாரு.

ரெண்டு நாள்ல உடம்பு சரியில்லாம ஆயிடிச்சு.எனக்கு பேச்சு இல்ல..கண்ணத்தொரக்க முடியல..எங்கம்மாவும் அப்பாவும் ஆஸ்பத்திக்கும் கோயிலுக்கும் அளஞ்சு ஓய்ஞ்சு..குடியசாமி கோவிலுக்கு போய் கிடா வெட்டிரனு வேன்டிக்கிட்டு வந்தாங்க.கடைசி ஆஸ்பத்திரிக்கு அலைஞ்சு ஒய்ஞ்சு போய்டாங்க..

ஒரு வேலயா சரியாச்சு..கொஞ்சு நாள் கழிச்சு எனக்கு காது குத்த எங்க மாமா,பங்காளிங்க நாங்க எல்லாரும் போனோ..கூட கருப்புசாமியவும் கூபுட்டு போன.எனக்கு அப்ப தெரியாது.அது நடக்கும்னு.அந்த கொடும நடக்கும்னு..எனக்கு மாலைப் போட்ட மாதிரி அவனுக்கும் போட்டாங்க..நானும் அவனும் சந்தோசத்துல இருந்தோ..

எனக்கு காது குத்துனாங்க..அவனுக்கு பொங்க சோறு வச்சி பொட்டு வச்சாங்க.. அப்ப தெரியாது அது தா எனக்கும் அவனுக்குமான கடைசி சந்திப்புனு..அவ போவ மறுத்தும்..வழுக்கட்டாயமா இழுத்திப்போனாங்க..என்ன எங்கப்பா இழுத்து புடிச்சுகிட்டாரு.

நான் கத்த கத்த கருப்புசாமி கதற கதற அவன வெட்டி துண்டாக்கிட்டாங்க..கொஞ்ச நேரத்துல கொழம்பாச்சு..கறியும் சோறுமா வயித்துக்குள்ள போச்சு..எங்க குடியசாமி பாத்துக்கிட்டுதா இருந்துது..

கருப்புசாமி சாவுரத கருப்புசாமி பாத்துச்சு கடைசி வர ஒன்னு பன்ன முடியல.இந்த மனுசனுவ செயல..நானும் எங்க குடியசாமியும் கறிச்சோத்துக்கு பின்பு தனிமைப்படுத்தப்பட்டோம்..

❑

கட்டுரை



● நேசமுடன் ஈசு

# "மறைந்து கொண்டிருக்கும் மடல்கள்" "மழைக்கு நன்றி மடல்"

கீழ் நோக்கிப் பெய்யும் நீ மட்டும் இல்லை என்றால் உலகில் மேல்நோக்கி எதுவும் வராது. வானத்திலிருந்து கீழ்நோக்கிப் பெய்யும் மழையால் தான் உலகத்தில் உள்ள உயிர்கள் மேல் நோக்கி வளர்கிறது. இயற்கையை மனிதர்கள் அழித்தபோது பொறுத்து பொறுத்து பார்த்த இயற்கை, மனிதர்களை அழிக்க வரும் இந்த கொரோனா காலகட்டத்தில் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் எனும் பொன் மொழிக்கேற்ப பூமியானது எவ்வளவு நீரை நீராவியாக வானத்துக்கு அனுப்புகிறதோ அவ்வளவு மழையை பூமி பெறுகிறது. "மழையே இந்த பூமி பிள்ளைக்கு நீ ஊட்டும் தாய்ப் பால் மழை" என்கிறார் கவிஞர் நேசமுடன் ஈசு. உயிரியல் வன ஆய்வாளர் மணி அவர்கள் குறிப்பிடும் பொழுது "ஒரு புலி உள்ள காடு செம்மையான சிறப்பான காடு" என்கிறார். எப்படி என அவர் மேலும் விளக்கும் போது "ஒரு காட்டில் புலி இருந்தால் அங்கு அதிகமான மான்கள் இருக்கக்கூடும், மான்கள் அதிகமாக இருந்தால் அங்கு புற்கள் அதிகமாக இருக்கும்" என்பார் மணி அவர்கள். அவரின் முடியும் இடத்திலிருந்து நான் எனது கருத்தை தொடங்குகிறேன். மரங்கள் செழிப்பாக வளர அங்கு மழையின் வாஞ்சை தேவைப்படுகிறது. ஒரு குழந்தைக்கு தாய் எவ்வாறு தலை முதல் பாதம் வரை தடவி கொடுத்து வளர்க்கிறார்களோ அது போலவே மழையும் பயிர்களை, பூக்களை, செடிகளை, மரங்களை, ஏன் உலக உயிர்களையுமே தலை முதல் தடவி வேர் வரை சென்று அவர்களின் உயிரோடு உறவாடுகிறது. மழையே உனக்கு நன்றி சொல்கிறேன்.

ஐம்பூதங்களால் ஆனது இவ்வுலகம் என்பார்கள். உலகத்தின் ஐம்பூதங்களோடு உள்ள தொடர்புக்கு நான் நன்றி நவில்கிறேன். தலைகீழாக தாங்கிப் பிடித்தாலும் நேராகவே நின்று எரியும் நெருப்பை போன்றது மழையே உன் குணம். நாம் நீரை எவ்வளவு மாசுபடுத்தனாலும் எவ்வளவு கேடு செய்தாலும் அந்த நீரானது ஆவியாகி வானத்திலிருந்து மழையாக பொழியும் போது நாம் எந்நீரை தந்தாலும் நன்னீரை மட்டுமே நல்கும் இளநீராக தரும் தென்னையைப் போல நான் உன்னை பார்க்கிறேன் மழையே. உனக்கு நன்றி.

மழை நீரின் அளவு உலகில் குறைந்து கொண்டே வருவதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. மழையே மனிதர்களை மன்னிப்பாயாக! மழையை நாம் புரிந்துகொள்ள அவரவர்கள்அவரவரின்

குடியிருப்புகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் அளவீடுகளை எடுத்துப் பார்த்தோமானால் நன்கு புரியும். நான் வாழும் உடுமலை பகுதியானது நீர் வளமும் நில வளமும் மிக்கது. அதற்குக் காரணம் மழையே உன்னைத் ஏற்று தேக்குகின்ற திருமூர்த்தி அணை அமராவதி அணை மற்றும் பத்தாயிரம் ஏக்கர் அளவுக்கு ஏழு பெரும் குளங்களை கொண்ட எம் பகுதியில் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஆழ்துளை கிணறுகளில் 100 அடியில் தண்ணீர் கிடைத்தது. இப்பொழுது எழுநூறு அடி முதல் ஆயிரம் அடி வரை சென்றாலும் பீச்சியடிக்கும் தண்ணீர் இல்லை சில இடங்களில் ஈரப்பதம் கிடைக்கிறது அதன்மூலமே அன்றாட தேவைக்கான இரண்டாயிரம் லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. நீர்வளம் நிலவளம் மிக்க அணைகளும் குளங்களும் எண்ணற்றவை நிரம்பிய என்னுடைய பகுதியிலேயே இந்த நிலை என்றால் வறட்சியான இடங்களைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். உடுமலையை தாண்டிய வறட்சியான பகுதிகளில் ஆயிரம் அடி நீர் தோண்டினாலும் தண்ணீர் வராமல் இருப்பதை கிராமத்து சொலவடை யாக "பணமெல்லாம் புகையா போச்சு" என்று சொல்வார்கள். இதற்கு காரணம் மழையே! ஆதலால் உனக்கு நன்றி நவில்கிறேன்.

உன் நன்றி மறந்து உன்னை சேகரிக்க மறந்ததே இந்நிலைக்கு காரணம்.

காற்றிலும் மழையே உனது பங்களிப்புக்கு நன்றி சொல்லியே ஆக வேண்டும். வறண்ட பகுதிகளில் அனல் காற்று வீசுவதும் செழிப்பான பகுதிகளில் தென்றல் தவழ்ந்து வர காரணம் உனது வருகையே! மழை நீரை நாம் பாராட்டி சீராட்டி பெற்ற பிள்ளைகளை போல் பொத்தி பொத்தி சேமித்தால் அது நம்மை முதியோர் அல்லது அனாதை இல்லங்களில் சேர்க்கும் பிள்ளைகளை போல அனாதையாக விடாமல் நம்மை செழிப்பாக பின்னாளில் காப்பாற்றும்.

ஆகாயத்தில் உன்பணிக்கும் உள்ள தொடர்புக்கும் நன்றி மழையே! வானத்தை வெறும் கண்களால் சற்று உற்றுப்பாருங்கள். என்ன தெரிகிறது எதுவும் தெரியவில்லையா? சூரியக்கதிர்கள் குடிசை வீட்டின் ஓட்டை பகுதியில் விழும் கதிரவனின் ஒளிக்கீற்றில் நம்வீட்டின் சாளரப்பகுதியில் அல்லது மரக் கிளைகளின் இலைகளுக்கு இடையில் தரை தொடும் சூரியக் கதிர்களை உற்றுப் பாருங்கள் ஒன்று புரியும். ஒளிக்கீற்றில் எண்ணற்ற தூசுகளும் வாயுக்களும் மிதப்பதை காண்பீர்கள். நமது வீட்டுத் தரையை துடைக்கிறோம். வாகனங்களை கழுவுகிறோம். வீட்டுக்கு வெள்ளையடிப்பது அல்லது வண்ணம் அடிக்கிறோம். ஆனால் வானத்தின் குப்பைகள் தூசுக்கள் பறப்பதை யார் சுத்தம் செய்வார்கள். பரந்து விரிந்த அதை எவ்வளவுதான் செலவு செய்தாலும் செய்யவே முடியாத அந்தப் பணியைபத்து பைசா செலவின்றி தூய வெள்ளைகாகிதமாய் வானத்தை மாற்றுவது மழையே நீ தான் உனக்கு நெஞ்சம் நிறைந்த நன்றி.

நிலப் பகுதிகளில் நீ செய்யும் செயல்களுக்கு நன்றி. இருபது வருடங்களுக்கு முன்னால் கிணற்று பாசனமும் நீர்வளமும் இல்லாமலே தென்னை விவசாயம் செழித்து இருந்தது. எங்கும் தமிழகத்தின் தேவைக்காக மட்டுமின்றி பிற மாநிலங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வதாக இருந்தது. மழையே உனது பங்களிப்புதான். ஆனால் இப்போதைய இந்நிலை மாறி தென்னை மரங்கள் மனிதர்களின் இன்றைய மன நிலையைப் போல சுயநலவாதிகளாய் நன்றிகளை மறந்ததால் கண்ணகி எரித்த மதுரையைப் போல இன்றைய காலகட்டத்தில் தென்னை மரங்கள் தன் சிறகுகளை எல்லாம் உதிர்த்து எரிந்து போய் இன்றைய மனிதர்களின் சமூக இடைவெளியை போல தனித்தனியாக நட்டுவைத்த குச்சிகளை போல அனாதைகளாக

நிற்பதற்கு காரணம் நாம் நன்றி மறந்தது தான். தங்கத்தில் கூண்டு ஆனாலும் அதில் தங்குவது கிளியின் முடிவுதான் என்பது போல தங்கத்தில் கூண்டு ஆனாலும் கிளிக்கு சிறை என்பது போல நம் நட்பு வளர்க்கும் செடிகளுக்கு நாம் சுத்திகரிப்பு தண்ணீர் சத்துக்கள் மிகுந்த தண்ணீர் செயற்கை உரங்கள் என ஊட்டி ஊட்டி வளர்த்தாலும் மழை நீரைப் போல ஊட்டச்சத்துக்களை உயிரின் தன்மையை ஒரு தாயின் நேசத்தை நம்மால் தர இயலாது. ஏனென்றால் அதுதான் மழை. அதுவே மழை.


முகிலினங்கள் அலைகிறதே முகவரிகள் தொலைந்தனவோ முகவரிகள் தொலைந்ததனால் அழுதிடுமோ அது மழையோ?! என்ற வைரமுத்துவின் வரிகளுக்கு இன்று வலிகளும் அதிகம். முகிலினங்கள் அலைகிறதே நாம் தொலைத்த நீர்நிலைகளின் முகவரிகளைத்தேடி அழுது அழுது கண்ணீர் வற்றி மழை இப்போது காணாமல் போய்விட்டது. நாம் நீர் நிலைகளை எல்லாம் கானல் நீராக்கி சென்னையில் உள்ள ஏரிகளில் எல்லாம் நெல் நடவு செய்த இடத்தில் கல் நடவு செய்யப்பட்டது. ஏரிகள் எல்லாம் ஏரியாக்கள் ஆனது. தொலைந்த தன் இடத்தை தேடி மழை ஆனந்தம் அடைந்த நேரம் நாம் அனைவரும் அழுது இருந்தோம் அங்கு கட்டிய வீடுகளின் மொட்டை மாடியில் நின்று..

இதற்காக எனது ஒரு கவிதையை இங்கே நன்றியாய் நவிழ்ந்து மழையே உன் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

*வளரச் செய்யும் வரம்*
பூமி பிள்ளைக்கு வானம் ஊட்டும் தாய்ப்பால்
வானத்தையும் பூமியையும்
சேர்த்து நெய்ய சேராமல் வரும்
ஒற்றை
நூலிழைகள்
ஆகாயத்தில்
இருக்கும்
அழுக்குகளை வழித்தெடுக்கும் துப்புரவு தூயவன்
வாடும் பயிர்களுக்கு உயிர் கொடுக்க
வானம் அனுப்பிவைக்கும்
வைர தூதுவன்
ஏழை முதல்
பணக்காரர் வரை எல்லோரும் சமம்
என
உணர்த்த வரும்
உய்யவன்
வானத்திலிருந்து கீழ்நோக்கிப்
செய்து
பூமியில் உள்ள உயிர்களை மேல்நோக்கி
வளர செய்யும்
வரம்

❑

● கவிஜி



# கண்ணாமூச்சி ரே ரே...

தெருவே திருவிழா கோலத்தில் அலைந்து கொண்டிருந்தது.

கிழக்கும் மேற்கும் வடக்கும் தெற்கும் குவியும் முச்சந்தியில் முகம் விரிய காத்திருந்தது.. தனித்து..இரண்டு மூன்று..நான்கைந்து..பத்து பதினைந்தாக நின்றமர்ந்திருந்த கூட்டம். ஊர் பெருசு தலைமையில்.. வசூல் வேட்டை சற்று முன் தொடங்கி இருந்தது.

வருத்தம் தோய்ந்த முகம் தான் எல்லாருக்குமே. ஆனாலும் அதிலும் கோபம் பரவும் அகம்.

“என்னண்ணே இப்டி ஆகிடுச்சு” என்ற அந்த வீட்டுக்காரியைப் பார்த்து..”என்ன செய்றதும்மா.. எதை விதைக்கறமோ அதத்தான அறுக்க முடியும்..” என்றார் தீர்க்கமாய்.

கொடுத்த பங்கு தொகையை வாங்கிக் கொண்டு அடுத்த வீட்டுக்கு நகர்ந்தது கூட்டம். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு கேள்வி. தொகை கூட துக்கமும் கூடிக் கொண்டே போனது.

“நிஜமாத்தானா.. இல்ல யாரும் ஏதும் வீணா மாட்டி விட்ருக்காங்களா..?”

“அட உலகத்துக்கே தெரியும் தம்பி.. இப்பதான்.. இந்த செல்போனு எல்லாத்துக்கும் சாட்சியா இருக்கே. அதை கேமரான்னா நினைச்சீங்க.. இல்லல்ல.. அது கடவுளின் நெற்றிக்கண். சரியான நேரத்துல சரியா வேலைய பார்த்து விட்டுடும்..” பேசியபடியே தொகையை வாங்கிக் கொண்டு அடுத்த வீதிக்குள் நடையைப் போட்டது பெருசு. கூட்டம் பின்னால் தொடர்ந்தது.

“எல்லாரும் ஜாக்கிரதையா நடந்துக்கோங்க. வாழ்க்கை ஒரே ஒரு முறை தான். பிசகுச்சுன்னா அப்புறம் அம்மானாலும் வராது.. ஆத்தானாலும் வராது..” இடையிடையே காப்பித்தண்ணி குடிக்கும் வீட்டில் அக்கறையாக பேசவும் தவறவில்லை பெருசு.

ஓவென ஊர் எல்லையில் சத்தம் எழும்ப.. எல்லார் கவனமும் ஒரு புள்ளியில் திரும்பியது. அதே கணம் ஒருவன் “ அய்யா..கொண்டு வந்துட்டாங்க..” என கத்திக் கொண்டே..வாசலில் இருந்து உள்ளே ஓடி வந்தான்.

அடுத்த கணம் அங்கிருந்த எல்லாருமே ஊரின் முகப்பு மைதானத்தை நோக்கி விரைந்தார்கள். ஒவ்வொரு வீட்டிலிருந்தும்.. கனத்த மனதோடும்..ஆர்வம் மேலோங்கும் மானுட எதிர்பார்ப்போடும் ஓடியும் நடந்தும் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். ஒரு அம்மா அப்பா மனைவி என்று ஒரு குடும்பம் மட்டும் நெஞ்சு நெஞ்சாய் அடித்து அரட்டிக் கொண்டு கூட்டத்தோடு கூட்டமாய் முன்னேறியது. அதே போல இன்னொரு குடும்பமும் கனத்த முகத்தோடு கண்ணீர் மல்க அவர்களை பார்த்துக் கொண்டே பின் தொடர்ந்தது.

ஊர் பெருசு மீசை நடுங்க முன்னால் நிற்க ஊரே பின்னால் வட்ட வடிவில் பதபதைப்போடு நின்றது. எல்லார் கண்களிலும் கருணையற்ற பாவனை. ஆனால்..அதனிடையே சொல்லொணா தவிப்பு.

ஆம்புலன்சில் இருந்து அவனை இறக்கினார்கள். ஊரே ஒரு பக்கமிருந்து கத்தியது. முன்னும் பின்னுமாக பொதுவாக எழுந்த சத்தம் அடங்கியபாடில்லை. கூட்டத்தில் சத்தம் பொதுவாகும் போது யுத்தத்தின் வடிவம் அங்கே உரு பெறுகிறது. காவலர்கள் முன்னே வந்து.. இறக்கிய அவனை ஊர் தலைவரிடம் ஒப்படைத்தார்கள்.

“எல்லா பார்மாலிட்டிஸ்ம் முடிந்தது. இனி நீங்கள் சார்ஜ் எடுத்துக்கொள்ள ஜட்ஜ் உத்தரவு போட்டு விட்டார். இந்தாருங்கள்.. உத்தரவு காப்பியின் நகல்..”

கை நடுங்க காப்பியை வாங்கி ஒருமுறை திரும்பி ஊரையே பார்த்தது பெருசு. ஊர் சடுதியில் அமைதியாக.. ஆவலோடு காதுகளைத் தீட்டியது. அத்தனை கண்களும் அந்த காகிதத்தையே மொய்த்தன.

“கோயில் வளாக இருட்டில் ஆறு வயது குழந்தையை வன்புணர்வு செய்து கொலை

செய்தது சித்திரைப்பாண்டி தான் என்பது எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி ஊர்ஜிதமாகி விட்டது. ஆகவே அவர் பிறந்த ஊரிலேயே பொதுமக்கள் முன்னிலையில் அவரை உயிரோடு ஒப்படைக்கவும் ஊர்மக்கள் விருப்பப்படி தண்டனையை நிறைவேற்றிக் கொள்ளவும் உத்தரவிடுகிறேன்" - படித்து முடிக்கையில்.. ஊரே ஓவென கத்தியது. ஆத்திரம் கலந்த சத்தமாகவும் இருந்தது. ஐயோ என்ற படபடப்பு நிறைந்த சத்தமாகவும் இருந்தது.

அடுத்த சில நொடிகளில்..ஊர் மைதான நடுவே நட்டு தயாராக இருந்த கம்பத்தில் சித்திரைப்பாண்டி தலைகீழாய் கட்டி தொங்க விட பட்டான்.

காலையிலிருந்தே பிளேடுகளால் ஆன சாட்டை பளபளவென மின்னி தயாராய் காத்துக் கொண்டிருந்தது.

ஊர்மக்கள் அமைதி காக்க என்று உத்தரவு போட்டது ஊர் பெருசு. வட்டம் அகன்று சுழன்று நின்றது. மதிய சூரியன் மத்தளம் அடிப்பது போல இருந்தது. வானத்தில் சுழன்ற பகீர் பரபரப்பாய் இறங்கிக் கொண்டிருந்தது. கூட்டம் தங்களுக்குள் மெல்ல தள்ளிக் கொண்டும் முந்திக் கொண்டும் கிசுகிசுத்துக் கொண்டே இருக்க.. இறுக்கம் சூழ்ந்த நொடிகள் அந்த மைதானத்தை தக் தக் தக் தக் தக் தக் என்று சுழல ஆரம்பித்திருந்தது.

பலியான சிறுமியின் தாயின் கைகளில் சாட்டை கொடுக்கப்பட.. அந்த தாய் நடுங்கும் கையில் சாட்டையை சல சலத்துக் கொண்டே தொங்கும் அவனருகே சென்றாள். கண்களில் மரண பயம்.. தலை கீழ் உடல் முழுக்க இயலாமை. கெஞ்சும் மொழிக்கு சொற்கள் இல்லை. வறட்டுக்கத்து கத்தும் சித்திரைப்பாண்டிக்கு உலகமே செவிடானது போன்ற பிரம்மை. தலைகீழாய் சித்திரைப்பாண்டியை நெருங்கிக் கொண்டிருந்த அந்த தாயின் அடி வயிற்றில் எரிந்துக் கொண்டிருக்கும் இனி ஒரு போதும் அணையாத தீயை ஊரே உணர்ந்தது. அழுதழுது சிவந்து வீங்கிய முகம்.. கத்தி கதறி குரல் உடைந்த பாவனை என்று நடக்கவும் சக்தியற்ற அந்த தாய் பற்களைக் கடித்தபடி அவனைப் பார்த்தாள். உள்ளிருந்து ஓவென அரட்டி வெளியேறிய கோபம் அவள் உடலை இறுக்கியது. கையில் நிரம்பி இருந்த சாட்டையில் கண நேரத்தில் பலம் கூட..காற்றில் பின்னிழுத்து அவனுடலில் முன்னிழுத்தி விளாச.. சல்லீர்..என்ற சப்தம் ஊர் காதுகளில் ரத்தத்தைக் கொப்பளித்தது.

ஒரு கணம் கண்கள் மூடி காதுகளில் கத்தினார்கள்.

அடித்து இழுக்கையில் பிளேடுகளோடு கீறி கதறி கொத்தாய் பிய்ந்து கொண்ட வந்த அவன் சதை கொத்தில் சாபம் பொடிபட ஆரம்பித்தது. கோயில் வராண்டாவில் குதறப்பட்ட அந்த சிறுமியின் ஆன்மா அந்த கொடி கம்பத்தை சுற்றி ஒளிந்து விளையாட்டு விளையாடியது. அவள் பலியான அன்று அவள் விளையாடிக் கொண்டிருந்த "கண்ணாமூச்சி ரே ரே" காதில் அமிலம் சொட்ட சித்திரபாண்டியை கால்களோடு மேலே துள்ளி துள்ளி சுழல வைத்தது. விளையாட்டில் ஒளிந்திருந்த சிறுமியை ஒழித்துக் கட்டிய அந்த சாத்தானின் உடல்..ரத்தம் கொட்டி தடதடவென நடுங்கி குலுங்கியது. இம்முறை அந்த சிறுமியின் அப்பா கையில் ப்ளேடு சாட்டை. வெறி கொண்ட வேதாளம் போன்ற உடல் மொழியில் அடித்து துவைத்தார். ரத்த ம் பீறிட்ட காட்சி குமட்டிக் கொண்டு வந்தது அவருக்கே. தொடர்ந்து அந்த சிறுமியின் 10 வயது அண்ணன் சாட்டையை தூக்க முடியால் தூக்கி அடித்து கிழித்தான். கச்சிதமாக சித்திரைப்பாண்டியின் கண் ஒன்றை கீறி பிளந்து வெளியே எடுத்து போட்டு விட்டு.. கனங்

கனங்கென சலசலத்துக் கொண்டிருந்த பிளேடுகளில் பாவ ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது.

பிறகு சாட்டை சித்திரைப்பாண்டியின் அம்மா கைக்கு மாற்றப்பட வெறி கொண்டு.. உமிழ்ந்து கொண்டே அடித்திழுத்தாள்.

“நீயெல்லாம் பொணன்டா.. உன்ன சுமந்த வயித்த எத கொண்டு கழுவ..” வார்த்தை கதற.. அவன் உடம்பு செதில் செதிலாக குருதியோடு சிதற.. ஒரு கோர மரணம் அங்கே குவியத் தொடங்கியது. ஏங்கி ஏங்கி அழுதபடியே அவன் அப்பாவும் அடித்து கிழிக்க.. அவன் உடல்.. கறிக்கடையில் தொங்கும் சதைப்பிண்டமாய் தட தடவென நடுங்கிக் கொண்டே அசைந்துக் கொண்டிருந்தது. கழுத்து.. முதுகு..பிட்டம்..தொடை என்று ப்ளேடுகளின் கீறல்.. உள்ளூறுப்புகளை அறுத்து சிதைத்துக் கொண்டிருந்தது. ஆ ஆ வென திறந்து கிடந்த பிளேடுகளின் ஊசிமுனை உள் சென்று செத்துப்போன அந்த இதயத்தை தளதளக்கும் நேர்த்தியாய் அறுத்தெடுத்தது.

ஊர் முழுக்க வசூலித்த பணத்தை அந்த சிறுமி குடும்பத்திடம் கொடுத்து விட்டு அந்த ஊரே அவர்கள் முன் மௌனமாய் தலை கவிழ்ந்து நின்றது. சித்திரைப்பாண்டியின் குடும்பமே சிறுமியின் குடும்பத்தின் காலில் விழுந்து கதறி அழுக.. அடுத்து..ஊரில் உள்ள பெரிவர்கள் சிறுவர்கள் என்று ஒவ்வொருவராய் அடுத்தடுத்து ஒருவர் பின் ஒருவராக உரிந்து தொங்கும் அவனை அடித்து கிழிக்க.. அவன் எப்போதோ செத்திருந்தான்.

அங்கே ஒரு அசிங்கத்தின் சதை.. பாவத்தின் சம்பளமென குவிந்து கிடந்தது.

“இனி எவனாவது இந்த கேவலத்தை செய்வீங்களாடா..” - ஊரிலேயே வயதான- 102 வயது - கிழவி கோயில் வாசலில் நின்று கண்கள் உருட்டி கத்திக் கொண்டிருந்தது. ❑

● கௌந்தி மு

# அங்கீகரிக்கப்படாத மகிழ்ச்சி

இப்பொழுதெல்லாம்
பிடிக்கப்படுவதில்லை
வண்ணத்தியின் இறகுகள்..

இப்பொழுதெல்லாம்
கட்டப்படுவதில்லை
தும்பியின் வால்கள்..

இப்பொழுதெல்லாம்
எம்பிக்குதித்து
சிதறடிக்கப்படுவதில்லை
மழையில் தேங்கியக் குட்டைகள்..

இப்பொழுதெல்லாம்
தூண்டிலிடப்படுவதில்லை
தவளைக்குட்டி மீனெனத் தவறாக..


இப்பொழுதெல்லாம்
ஆட்டுவிக்கப்படுவதில்லை
ஊஞ்சலென
ஆலத்தின் விழுதுகள்..

இப்பொழுதெல்லாம்
பார்க்கப்படுவதில்லை
அதிசயமென வானத்தின் ஊர்திகள்..

இப்பொழுதெல்லாம்
குழந்தைகளிடத்தில் மகிழ்ச்சியென
இவையெல்லாம்
அங்கீகரிக்கப்படாததால்.. ❑

● கவிஞர். தக்ஷன், தஞ்சை

கொடுக்க விரும்பும் முத்தம்
மறுக்கப்படும்போது
அதுவரை பேசிய விஷயங்கள் சற்றே
அமைதி இழக்கின்றன



கொடுக்க விரும்பும் முத்தம்
மறுக்கப்படும்போது
திரும்பமுடியாத எல்லை நோக்கி நாம்
அனுப்பப்படுகிறோம்

கொடுக்க விரும்பும் முத்தம்
மறுக்கப்படும்போது
எளிதில் தீர்ந்துவிடாத ஒரு வாதத்தை
நிர்ப்பந்திப்பதற்கான முதல் புள்ளி
இடப்படுகிறது

கொடுக்க விரும்பும் முத்தம்
மறுக்கப்படும்போது
புரியாத பாதையின் மத்தியில் சட்டென்று
இறக்கிவிடப்பட்ட ஒரு நாய்க்குட்டியைப்
போல்
மனம் திகைத்துவிடுகிறது

கொடுக்க விரும்பும் முத்தம்
மறுக்கப்படும்போது
கெஞ்சுவதற்கான அனைத்துக் காரணங்களும்
தம்மை மூடிக்கொள்கின்றன

கொடுக்க விரும்பும் முத்தம்
மறுக்கப்படும்போது
ஒற்றை இலையென படபடக்கும் மௌனம்
தன் நுனியைப் பழுக்கச் செய்கிறது

கொடுக்க விரும்பும் முத்தம்
மறுக்கப்படும்போது
அத்தனை இறுக்கத்தை அது கொண்டிருக்கும்
என்பதை அதுவரை அறியாதவராகவே
நாம் இருந்திருக்கிறோம்

கொடுக்க விரும்பும் முத்தம்
மறுக்கப்படும்போது
முற்றிலும் ஒரு புதிய சுவர் எழும்புவதை
முதல்முறையாக நாம் தெரிந்துக்கொள்ளத்
தொடங்குகிறோம்

❑

● வசந்ததீபன்



# எதிர்பாராதது

அந்த மாரியம்மன் கோவில் திருவிழாவிற்கு நாங்கள் போயிருந்தோம். மழை காலத்து ஈசல்கள் போல எங்கு பார்த்தாலும் ஜனங்கள். ஒரே நெரிசலாக இருந்தது. தீச்சட்டி எடுப்பவர்கள், ஆயிரம் கண் பானை எடுப்பவர்கள், சேத்தாண்டி வேசம் போடுபவர்கள், அவர்களோடு

வந்திருக்கும் ஆண்கள்..பெண்கள்..குழந்தைகள், கொட்டுக்காரரர்கள், தப்படிப்பவர்கள் என மக்கள் வெள்ளம் கரை புரண்டோடியது.

பாதுகாவலுக்கு வந்திருந்த போலீஸ்காரரர்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தியபடி திரிந்தார்கள்.

ஒரு வழியாக சாமி தரிசனம் முடித்து விட்டு.. கோவிலுக்கு தென்புறத்தில் ராட்டினங்கள்.. மரணக்கிணறு..சர்க்கஸ்..பாம்பு தலையுள்ள மீன் கன்னி..நாய்களின் அதிசய விளையாட்டு என பார்த்து விட்டு கடைவீதிப் பக்கமாக வந்து கொண்டிருந்தோம்.

எதிரே யானை ஒன்று வந்து கொண்டிருந்தது. அதன் மேல் பாகன் ஒருவன் உட்கார்ந்தபடியே..சிறு..சிறு குழந்தைகளை அதன் மேல் ஏற்றி முன்னும் பின்னுமாக நடந்து.. தும்பிக்கையினுள் விரல் நுழைத்து..யானையின் எச்சிலை குழந்தைகளின் நெற்றியிலும், வாயிலிலும் வைத்துவிட்டு..குழந்தைகளை உரியவர்களிடம் கொடுத்து பணத்தைப் பெற்றுக் கொண்டிருந்தான்.

என் கையில் வைத்திருந்த என் மகனை யானையின் மேல் ஏற்றிவிட ஆசைப்பட்டு.. அவனை யானைக்காரனிடம் நீட்டினேன். யானையின் மேலிருந்தபடியே கையை நீட்டி குழந்தையை வாங்க அவனும் முயற்சித்தான்.

ஆனால் என் மகன் பயந்து..என்னை இறுக கட்டிப்பிடித்துக் கொண்டு அழுது ஆர்ப்பாட்டம் பண்ணத் தொடங்கினான். நானும், என்னோட மனைவியும் வலுக்கட்டாயமாக அவனை எப்படியாவது யானைக்காரனிடம் ஒப்படைக்க முனைகையில் சட்டென்று அவன் என் கன்னத்தை வாயால் கவ்விக்கடித்தபடி என்னைக் கட்டிக் கொண்டான்.

அவன் கடித்த வலி தாங்காமல் அவனை என்னைவிட்டு பிரிக்கவும், அவனது வாயை எனது கன்னத்திலிருந்து விடுவிக்கவும் எவ்வளவோ முயன்றேன். முடியவில்லை. வலி..ஏதோ மிருகம் கடித்தது போலிருந்தது.

எனது மனைவியும் அருகிலிருந்தவர்களும் முயன்றும்..ம்ம்.. ஒன்றும் நடக்கவில்லை. கடைசியில் அவன் கன்னத்தில் சப்பென்று அறைந்ததும்.. அவனது வாய் அழுவதற்காக திறந்ததும்..எப்படியோ.. ஒருவழியாக என் கன்னம் விடுபட்டது.


சுற்றிலும் இருந்தவர்கள், " நல்ல புள்ளயப் பெத்தீங்க.."என்று வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டு போனார்கள். என்கன்னத்தில் பற்கள் பதிந்த தடம் இருந்தது.

வீட்டுக்கு வந்து சேர்ந்து.. சாப்பிட்டு விட்டு.. நாற்காலியில் போய் அமர்ந்து.. தொலைக்காட்சிப் பெட்டியை முடுக்கினேன்.

குழந்தைகளை தூங்க வைத்து விட்டு எனது மனைவி நாற்காலியின் அருகில் வந்து நின்றாள். திடீரென்று தொலைக்காட்சியில்.. கோயில் அருகில்..மதம் பிடித்த யானை ஒன்று பாகனை தனது முன்னங்காலில் எற்றி எற்றி மிதிக்கின்ற காட்சி ஓடியது. நான் எனது மகன் கடித்தக் கன்னத்தை தடவிக் கொண்டபடி அக்காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

❑

● மு. தயாளன்




# தெணியான் எழுதிய மூவுலகு நாவல் பற்றிய ஒரு பார்வை

இன்று தெணியான் எழுதிய மூவுலகு என்ற நாவலைப் படித்தேன்.

மூன்று கதைகள் ஒரு நாவலாக்கப்பட்டிருக்கிறது.

வாணி - குமரன்

சிவமதி - வல்லிபுரநாதன்

சுமதி - ஆனந்தராசா

இந்த ஆறுபேரையும் சுற்றிச் சுழல்கிறது கதை.

மேலே கூறிய சோடிகளில் ஒருவர் ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர். மற்றவர் தாழ்ந்த சாதியைச் சார்ந்தவர். இவர்களின் காதல் பற்றியும் அதனால் எழும் பிரச்சினைகள்பற்றியும் கூறியுள்ளார்.

தன்னுரையில் மூன்றுவகையான வர்க்கங்கள் என்று கூறியுள்ளார். வாணி - குமரன் வைத்தியர்களாக இருப்பதால் அவர்களை மேல்த்தட்டு வர்க்கமாகவும் சுமதி - ஆனந்தராசா ஆசிரியர்களாக இருப்பதால் அவர்களை மத்தியதர வர்க்கமாகவும் சிவமதி - வல்லிபுரநாதன் அன்றாடக் கூலி உழைப்பாளர்களாக இருந்ததால் அவர்களை கீழ்த்தட்டு வர்க்கமாகவும் கருதியிருப்பதாகவே நினைக்கிறேன்.

மூன்று காதல்களும் மூன்றுவிதமாக அணுகப்பட்டுள்ளன. மேல்த்தட்டு வர்க்கக் காதல் வெற்றியடைகிறது. மத்தியதரவர்க்கக் காதல் தோற்றுப் போகிறது. கீழ்த்தட்டு வர்க்கக் காதல் திட்டமிடப்பட்ட ஏமாற்றாக முடிகிறது.

வர்க்கங்களை முதன்மைப் படுத்த எடுத்துக் கொண்ட முயற்சி வர்க்க முரண்பாடுகளை வெளிப்படுத்தாதமை ஒரு குறைபாடாகவே எனக்குப்பட்டது.

மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த பாத்திரம் கீழ்த்தட்டுவர்க்கத்தைச் சேர்ந்த பாத்திரத்துக்கு உதவி புரிவதுபோல் காட்டியமை அவர்களுக்கிடையில் வர்க்க முரண்பாடு இல்லை என்பதுபோன்ற ஒரு தோற்றத்தைக் கொடுக்கிறது. ஆனால் நடைமுறையில் இந்த வர்க்க சமரசம் இல்லை என்பதை யாவரும் அறிவர்.

கதைகளினிடையில் கூர்ந்து கவனித்தால் பலவிடயங்கள் வாசகர்களுக்குத் துணிவுடன்

கூறப்படுவதையும் அவதானிக்கலாம்.

இந்தக் கதைகள் நடைபெறுங் காலங்கள் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதும் யுத்தம் முடிவுற்ற பின்பாகவும் உள்ளது. இந்தக் கால விவரணம் கொஞ்சம் குழப்பமாகவே இருந்தது.

போர்நடைபெற்ற காலத்தில் ஆலயப் பிரவேசம் நடைபெற்றபோது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கோயிலுக்கு வந்து இரு பக்கமும் கோயிலுக்குள் செல்லக் கூடாது என்று கூறி கோயிலைப் பூட்டிவிட்டுச் சென்றதாகவும் சில நாட்களின்பின் ஆதிக்க சாதியினரிடம் ரகசியமாகத் திறப்பைக் கொடுத்த துரோகத் தனத்தையும் தெளிவாகக் கூறிச் செல்கிறார்.

இந்தச் செய்தி போராட்டம் நடந்த காலங்களில் வெளிவந்த ஒன்றே. அதனை ஆசிரியர் வெகுலாவகமாக தனது நாவலில் புகுத்தியுள்ளார்.

இயக்கம் இருந்த காலத்தில் ஆதிக்கசாதியினர் பயத்தினால் அடக்கி வாசித்தமையும் போர் முடிவுற்றபின் பழையபடி ஆதிக்க சாதியினரின் அட்டகாசங்கள் பழையமாதிரி ஆரம்பித்துவிட்டதையும் பாத்திரங்களினூடாகப் பதிவு செய்கிறார்.

வர்க்கரீதியாக சாதிப் பிரச்சினையை மையப்படுத்த முனைந்தபோதிலும் அது முழுமையாக வெற்றி பெறவில்லையென்றே நினைக்கிறேன்.

மேல்தட்டு வர்க்கக் காதல் வெற்றிபெறுவதாயும் மத்தியதரமும் கீழ்த்தட்டு வர்க்கமும் தோல்வியைத் தழுவுவதும் நாவலின் பலவீனம் என்றே கருதுகிறேன்.

அடுத்து சிறுவர்களை இயக்கத்தினர் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லுகின்ற நிகழ்வுகளையும் நாவலுக்குள் கொண்டுவந்துள்ளார்.

இந்த நாவலில் சமீபத்திய போர்க்கால நாவல்கள் போன்று இயக்கத்தைத் துதிபாடுபவையாக இல்லாமல் போரினால் மக்கள்பட்ட துயரங்கள் நெருக்கடிகள் உள்வாங்கப்பட்டமை சிறப்பான ஒன்றே.

கதையின் நகர்வு இயல்பாக இருந்தது. மொழிநடை தெளிவாக இருந்தது.

புத்தகத்தில் ஏராளமான எழுத்துப் பிழைகள். வடிவமைப்பில் இன்னும் கூடக் கவனம் செலுத்தியிருக்கலாம். ஒன்றுக்கு இரண்டு தடவை வாசித்து பிழைகள் இல்லாமல் கொண்டுவந்திருக்கலாம்.

பதிப்பாளர்களின் தவறா அல்லது எழுத்தாளரின் கவலையீனமா என்பது புரியவில்லை.

மேலே நான் கூறியவைகள் தனிப்பட்ட அபிப்பிராயங்களே. சமூக நோக்கில் எனது பார்வையே இது. தெணியான் அவர்கள் பல சிறுகதைகள் நாவல்கள் எழுதியுள்ளார். சிறுகதைகள் படித்திருக்கிறேன். நான் படித்த அவரின் முதல் நாவல் இது. நல்லதொரு படைப்பாளி. மேலும் படிப்பேன். படிக்கும் போது எழுதுவேன்.

❑

● வெ.ஹேமந்த் குமார், ஈரோடு

# எண்ணம் போல் வாழ்க்கை

வாழ்க்கை முழுவதும்
வண்ணங்கள்,
அவரவர் மனதில்
எண்ணங்கள்:
நேர்மறை எண்ணங்களை
விதைத்திடுவோம்!
எதிர்வரும் இன்னல்களை
புதைத்திடுவோம்!!
நல்லதை நினைப்பது
பலம்---
என்றும் வரலாம் ஊர்வலம்;
சிந்தனை மாற்றத்தை
உருவாக்கும்,
கண்களின் பார்வையை
தெளிவாக்கும்..
உலகம் புரண்டு
உருள்கிறது,
வெற்றியும் தோல்வியும்
நகர்கிறது. ❑

● த. ரவீந்திரன்

உலகமே மலடி
என்று சொன்ன
பெண்ணின் கல்லறையில்
பூத்துக் குலுங்கின மலர்கள்..!

❑

சிறுகதை

துறையூரான்



# போராட்டம்

எனது பெயர் குமார். போரினால் மிகவும் பாதிக்கப்பட்டு நாடு நாடாக அகதியாக அலைந்து, கடைசியாக கனடாவில் காலடி எடுத்து வைத்தபோது, இருகரம் நீட்டிஅரவணைத்து நம்மையெல்லாம் அணைத்துக் கொண்ட இந்த நாட்டுக்கு நாம் எல்லோரும் என்றென்றும் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும். பூர்வீக குடிகளாக இருந்த எம்மை வந்தேறு குடிகள் அழித்து, ஒழித்து நாட்டை விட்டே விரட்டும் இந்தப் பாதகச் செயலுக்கு, ஆண்டவன் தான் தண்டனை கொடுக்க வேண்டும். அகதிகளாக 2500 ஆண்டுகளுக்கு முன்பு வந்து சேர்ந்த சிலர் தமிழ் பெண்களை விவாகம் செய்து இப்பொழுது பல்கிப் பெருகி இருக்கின்ற, எமது தமிழ் முன்னோர்களே உருமாறி,உள்ளம் மாறி, மொழி மாறி உதைத்து தள்ளுகிறார்கள். இவற்றை எல்லாம் உலகம் பார்த்து பேசாமல் இருப்பது எவ்வளவு காலத்திற்குத்தான் நீடிக்கப் போகிறது?

வாழ்க்கை என்பது கல்லும் முள்ளும் நிறைந்த ஒரு கானகம் என இரண்டொருவர் கூறியதை கேட்டு இருக்கிறேன். பெரும்பாலும் இது ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் துன்பம் எப்போது வரும் என்று தெரியாது. என் வாழ்க்கையில் விதி விளையாடியது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.'

சிறுவயது முதலே எதையும் சிறப்பாக செய்ய வேண்டும் நேரத்திற்குச் செய்ய வேண்டும் என்ற ஒரு கொள்கை ஓடு என்னை பெற்றோர் கவனமாக வளர்த்து வந்தனர். ஆரம்பத்தில் இதை கடைபிடிப்பது கடினமாக இருந்தது. அப்போதெல்லாம் அப்பாவின் கெடுபிடிகளை பொறுக்க முடியாமல் மனதுக்குள்ளேயே திட்டிக்கொண்டு, அவர் எதிர்பார்த்தபடி யாவற்றையும் என்னால் ஆன வரை செய்ய முற்பட்டேன். வளர வளர இம்மாதிரியான வாழ்க்கைமுறை எனக்கு பழகிவிட்டது.ஒரு அளவுக்கு வளர்ந்து பல்கலைக்க ழகத்திற்கு போன பின்புதான், எனது அப்பாவின் கெடுபிடியின் முக்கியத்துவத்தை என்னால் உணர முடிந்தது. பெரும்பாலும்

இவ்வாறான சில பழக்கவழக்கங்கள் பெற்றோரில் இருந்து பிள்ளைகளுக்கு கடத்தப்படுகின்றன. அறியாத வயதில் இவற்றை நாம் ஒவ்வொருவரும் சுமையாகக் கருதி, அவர்கள் எம்மீது சில விஷயங்களை திணிக்கிறார்கள் என்று ஒரு மனப்பாங்கில் வேண்டாவெறுப்புடன் செய்து வந்தது எல்லோருக்கும் மனதில் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை,

பல்கலைக்கழகத்துக்கு போன பின்பு அங்கு நான் தான் எனக்கு எஜமான். நான் விரும்பியவாறு நடந்து கொள்ளலாம் எனினும்விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டே ஆக வேண்டிய ஒரு நிலமையை யாவரும் எதிர் கொண்டிருப்பீர்கள். அப்பொழுது தான் நாம் சிறுவயதில் பழக்கத்தில் கொண்ட பல நடைமுறைகள் நமக்கு கை கொடுக்கும். அப்போதுதான் எமது பெற்றோரின் புத்திமதிகள், நடைமுறைகள் எமக்கு வாழ்க்கையில் எவ்வளவு ஊன்றுகோலாக இருக்கின்றன என்பதை உணர முடியும்.

எனது பெற்றோர் எதிர்பார்த்தபடி கஷ்டத்தின் மத்தியிலும் நேரத்திற்கு யாவற்றையும் செய்து நேர்த்தியாகச் செய்து சிறந்த மதிப்பெண்களுடன் கணினித்துறையில் ஒரு பட்டத்தை பெற்றுக் கொண்டு வெளியே வந்தேன்.

இதுவரைக்கும் வாழ்க்கை இன்பமாக ஓடிக்கொண்டிருந்தது. பலவேலைகளுக்கு விண்ணப்பித்தேன். நேர்முகப் பரீட்சைக்கு போனேன். சிலர் இரண்டாவது தடவையாக நேர்முகப் பரீட்சைக்கு வரும் படி கேட்டார்கள். அதன்படி சளைக்காமல் முக்கியமான கம்பெனிகளில் இரண்டாவது தடவையாக நேர்முகப் பரீட்சைக்கு போனேன்.. இதுவரைக்கும் அப்பா எனக்கு வேண்டிய செலவுகளை மனங்கோணாமல் செய்து கொண்டிருந்தார். பல்கலைக்கழக கல்விக்கான பணத்தை அரசாங்கத்திடமிருந்து கடனாகப் பெற்று படித்தேன். உணவு, உறைவிடம், போக்குவரவு. நூல்கள் வாங்குவது போன்ற யாவுக்கும் அப்பாவி உதவி செய்தார். அந்நேரத்தில் பெற்றோர் இவற்றை எனக்கு செய்த போதும் அது அவர்கள் கடமை என்று நான் அதை பொருட்படுத்தவில்லை.எனினும் சிக்கனமாக செலவு செய்து பொறுப்போடு நடந்து நான்கு வருடங்களின் பின்பு ஒரு பட்டதாரியாக வெளியேறினேன். என் பெற்றோருக்கு ஒரே சந்தோஷம் என்பதுடன் உற்றார் உறவினருக்கு இதைப்பற்றி பெருமையாக பேசிக்கொண்டனர்.எனது நெருங்கிய உறவினர்கள் யாரும் கணினித்துறையில் இவ்வாறானவர்கள் பட்டத்தை இதுவரை பெற்றிருக்கவில்லை. இது எனது பெற்றோருக்கு மேலதிக மகிழ்ச்சியை கொடுத்தது

எதிர்பார்த்தபடி பிரபலமான ஒரு கணினித் துறை கம்பெனி ஒன்றில் எனக்கு நல்ல சம்பளத்துடன் ஒரு வேலை கிடைத்தது, ஒரு வருடம் சென்றபின் நமது சம்பிரதாயத்தின்படி பெற்றோர் பெண் பார்க்க ஆரம்பித்தனர். பெரும்பாலும் கனடிய நீரோட்டத்தில் அந்நாட்களில் பல்கலைக்கழகங்களில் படித்தவர்கள் நமது பாரம்பரிய முறைகளைப் பின்பற்றியே நடந்தனர். அதாவது பெண்களை தேவையில்லாமல் சந்திப்பது, டேட்டிங் போவது என்பதை நான் தவிர்த்துக் கொண்டேன். காரணம் எனது பெற்றோரின் பண வசதிக் குறைவு. கட்டுப்பாடு மற்றும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்வது வழக்கம்போலவே என்னிடம் இருந்தது. இப்பொழுது இங்கே பிறந்து வளர்ந்த மாணவ மாணவியர் பெரும்பான்மை சமூகத்தினரின் பழக்க வழக்கங்களை பின்பற்றி டேட்டிங் என்றும் நண்பர்கள் என்ம்றும் சுற்றித் திரிகின்றனர். இதனால் பின்னால் ஏற்படும் பலாபலன்களை எண்ணிப்பார்க்கத் தவறிவிடுகின்றனர். பெரும்பாலும் வாழ்க்கை என்பது விளையாட்டு அல்ல.அதை உணர்ந்து செயல்பட நமது

இளைய சமுதாயம் தவறிப் போகிறது என்றே எனக்கு படுகிறது. பெரும்பாலான எனது நண்பர்கள் நானொரு பட்டிக்காடு என்று பலமுறை எனக்கு கூறியதை நான் மறக்க வில்லை.

என் பெற்றோர்கள் பெண் பார்க்கிறார்கள் எனக்கு என்பதை கேள்விப்பட்டு அப்பாவின் நண்பர்களும் அம்மாவின் நண்பிகளும் பல்வேறு பெண்களின் தகவல்களோடு தொடர்பு கொண்டனர். சில வருடங்களே கனடாவில் வாழ்ந்த காரணத்தினால் பெண் பார்க்கும் பொறுப்பை பெற்றோரிடமே விட்டுவிட்டேன். அவர்களுக்கு பிடித்தால் மட்டுமே அடுத்த கட்டமாக படத்தையும் தகவலையும் எனக்குத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். சில மாதங்களின் பின்பு ஒரு பெண்ணை நிச்சயப்படுத்திப் படத்தையும் தகவலையும் என்னோடு பரிமாறிக்கொண்டனர். பெண்ணை பிடித்திருந்தாலும் அவரைப் பற்றி கூடுதல் தகவல்களை நானே அறிய முற்பட்டேன். இதைப்பற்றி பெற்றோருடன் நான் எதுவும் கூறவில்லை. வாழ்க்கை துணை என்பது ஆயுட்கால பந்தம். அதே நேரத்தில் திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று பலமுறை அப்பா கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். சில நாட்களாக செய்த ஆராய்ச்சியின் பயனாக அந்தப் பெண் எனக்கு ஏற்றவர் என்பதை நண்பர்கள் மூலமும் வேறு பல வழிகள் மூலமும் அறிந்துகொண்டேன். பெண்ணை மட்டுமல்ல அவர்களின் குடும்பப் பின்னணி நடைமுறை, பழக்கவழக்கம் போன்றவற்றை நன்கு பரிசீலித்து அறிந்துகொண்டேன்.

எனவே பெற்றோர் நிச்சயித்த ஒரு நாளில் அவர்கள் வீட்டுக்குப் பெண் பார்க்கப் போனோம். அது ஒரு மறக்க முடியாத நிகழ்வு பெண் வீட்டார் எங்களோடு மிகவும் பண்பாகவும் நட்பாகவும் பழகிக் கொண்டனர் பெண்கூட எல்லோர் முன்னிலையிலும் என்னோடு அளவளாவ தொடங்கினர். காரணம் அவரும் ஒரு பிரபலமான கம்பெனியில் கணக்காளராக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் முன்னரே அறிந்திருந்தேன். பழக்கவழக்கம் அவருடைய பேச்சு பொதுவான தோற்றம் யாவும் எங்கள் எல்லோருக்கும் மிகவும் பிடித்து கொண்டது. அவரது குடும்பமும் எங்களுக்கு சில ஆண்டுகளுக்கு முன்புதான் கனடா வந்து சேர்ந்தார்கள் என்பதையும் அன்று அறிந்து கொண்டோம்.எனவே இரு குடும்பத்தாருக்கும் நல்ல மகிழ்ச்சியான ஒரு திருமணத்தை கோலாகலமாக செய்ய வேண்டும் என விருப்பம் தெரிவித்தனர். அன்றே யாவும் முடிவு செய்யப்பட்டது

அடுத்த நாள் பின்னேரம் எனது வருங்கால மனைவி மதுமிதா தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். அது எனக்கு ஆச்சரியமாக இருந்தது என்றாலும் அதை வெளிக்காட்டி க்கொள்ளாமல் பல நாட்கள் பழகியவர்கள் மாதிரி இருவரும் பல விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டோம்.அவர் தனது மனதில் பட்ட விஷயங்களை ஒளிவுமறைவின்றி என்னிடம் கூறியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. வேலை பற்றியும் இருவரும் பேசிக் கொண்டோம். எனது சகோதரி தொலைபேசி பேச்சு முடிவடைந்த பின் கிண்டல் செய்ததை என்னால் ஒரு போதும் மறக்க முடியாது. ஏனென்றால் அப்போதெல்லாம் கைத்தொலைபேசி வராத காலம் வீட்டிலேயே ஒரு தொலைபேசி மட்டுமே இருந்தது. வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் அதையே பாவித்தார்கள். எனவே வழக்கமான எமது தொலைபேசி அழைப்புகள் இனிமேல் வருவது தடை செய்யப்படுகிறது என்று அறிவித்தல் கொடுக்க வேண்டும் என எனது சகோதரி நகைச்சுவையாக கூறினார். யாவரும் சிரித்துக்கொண்டே அதைப்பற்றி பேசிக்கொண்டோம். ஏனென்றால் புதிய காதலர்கள் இருவரும் நாள் தோறும் தொலைபேசியில் மணிக்கணக்காக பேசுவார்கள் என்பதை அவர்கள் குறிப்பால் உணர்த்தினர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி

அப்படி ஒன்றும் மணிக்கணக்காக நடந்துவிடவில்லை. காரணம் இருவரும் எமது பேச்சை சுருக்கமாக தேவையானவற்றை மட்டும் பேசிக்கொண்டு தொலைபேசியை வைத்து விடுவது வழக்கமாகிவிட்டது. அவரும் பொறுப்போடு நடந்து கொண்டார். நானும் அவ்வாறே நடந்து கொண்டேன்.

ஒரு மாதம் சென்றபின் பதிவு திருமணம் செய்ய வேண்டும் என மனைவியின் பெற்றோர் அதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தனர். எனது பெற்றோர் செலவை ஒடுக்குவதற்காக திருமணத்தில் அன்று பதிவை வைத்துக்கொள்ளலாம் என விரும்பினர். ஆனால் அவர்கள் மிகவும் எளிய முறையில் நெருங்கிய உறவினர்களை மட்டும் வீட்டுக்கு அழைத்து திருமணப் பதிவை செய்து கொள்ளலாம் எனக் கூறினர். எனவே நானும் அதற்கு உடன்பட்டு தேவையான காரியங்களை செய்ய ஆரம்பித்தோம். பதவிக்கு தகுதியான புடவை,மோதிரம் போன்றவற்றை பெற்றோருடன் சென்று வாங்கி தயார் செய்தேன். யாவரும் அந்த நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். இதற்கிடையில் நண்பர்கள் பலர் என்னை கேலியும் கிண்டலும் செய்ய ஆரம்பித்தனர். ஏனெனில் வார இறுதி நாட்களில் நான் எனது வருங்கால மனைவியுடன் ஒவ்வோர் இடங்களுக்கு போவதும் சினிமா நாடகம் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் போவதும் வழக்கமாக இருந்தது.

குறிப்பிட்ட பதிவு நாளன்று ஒரு சனிக்கிழமை பிற்பகல் மனைவியின் வீட்டிலேயே பதிவு நடந்தது. அப்பாவின் நண்பர் ஒருவர் திருமண பதிவாளராக இருந்ததால் அவர் தனக்கு எதுவும் தரத் தேவையில்லை என்று இலவசமாகவே யாவற்றையும் செய்துவைத்தார். அன்று எல்லோருக்கும் நல்ல ருசியான விருந்து படைக்கப்பட்டு, யாவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் நிகழ்ச்சியில் பங்குபற்றி இரு வீட்டாரையும் பாராட்டி சென்றனர்.

ஒரு நாள் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது சாடையாக தலையை வலித்தது. தலைவலி தானே என்று அதை நான் பொருட்படுத்தவில்லை. வீட்டிற்கு வந்து குளிசை போட்டுக்கொண்டேன். தலைவலி படிப்படியாக மறைந்து போயிற்று. இதை நான் யாரிடமும் கூறவில்லை. இரண்டு நாட்களின் பின் அதே மாதிரியான தலைவலி. ஆனால் ஒரு அளவுக்கு உக்கிரம் கூடியதாக இருந்தது.என்னால் வேலை செய்ய முடியவில்லை. எனவே எனது உயர் அதிகாரியிடம் விஷயத்தை கூறினேன் அவர் குடும்ப வைத்தியரிடம் போகும் படி ஆலோசனை கூறினார். குடும்ப வைத்தியர் அப்பாவுடைய ஒரு தூரத்து உறவினர்.அவர் அடுத்த நாள் காலையில் தன்னை வந்து பார்க்கும்படி கூறினார். வேலைக்கு லீவு போட்டுவிட்டு காலை சென்று பார்த்தேன். அவர் என்னை சோதித்துப் பார்த்துவிட்டு எதற்கும் ஒரு ஸ்கேன் செய்து பார்ப்பது நல்லது என்று கூறி அதற்கு வேண்டிய ஒழுங்கு செய்துவிட்டு அறிவிப்பதாகச் சொன்னார்.அதன்பிறகும் தலைவலி வந்து வந்து போய்க் கொண்டிருந்தது. பெற்றோருக்கு இதனால் கவலை உண்டாகிவிட்டது. மதுமிதாவும் இதைப்பற்றி மிகவும் கவலைப்பட்டார். நான் அவரை ஆறுதல் வார்த்தைகள் கூறி ஓர் அளவுக்கு சமாதானப்படுத்திக் கொண்டு வந்தேன். ஸ்கேனிங்கு செய்வதற்கான நாளன்று போய் செய்துவிட்டு வந்தேன். ஒரு வாரத்தில் வைத்தியருக்கு அறிக்கை அனுப்பப்படும் என்று கூறினார்கள்.

வைத்தியர் ஒருநாள் அப்பாவுக்கு தொலைபேசியில் அழைத்து என்னையும் கூட்டிக்கொண்டு தன்னை வந்து சந்திக்குமாறு கேட்டுக்கொண்டார். ஒரு சனிக்கிழமை காலை அவர் கேட்டுக் கொண்ட படி அவரை சென்று பார்த்தோம். மருத்துவ அறிக்கையின்படி மூளையில் ஒரு

சிறு கட்டி இருப்பதாகவும் அதை தாமதிக்காமல் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினார். அப்பாவுக்கும் எனக்கும் இது ஒரு பேரிடியாக இருந்தது. வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைந்த கதை எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. மேலும் வைத்தியர் ஆறுதல் வார்த்தைகள் கூறி அப்பாவை சாந்தப்படுத்தினார். ஆனால் என்னை அல்ல. கட்டி என்றால் அதற்கு காரணங்கள் பல இருக்கலாம்.மேலும் இதை நான் எவ்வாறு மதுமிதாவுக்கு சொல்லுவது என்பது ஒரு போராட்டமாக இருந்தது. அப்பா எதுவுமே பேசவில்லை காரில் ஏறி வீட்டுக்கு வந்தோம். செய்தி அறிந்த எல்லோரும் வீட்டில் அதிர்ந்து போனார்கள். அதுவும் அம்மா ஒவ்வொன்று அழ ஆரம்பித்தார். அவரை சமாதானப் படுத்துவதற்கு அப்பா பகீரதப் பிரயத்தனம் செய்தார். சகோதரியும் சேர்ந்து அழ ஆரம்பித்தாள். அதன் பிறகு வீட்டில் அமைதித்தேவதை வெளியேறிச் சென்றாள். குடும்பமே சோகத்தில் ஆழ்ந்தது.பெரும்பாலும் மூளையில் கட்டி என்றால் அதன் மூல காரணம் பலருக்கு தெரிந்திருந்தது.எனவே குறித்த நாளில் அறுவை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன்.. அதற்கு முன்பு மதுமிதாவின் பெற்றோருக்கு எனது நிலைமையை அப்பா முழுவதும் கூறாமல் அரைகுறையாக கூறினர். அவர்கள் யாவரும் அதிர்ந்து போனார்கள். அதுவும் மதுமிதா உடனே என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனக்கு நேரடியாக தெரிவிக்காததை இட்டு மிகவும் மனம் வருந்தினாள். அன்று புறப்பட்டு வீட்டுக்கு வந்தாள். அவளை சமாதானப்படுத்த குடும்பமே களைத்துப்போனது. சட்டப்படி மனைவியான என்னை எவ்வாறு நீங்கள் புறந்தள்ளி வைக்கலாம் என்று மிகவும் கடிந்து கொண்டாள். அதிர்ச்சியை குறைப்பத ற்காகவே அவ்வாறு செய்யப்பட்டது என நான் பலமுறை எடுத்துக்கூறியும் அவள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இறைவன் சோதிக்கிறான் என்றே எல்லோரும் அவன் மீது பழியைப் போட்டார்கள்.

அறுவை சிகிச்சை நடந்த அன்று எல்லோரும் வைத்தியசாலையில் கூடியிருந்தனர். மாலை நேரத்தில் வழக்கமான நோயாளர் அறைக்குக் கொக்ண்டுவரப்பட்ட போது ஓரளவுக்கு நினைவு திரும்பியிருந்தது. வெட்டி எடுக்கப்பட்ட கட்டி பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு இருப்பதாகவும் அது வந்த பின்னரே நிலைமை நன்கு விளங்கும் என்று வைத்தியர் கூறினார். அதாவது அந்த கட்டிக்கான காரணம் எதுவென்பது கட்டியை பரிசோதனை செய்த பின்பே வெளியிடப்படும் என்றார். இரு நாட்களின் பின்பு மருத்துவ அறிக்கை.யாவரையும் திகைக்க வைத்தது. அந்த அறிக்கை எல்லோரும் பயந்தபடி புற்றுநோய் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. ஆரம்பநிலையில் இருப்பதால் ஊசி மூலம் மருந்து செலுத்தலாம் என வைத்தியர் கூறி எல்லோரையும் சமாதானம் செய்து வைத்தார். ஒரு மாதம் சென்றது முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இரு குடும்பங்களும் வைத்தியசாலைக்கு நாள்தோறும் வந்து போயினர். மதுமிதாஅடிக்கடி லீவு எடுத்துக்கொண்டு என்னோடு வைத்தியசாலையில் தங்கினாள். மன அழுத்தம் காரணமாக அவள் உடல்நலம் பாதிப்படைவதை என்னால் பார்க்க முடிந்தது. எவ்வளவு சொல்லியும் அவள் தொடர்ந்தும் எனது அருகில் இருந்து பணிவிடை செய்தாள்.நோய் படிப்படியாக பல்வேறு இடங்களுக்கும் பரவத் தொடங்கிவிட்டது என்பதை வைத்தியர் எனக்கும் மதுமிதாவுக்கும் ஒருநாள்.அதைக்கேட்டு அவள் மயங்கி விட்டாள். என்னோடு உன் வாழ்க்கையை தொடர்வது முடியாத ஒரு காரியம் எனவே நீ வேறு ஒருவரை மணம் செய்து உன் வாழ்க்கையை வாழ முற்படுவது நல்லது எனக் கூறினேன் அவளால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை சட்டப்படி நான் உங்கள் மனைவி நீங்கள் விரைவில் குணமடைந்து வந்துவிடுவீர்கள் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. எனவே இவ்வாறு இனிமேல் கூறாதீர்கள் என்று என்னைக் கடிந்து கொண்டாள்.

மதுமிதாவின் குடும்பத்தினரும் எனது குடும்பத்தினரும் என்ன செய்வதென்று அறியாது தவித்து நின்றனர் என்னுடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது எனக்கு ஓரளவுக்கு தெரிந்திருந்தது. என்னால் அவளது வாழ்க்கை சீரழிக்கப்பட்ட கூடாது என்பதில் நான் உறுதியாக இருந்தேன். அவளது பெற்றோரிடம் அவளை மறுமணம் செய்வதற்கு வற்புறுத்தும் படி கேட்டுக் கொண்டேன். காரணம் எனது நோய் குறைவதற்கு பதிலாக கூடிக்கொண்டு வந்தது. சில நாட்களின் பின் அவர்கள் ஓரளவுக்கு நான் கூறியவற்றை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் மதுமிதாவை தமது விருப்பத்துக்கு மாற்றுவதற்கு அவர்களால் முடியவில்லை. நாட்கள் செல்லச் செல்ல எனது உடலில் பல மாற்றங்கள் தென்பட ஆரம்பித்தன. இனிமேல் நான் பிழைப்பது கஷ்டம் என்பதை நான் உணர்ந்தேன். வைத்தியரும் அதை உறுதி செய்தார். ஆனால் மதுமிதா அதை ஏற்றுக்கொள்ளவில்லை.இறுதிவரை போராடுவது என்று அவள் முடிவு செய்தாள்.

பிறப்பும் இறப்பும் மனித வாழ்வில் நிச்சயிக்கப்பட்ட நிகழ்ச்சிகள். ஆனால் இறப்பு என்பது அவரவர் பாவ புண்ணியத்திற்கு ஏற்றபடி நிகழும் என்று பெரியவர்கள் கூறுவதை கேட்டு இருக்கிறேன். மின்னாமல் முழங்காமல் ஒருவர் இழப்பை சந்திப்பது வரவேற்கத்தக்க நிகழ்ச்சி ஆனால் நாடோறும் எமனின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு வாழ்வதென்பது இழப்பை விட கொடுமையானது. அதுவும் என்னுடைய வாழ்வில், திருமண பந்தத்தில் ஈடுபடுவதற்கு தயாராக இருந்த வேளையில், இன்னும் ஒருவரின் வாழ்வை கெடுத்துவிடும் சூழ்நிலையில், எமனோடு போராடிக் கொண்டிருந்தேன். நான் மட்டுமல்ல எங்கள் குடும்பம் அத்தனையுமே இதனால் நிலைகுலைந்து போயிற்று. ஒருவரின் வாழ்க்கையில் ஏற்படும் நோயின் தாக்கத்தை காட்டிலும் குடும்பம் அனுபவிக்கும் தாக்கமும் சோகமும் தாங்க முடியாதன. நான் நோயால் வாடுவதை பார்த்து குடும்ப உறுப்பினர்கள் யாவரும் வாடுவது என்னால் சகித்துக் கொள்ள முடியாத பேரவலம் என்றே கூறுவேன். இவ்வாறான ஒரு நிலைமை ஒருவருக்கும் ஏற்படக்கூடாது. வாழ்க்கை ஒரு போராட்டம் என்றாலும் இவ்வாறான ஒரு போராட்டம் மிகவும் கொடியது. ஏற்றுக்கொள்ள முடியாதது.இந் நிலையை ஏற்படுத்திய இறைவனை பலமுறை சபித்துக் கொண்டேன். நிலைமை எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்று யாராலும் கூற முடியாது. இந்நிலையில் வாழவேண்டுமா என்ற எண்ணம் யாருக்கும் ஏற்படுவது இயற்கையே? ஆனால் மதுமிதா எனக்கு உறுதுணையாக இருக்கிறாள் என்பது மட்டும் ஒரு ஆறுதல். ஆனால் அவள் எனக்காக செய்யும் தியாகத்திற்கு ஈடு இணை கிடையாது.

இரண்டு நாட்களாக யாருமே என்னை பார்ப்பதற்கு வைத்தியசாலைக்கு வரவில்லை.இது எனக்கு பெரிய கவலையாக இருந்தது.அதுவும் நாள்தோறும் வருகின்ற மதுமிதா கூட வரவில்லை. இரண்டாம் நாள் அப்பா தொலைபேசியில் அழைத்து அவர்களின் நெருங்கிய உறவினர் ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாக அதனால் அவளால் வர முடியவில்லை எனவும் கூறினர். இது எனக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. மூன்றாம் நாள் என்னுடைய நண்பன் தொலைபேசியில் அழைத்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தான். எதற்காக ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தாய் என்று கேட்டபோது, உனக்கு ஒன்றும் தெரியாதா என்றான். உடனே பேச்சை மாற்றி தேவையில்லாத கதைகள் கதைக்க ஆரம்பித்தான். நான் மிகவும் வற்புறுத்தி கூறியபின் அதிர்ச்சித் தகவலை எனக்கு தெரிவித்தான் அதாவது 401ஆம்பாதையில் காரில் சென்று கொண்டிருந்த மதுமிதா எனக்கு முன்பே கட்டையிலே ஏறி விட்டாள் என்ற செய்தி பேரிடியாக இருந்தது. நானும் கட்டையில் ஏறுவதற்காக எமனைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

❑

● ஜே.பிரோஸ்கான், இலங்கை

# வலி

ஒரு ஆழமான வலி
எனது ஆணிவேர் வரை சென்று
காயத்தினை விரிசலாக்குகிறது
அங்குமிங்கும் நிமிர்ந்து தளிர்க்கும்
நம்பிக்கை விழுதுகளை
மேலும் அது தின்று உமிழ்கிறது
சலத்தினை.
ஒரு கணம் தாங்கொன்னாத
வலிகளை தறுவதில்லையென்ற
கூற்றை நான் பொய்ப்பிப்பதில்
எவ்வித நலனுமில்லை.
அசந்து துயிலும் பல இரவுகளை
வெயில் பொழுதுகள் தின்று ஏப்பமிட்டுவிட்டது.
பனிக்கூதல் காலத்தில் நின்று
வியர்வைகளை வாங்கிக்கொண்டிருக்கிறேன்
தீராத பெரும் வலியை
துடைத்தெரிய நீ ஈன்ற
மழலையின் புன்னகையில் ஒரு துளியை
என் விழிகளுக்கு முன் பரிசளி போதும்
பெரும் வெடிப்பை உண்டு பண்ணிய
வலியை
நான் மெது மெதுப்பான பானம் போல அருந்தி
ஆறுதல் செய்து கொள்கிறேன்.

❑

● ஜி.பிருந்தா இளங்கோவன்

# ஏதேனும் ஒன்று..

ஈர விறகாய்க்
கிடக்கிறது மனது

மின்னலாக உன்
குறுஞ்செய்தி

சின்னதாய் ஒரு
தொலைபேசி முத்தம்

கிழக்குக் கடற்கரைச்சாலை
நெடும்பயணம்

நீ பருகித் தந்த
பாதிக் கோப்பைத் தேநீர்

ஏதேனும் ஒன்றாவது
வேண்டும் எனக்கு.

மழைக்காலம்
வீணாகிறது
அன்பே..

❑

● மெய்யன் நடராஜ்

## வெளிச்சம் துலங்கும்

*மாண்டவர் தொகை நீட்ட*
*-மாபெரும் நோயைத் தந்தே*
*ஆண்டவன் வாழ்ந்தி ருக்கும்*
*-அதிசயம் நடக்கு தன்றோ!*
*தாண்டவ மாடும் நோயைத்*
*-தணித்திட முடியா துன்பம்*
*பூண்டவ ராகி மாந்தர்*
*-புலம்பலும் தொடரு தன்றோ!*
**
*வேண்டவே வேண்டா மென்று*
*_வேண்டுவோர் வேண்டி நிற்க*
*தாண்டிட முடியா வின்னல்*
*-தந்தெமை சாய்க்கும் நோயோ*
*சீண்டியே பார்க்கும் தொல்லை*
*-சீக்கிரம் மாறி விட்டால்*
*தூண்டிய விளக்கைப் போன்றுத்*
*துலங்கிடும் வாழ்வின் ஒளியே!*

❑

---

பெ. விஜயலட்சுமி

## துளிப்பாக்கள்

*கூரையின் மேல்*
*இருட்டோவியம் தீட்டுகிறது*
*வீட்டின் அருகில் மரம்*

❍

*தன்விரலில் இருளை ஏந்தி*
*ஒளியேற்றுகிறார்*
*வாக்காளர்*

❑

● எஸ். ஜெயப்பிரகாஷ், சேலம்

*கணம் தோறும் வியப்புகள்*
*காணுகின்ற காட்சியெல்லாம்*
*கணம் தோறும் வியப்புகள்!*
*குடும்பத்தை பேணாமல்*
*தலைவனுக்கு கொடி பிடிக்கும்*
*தொண்டன் தரும் வியப்பு!*

*தகப்பனை திட்டி விட்டு*
*நடிகனை கொண்டாடும்*
*ரசிகன் தரும் வியப்பு!*
*சுயத்தை மறந்து*
*குடியில் மிதந்து*
*தெருவில் கிடக்கும்*
*குடிமகன் தரும் வியப்பு!*

*விபத்தினை பார்த்தாலும்*
*எட்ட நின்று படம் எடுத்து*
*அலைபேசியில் பகிர்ந்து விட்டு*
*வேகமாய் பறந்து செல்லும்*
*இளைஞன் தரும் வியப்பு!*

❍

*எந்திரமாய் ஓடி ஆடி*
*என்ன பொருள் சேர்த்தாலும்*
*போதும் என்ற மனம் இல்லா*
*மனிதன் தரும் வியப்பு!*
*துக்க வீட்டில் சென்று*
*செத்த உடல் கண்டாலும்*
*மறுநாளே மறந்து விட்டு*
*மாயையில் தொலையும்*
*மாந்தர் தரும் வியப்பு!*
*ஒரு போதும் குறைவதில்லை...*
*எண்ணற்ற வியப்புகள் !*
*தினம் தோறும் தொடர்கிறது..*

❑

● இலட்சுமண பிரகாசம்



# அடுத்த பஸ் எப்ப வரும்?

ரொம்ப நேரம் வெய்யில் வாட்டுவது போல் இருந்தது. பஸ்சுக்கு வெயிட் பண்ணி அலுத்துப் போய்விட்டது ராஜேந்திரனுக்கு. ஒரு டீ குடித்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. 'வாய் தாகத்துக்கு, தலைவலிக்கு சூடா ஒரு டீ குடிச்சாத் தேவலை' என்று தனக்குள்ளே பேசிகொண்டு அருகில் 'குறிஞ்சி' டீ கடையில் நுழைந்தான்.

'ஒரு ஸ்ட்ராங் டீ!' என்று சொல்லிவிட்டு உள்ளே நுழைந்து ஒரு ட்ரேவில் சூடாக பலகாரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்தை நெருங்கினான். காலை நேரம் என்பதால் கடையில் கூட்டம் இருந்தது.

ராஜேந்திரனின் குரலை டீ மாஸ்டர் வாங்கிக் கொண்டாரோ இல்லையோ? தெரியவில்லை. டீ மாஸ்டர் வரிசையாக வைக்கப் பட்டிருந்த பத்து டம்பளர்களுக்கு பாய்லரில் இருந்து சூடான நீரை கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி அதன் உள்ளிருந்து ஆவி வெளிவருவதற்குள் 'சட் சட்'டென ஒவ்வொரு டம்ளர் நீரையும் கீழே ஊற்றினார்.

அதே வேகத்தில் சீனியை எல்லா டம்ளரிலும் ஒருவொரு ஸ்பூனாக போட்டார். அத்தனையும் காலப்ரமானத்தில் சரியாக நடந்து கொண்டிருந்தது. டீக்கான டிக்காஷன், பால் எல்லாத்திலும் கொஞ்சம் மிச்சம் பிடிக்கும் மாஸ்டர்தான். அதனால் தான் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக அந்த ஒரே கடையில் அவரால தாக்குப் பிடித்திருக்க முடிகிறது.

கடையின் முன் கூட்டமாய் நின்றிருந்த கட்சி கரைவேஷ்டியைக் கட்டிக் கொண்டிருந்த நான்கு பேர்களிடம் 'அண்ணே டீ! எடுத்துக்குங்க.' ஒரு ராகம் போல பாடினார் மாஸ்டர். நான்கு பேரும் ஆளுக்கொரு டீ-கிளாஸை வாங்கிக் கொண்டனர். அருகில் இரண்டு பேராயும், தனியாயும் நின்று கொண்டிருந்தவர்கள் தங்கள் கைகளை நீட்டி டீ-க்ளாஸை வாங்கிக் கொண்டனர்.

'ச்சை' ஒரே எண்ணெயர்ய இருப்பதாகச் சொல்லிக் கொண்டே ட்ரேவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மெதுவடையில் ஒன்றை எடுத்து அருகில் கிழித்துப் போடப்பட்டிருந்த செய்தித்தாள் துண்டுளில் எண்ணெய் மெதுவடையை நன்றாக அழுத்தி எண்ணெயை சற்றுக் குறைத்துக் கொண்டு ராஜேந்திரன் சாப்பிடத் தொடங்கினான்.

'மாஸ்டர் ரெண்டு காபி, ரெண்டு டீ." அப்போது தான் உள்ளே நுழைந்த கட்டடத் தொழிலாளர்கள் ஆர்டரை சொல்லிவிட்டு நின்று கொண்டிருந்தனர்.

ராஜேந்திரன், அருகில் இருப்பவரிடம் 'புளியாங்குறிச்சிக்கு பஸ்சு எத்தன மணிக்கு வரும்?" என்று கேட்டான். அவர் "வந்திரும். ஆறாம் நெம்பர் பஸ் வரும். இன்னும் பத்து இருவது நிமிசம் இருக்கு." என்று சொன்னதைக் கேட்டுக் கொண்டு கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தைப் பார்த்தான். கைக்கடிகாரத்தை ஒரு ஆடம்பரம் போல கட்டிக் கொள்வது தான் அவனுக்கு பழக்கம். மற்றபடி செல்போனில் டையம் பார்த்துக் கொள்வதில் தான் அவனுக்கு திருப்தி.

'நேரம் ஆயிட்டே இருக்கு. சீக்கிரம் போனாத்தான் சாயந்திரம் நேரமா திரும்ப

வரமுடியும்." தனக்குள்ளேயே ராஜேந்திரன் பேசிக் கொண்டான். காலையில் எட்டு மணிக்கெல்லாம் சாப்பிடும் வழக்கம் கொண்டவன். இன்று காலையில் ஆத்தூரில் சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று சாப்பிடாமலே வந்துவிட்டான்.

ஆத்தூர் எப்போது வந்தாலும் பஸ்டாண்டு அருகில் குறிஞ்சி டீ கடையில் தான் எப்பவும் டீ சாப்பிடுவது.

நேரம் ஆகிக்கொண்டே இருந்தது. பசிக்கு எடுத்தத் தின்ற மெதுவடையும் அவனை பசியாற்றிருக்கும். டீ மாஸ்டரிடம் சொல்லிய டீ இன்னும் அவனுக்கு போய்ச் சேரவில்லை "டீ. சாப்பிட்டாத் தேவல. என்னா இந்த ஆளு ஒரு டீ போடுறதுக்கு இவ்வளவு நேரம் பண்றான்." எரிச்சல் அடைந்தான் ராஜேந்திரன்.

"அண்ணே! ஒரு டீ சொன்னேன். இன்னுமா போடுறீங்க." என்று எரிச்சலுடன் அவர் காதில் கேட்கும் விதமாகக் கத்தினான். கூட்டம் முன்பை விட சற்று கூடியிருந்தது. புளியாங்குறிச்சி பஸ் வருவதற்கு இன்னும் பத்து நிமிடங்களுக்கு மேல் இருக்கிறது. சலித்துக் கொண்டு, ஒருவாறாக மீண்டும் அவரிடம் போய் "அண்ணே எனக்கு ஒரு டீ சீக்கிரம் போடுங்க. பஸ் வர்ற நேரமாவுது." என்று சொன்னான்.

'இதோ ஒடனே!' என்பது போல் அவனைப் பார்த்துவிட்டு ஒரு புன்னைக்கிற மாதிரியான முகத்தைக் காட்டினார். இப்போது ஏனோ அவனுக்கு எரிச்சல் தோன்றவில்லை. மீண்டும் அவர் கட்சிக்காரர்கள் குடித்து வைத்துச் சென்ற டீ கிளாஸ்களை எடுத்து கழுவு நீரில் போட்டார்.

பேருந்து நிலையத்திற்குள் ஆளுங்கட்சியின் ஆட்சியை எதிர்த்து ஆர்பாட்டம் நடத்துவதற்காக வந்த எதிர்க் கட்சிக்காரர்களின் கூட்டம் அதிகமாகிக் கொண்டிருந்தது. பந்தோபஸ்துக்காக வந்த எஸ்.ஐ. ரவி, ஏட்டு ரத்தினம், கான்ஸ்டெபில் நாலுபேர்.

எதிர் கட்சிக்காரர்களின் ஆர்பாட்டம் தொடங்குவதற்கு அக்கட்சியினுடைய மாவட்டச் செயலாளர் இன்னும் வந்து சேரவில்லை. "ஆர்பாட்டம் ஆரம்பிக்கும் முன்பே ஒரு டீ போட்டறலாம்" என்று தன்னுடன் பந்தோபஸ்துக்காக கூட வந்தவர்களைப் பார்த்துச் சொன்னார் எஸ்.ஐ.ரவி. அவர்களும் சரியென்று தலையாட்டிவிட்டு அவருடன் எதிரில் இருந்த டீ கடையை நோக்கிச் சென்றனர்.

"கந்தா ஆறு டீ-யில ரெண்டு டீ சக்கரைய கம்மியா போடு!" என்று டீ மாஸ்டரை பார்த்தவாறே ஆர்டர் போட்டுவிட்டு எஸ்.ஐ ரவியும், அவருடன் வந்தவர்களும் கடையின் உள்ளே சென்றனர். மற்றவர்கள் தங்களுக்கு டீ, காபி என்றும் ஆர்டர் கொடுத்துவிட்டு உள்ளே இருக்கும் பலகையில் அமர்ந்து கொண்டனர். எஸ்.ஐ ரவி தனக்கு அருகில் கசங்கிய நிலையில் இருந்த அன்றைய செய்தித்தாளை எடுத்து விரித்துப் படிக்கத் தொடங்கினார்

கடையில் கேஷியருக்கு எதிர்த்தாப்பில் சுவரில் டீ.வி. மாட்டப்பட்டிருந்தது. எம்.பி.-3 ப்ளேயரில் 'இளையராஜா கிளாசிக் ஹிட்ஸ்' லிஸ்ட்டில் இருந்து "மாங்குயிலே பூங்குயிலே" பாட்டு ஓடிக் கொண்டிருந்தது. கேஷியர் ஏற்றிவைத்திருந்த ஊதுபர்த்திகள் மணத்தில் தனது இருக்கையில் அமர்ந்து கொண்டு நெற்றியில் சிவப்பு கும்மம் இட்டுக் கொண்டு காட்சியளித்தார். நேரே கேஷியரை நோக்கி வந்த ஒரு நபர் "நாயக்ரே! பாத்து ரெம்ப நாளாச்சு. வீட்டுல எல்லாரும் சௌக்கியமா?" என்றபடி பேச்சு கொடுத்துக் கொண்டே குடித்த காபிக்கும், சாப்பிட்ட பலகாரத்திற்கும் பில்லைக் கட்டினார்.

இடையில் அவனுடைய செல்போன் ஒலிக்க ஆரம்பித்தது. எதிர் முனையில் இருந்து "எங்க வந்திருக்கீங்க."

"ஆத்தூர் வந்துட்டேன். பஸ்டாண்டில் நிக்குறேன். வேலை முடிச்சிட்டு வர்றதுக்கு

நேரமாயிடிச்சி. நான் வந்துடுறேன். நீங்க மத்த பாருங்க." என்று சொல்லி பேசி முடித்துவிட்டு, "நேரமா கௌம்பிருந்தா இன்னேரம் அங்க போயி சேர்ந்திருக்கலாம்" என்று தனக்குள்ளேயே முனகிக் கொண்டான் ராஜேந்திரன். பின் மீண்டும் தன்னுடைய செல்போனுக்குள் மூழ்கினான்.

போனில் வந்து கொண்டிருந்த பேஸ்புக், வாட்ஸ் அப் மெஸ்சேஜ்களை ஒவ்வொன்றாக ராஜேந்திரன் பார்த்துக் கொண்டிருந்தான். அதில் சில மீம்ஸ்கள் வந்திருந்தன. அரசியல் கேலியோ இல்லை நடிகரைப் பற்றிய கேலியோ தெரியவில்லை. அவைகளை உற்றுப் பார்த்து ஒரு நொடி 'களுக்' வெளியே சத்தம் வராதபடிக்கு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். கூட்டத்தில் சிக்கிக் கொண்டிருப்பது போல் இருந்தது. ஆர்டர் செய்த டீ இன்னும் வந்து வரவில்லை. பேஸ்புக், வாட்ஸ் அப்களில் வந்திருந்த கேலிகளையும்,நடிகைகள் குறித்த படத்தையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்ததில் தான் சொல்லிய டீ ஏன் இன்னும் வரவில்லை என்று கேட்கத் தோன்றவில்லை. ஐந்து நமிடங்களுக்கு மேல் அதில் மூழ்கிவிட்டான் என்று தான் சொல்ல வேண்டும்.

எதிர்க் கட்சிக்காரர்களின் கூட்டம் பொது மக்களைவிடவும் அதிகமாகிக் கொண்டிருந்தது. இத்தனை நிகழ்ச்சிகளும் அந்த ஐந்து நிமிடங்களில் ஒன்றன் பின் ஒன்றாக நடந்தேறிக் கொண்டிருந்தன.

போனில் வாட்சப்பில் மூழ்கியிருந்தவனுக்கு நேரம் ஆகிக் கொண்டிருப்பது மறந்து போயிருந்தது. அப்போது ஒரு ஆள் டீயையும், காபியையும் ஆர்டர் கொடுப்பது காதில் விழுகவே மீண்டும் எரிச்சல் அடைந்தான். கடுப்பும், ஆத்திரமும் இப்போது அவனை ஆட்கொண்டிருந்தது. நேரே கடையின் முன் நின்றுகொண்டு டீயை போட்டுக் கொண்டிருந்த மாஸ்டரை நோக்கிச் சென்று..கத்த ஆரம்பித்தான்.

'சொல்லி எவ்ளோ நேரம் ஆவுது. இல்ல டீ சொல்லி எவ்ளோ நேரம் ஆவுதுன்னேன். நானும் பாக்குறேன். அவன் வர்றான், இவன் வர்றான், வந்தவன் போனவனுக்கெல்லாம் டீ, காப்பி போட்டுத் தர்றே. முன்னேயே ஒரு தரம் வந்து சொல்லிட்டுப் போனேன். அப்பியும் ஒம்பாட்டுல காதுல வாங்காத செவுடனாட்டம் இந்தக் காதுல வாங்கி அந்தக் காதுலவுட்டுட்டு ஒம்பாட்டுல இருக்கற. என்னையப் பாத்தா ஒனக்கு கேனயனாட்டம் தெரியுதான்னேன். இல்ல என்னான்னு தான் கேக்குறன்" என்று பொரிபொரியாய் கோவத்தில் வெடித்தான் ராஜேந்திரன்.

'ஏ இருப்பா. இப்ப என்னத்துக்கு கத்துற. டீ ஆர்டர் சொல்லிருக்கல்ல. வரும். ஒனக்கு முன்னால ஆர்டர் கொடுத்தவங்களுக்கெல்லாம் கொடுக்க வேண்டாமா? சார். சாருன்னு டீ போட்டு எத்தன மொற கூப்டுறது. எனக்கென்ன பத்து கையா இருக்கு. அடுத்து ஒங்களுக்குத்தான் போடுறேன்" என்று, தான் அவன் சொன்ன டீ ஆர்டரை கவனிக்காததை மறைத்து சமாதானம் படுத்த முயல்வது போல் பேசினார் டீ மாஸ்டர்.

"கடையும் ஒன் டீ-யும். ஆளு மயிரப் பாருடா." என்று கத்தினான். கட்சிக்காரர்கள் சிலர் மாஸ்டரிடம் இருந்து கொஞ்சம் தள்ளி நின்று கொண்டு பேசியபடி இருந்தனர். அருகில் வேறு சில கட்சிக் காரர்களும் சில 'ட்ராபிக்' போலீஸ்காரர்களும் பேசியபடி ஒரு பக்கம் டீ குடித்துக் கொண்டிருந்தனர்.

'இந்தா டீ!" என்று பரபரப்புக்கு இடையில் ஒரு டீயை வேண்டா வெறுப்பாக போடுவது

மாதிரிப் போட்டு, கிளாஸ்ஸை ராஜேந்திரனுக்கு அருகில் வைத்தார் டீ மாஸ்டர். எரிச்சல் அவனுக்கு மேலும் பொங்குவது போல் இருந்தது.

மனசுக்குள் கெட்டவார்த்தைகளால் திட்டிக் கொண்டே டீயை எடுத்துக் குடிக்கத் தொடங்கினான் ராஜேந்திரன். காலையில் சாப்பிடாமல் வந்ததால் பசி அவனைக் கிள்ளிக் கொண்டிருந்தது. டீ கிளாஸைப் பிடித்துக் கொண்டு உள்ளே சென்று பசி கிள்ளிக் கொண்டிருந்த வயிற்றுக்கு மேலும் ஒரு மெதுவடையை எடுத்தத் திண்ணத் தொடங்கினான். நேரம் ஆகிக் கொண்டே இருந்தது. புளியாங்குறிச்சி பஸ் வருகிற நேரம். இந்த பஸ்ஸை விட்டால் மீண்டும் பனிரெண்டு மணிக்குத்தான் வரும். நேரத்தில் வீடு போய்ச் சேரமுடியாது. எண்ணிக் கொண்டே எரிச்சலோடு டீயை குடித்துக் கொண்டிருந்தான்.

குடித்து முடித்த டீ, ரெண்டு வடைக்கும் இருபது ரூபாய்க்கு 500 ரூபாய் தாளை கேஷியரிடம் நீட்டினான்.

'இரவது ரூவா சில்ற இல்ல.'" என்று கேஷியர் ராஜேந்திரனிடம் கேட்டார்.

"இல்லிங்க"

"பாருங்க. சட்ட பாக்கெட்டுல இருக்கும்" என்று கரகரத்தக் குரலில் கேஷியர் கேட்டார்.

"அதான் இல்லென்னு சொல்லிட்டனே."

'500 ரூவாயக்கு எங்கிருந்து நான் சில்ற தருவேன்" என்று திமிர் தோரணையாக கேஷியர் சொன்னார்.

"இல்ல. எங்கிட்டெ சில்லற கிடையாது" என்று சொன்னான்.

"பக்கத்துல எங்கியாவது மாத்திட்டு வாங்கியாந்து கொடுங்களேன்."

"அதுக்கெல்லாம் எனக்கு நேரமில்ல. எனக்கு பஸ்சுக்கு நேரமாயிடிச்சி. சீக்கிரம் மீதிக் காசைக் கொடுங்க" என்று குரலை உயர்த்திய தொனியில் ராஜேந்திரன் பேசினான்.

ராஜேந்திரனின் முகத்தை ஒரு மாதிரியாய் பார்த்துவிட்டு, கேஷியர் 500 ரூபாய் தாளை வாங்கி நோட்டை ஒருபுறம் மேலும் கீழும் பார்த்தார். நோட்டின் மேல்பகுதியில் நடுமத்தியில் "வெள்ளை டேப்" ஒட்டடப்பட்டிருந்தது.

"வேற நோட்டு குடுங்க. இது கிழிஞ்சி டேப் ஒட்டியிருக்குது" என்று கேஷியர் சொன்னார்.

நோட்டை வாங்கிப் பார்த்தான் எரிச்சலுடன். நோட்டில் மேல் நடுப்பகுதியில்

ஒரு துண்டு 'வெள்ளை டேப்' ஒட்டப் பட்டிருந்தது.

"இந்த நோட்டுக்கு என்னா?. நல்லாத் தான இருக்கு. மேல ஒரு ஓரத்துல கொஞ்சம்தான ஒட்டியிருக்கு. காலையிலதான் ஏ.டிஎம்-ல இருந்து எடுத்தன். நோட்டு செல்லும்." என்று ராஜேந்திரன் சொன்னான்.

“பத்து இரவதுன்னா பரவாயில்ல. இது 500 ரூவா நோட்டு. வேற நோட்டு இருந்தா குடுங்க. இந்த நோட்ட வெச்சி நா எப்பிடி வியாபாரம் செய்யறது?” -கேஷியர்.

“பத்து இரவது ரூவா என்கிட்டேயும். இல்ல. இந்த ஒரு நோட்டு தான் இருக்கு.”-ராஜேந்திரன்.

பேருந்து பின்புறம் கடைத்தெருவில் இருந்த வங்கியொன்றில், கல்யாண வீட்டிற்கு மொய்ப் பணம் வைக்க மற்ற செலவுகளுக்கு என்று ஐயாயிரம் ரூபாயை செலவுகளுக்காக ஏ.டி.எம் மெஷினில் இருந்து எடுத்தான். தன்னிடம் வேறு நோட்டு எதுவும் இல்லை என்று ஒரே வார்த்தைதயில் முடித்தான்.

கேஷியர், எரிச்சலுடன் கையில் நீட்டிய நோட்டையும், ராஜேந்திரனையும் பார்த்தார்.

“என்ன எழவுடா இது. காலையிலேயே வந்துருக்கு. சனியன்”. என்று வாயில் முனகிக் கொண்டே வெறுப்புப் பார்வையுடன் அவனிடம் இருந்து 500 ரூபாய் நோட்டை வாங்கி உள்ளே வைத்தார். “இருக்கற சில்லறைய பூராம் இவனுக்குக் கொடுத்துட்டு, சில்லறைக்கு நாம எங்க போறது?” என்று சொல்லிக் கொண்டே,

தன்னையும் மீறி எழுந்த கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல் கேஷியரை தாண்டி டேபிளை துடைப்பதற்காக சென்றவனை “டே நாயே! ஒழுங்கா டேபிளை தொடச்சியா? சனியன், ஆளு மசுரப் பாரு. வந்து உசுர வாங்குதுங்க.” என்று டேபிளை துடைத்துக் கொண்டிருந்த சிறுவனை கெட்டவார்த்தையில் திட்டினார்.

வாங்கிய 500 ரூபாய் நோட்டை உள்ளே வைத்துவிட்டு, நான்கு நூறு ரூபாய் தாள்களும், மீதியை ஐம்பது ரூபாய் தாள்களுமாக மீதியை ராஜேந்திரனிடம் கொடுத்தார். கேஷியர்.

ராஜேந்திரன் நோட்டுக்களை எண்ணி கிழிசல் இல்லாமல் இருக்கிறதா? என்று முன்னும் பின்னும் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டு, தன்னுடைய பர்சில் பணத்தை வைத்துக் கொண்டு, டீ கடையில் இருந்து வெளியே வந்து, கடையையும் டீ மாஸ்டரையும், எரிச்சலும், கோபத்துடனும் கேஷியரை அடிப்பது போல் முறைத்துப் பார்த்துவிட்டு வெளியேறினான்.


இது நடந்து கொண்டிருந்த சமயத்தில் எதிர்க்கட்சியினர் நடத்திக் கொண்டிருந்த ஆர்பாட்டக்காரர்களின் போராட்டமும், அதனால் பேருந்து நிலையம் முதல் ரோடு முழுவதும் பேருந்துகள் நுழைய முடியாமல் திருப்பிக் கொண்டு வேறுபக்கம் சென்று பேருந்து நிலையத்தை அடைந்திருந்தது.

டீ கடையிலிருந்து பேருந்து நிலையத்திற்குள் நுழைந்து கொண்டிருந்த போது ராஜேந்திரன் செல்லவேண்டிய ஆறாம் நெம்பர் புளியங்குறிச்சி பஸ் சென்றுவிட்டிருந்தது தெரிந்து எரிச்சல் பட்டுக் கொண்டான். எதன் மீது எல்லாமோ இப்பாது அவனுக்கு கோபம்

வந்தது. தன் மனைவியை, டீ கடை மாஸ்டரை, கேஷியரை என்று தனக்குள்ளேயே வக்கிரமான கெட்டவார்த்தைகளால் திட்டினான்.

அடுத்த பஸ்சுக்கு இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது என்று தன்னுடைய செல்போனில் நேரத்தைப் பார்த்தான். மணி பத்ததை மணியை கடந்து கொண்டிருந்தது. ❑

● எஸ். ஜெயஸ்ரீ




# கவனங்களும் கவலைகளும்

இனிமையான இசையை வெளிப்படுத்தும் தந்திக்கருவியில், ஒவ்வொரு கம்பியும் ஒவ்வொரு சுரத்தை வெளிப்படுத்துகிறது. அதன் கலவையின் வெளிப்பாடு அருமையான, இனிமையான இசையாகும். அதுபோல சிறுகதை, நாவல், கட்டுரை, பக்தி இலக்கியம், நவீன கவிதை, மரபுக்கவிதை, சொற்பொழிவு என ஏழு தந்திகளால் இழுத்துக் கட்டடப்பட்ட இலக்கிய இசைக்கருவியைத் தன்னகத்தே கொண்டுள்ளவர் வளவ. துரையன்.

தன்னுடைய பதினெட்டு வயதிலிருந்து இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டுள்ள இவர், தன்னுடைய நாற்பத்தேழாம் வயதிலிருந்து புத்தகங்கள் எழுதி வெளியிடத் தொடங்கி உள்ளார். தற்போது அறுபத்தைந்து வயது முடிவடையும் தருவாயில் அவருடைய பதினோரு நூல்கள் வெளி வந்துள்ளன. அந்த வகையில் புதுக்கவிதைகள் தொகுப்பு வரிசையில் இது

இரண்டாவது நூலாகும்.

அறுபத்து மூன்று கவிதைகள் அடங்கிய 'ஒரு சிறு தூறல்' என்ற இத்தொகுப்பு, எத்தகைய சொல் விளையாட்டும் இல்லாமல், மிக எளிமையான சொற்களால் புனையப்பட்ட கவிதைகள் அடங்கிய தொகுப்பாக வெளிவந்துள்ளது.

தினசரி வாழ்க்கையில் அவரவர்க்கும் கண்ணில் படுகின்ற காட்சிகள், அனுபவிக்கக் கிடைக்கின்ற தருணங்கள் எல்லாமே வளவ.துரையன் தூரிகையில் எளிமையான கவிதைகளாகின்றன. 'இது என்னுடைய கவிதை' என்று ஒவ்வொரு வாசகனும் உணர வைக்கின்ற அருமையான கவிதைகள்.

இத் தொகுப்பில் அடங்கி உள்ள கவிதைகளை இயற்கை, சமூகம், வெறும் கவனிப்புகள் என்று மூன்று தலைப்புகளில் பிரித்துக் கட்டிவிட முடிகிறது. வளவ. துரையனின் இயற்கை மீதான அக்கறையும், அது அழிவது பற்றிய கவலையும் சில கவிதைகளில் வெளிப்படுகின்றன.

'அழுகை, என்ற கவிதையில் குளம் வற்றிப் போகும் வருத்தத்தைக் கவிஞர் வெளிப்படுத்துவதில் மேலும் அழகு சேர்க்கும் அடிகள்

"தனக்காக இல்லையெனினும் / கரைப்புல்லின் கடும் பசிதீர / எங்கள் ஊர்க்குளம் / அழுது கொண்டிருக்கிறது"

எனும்போது குளத்தை உயிர் பெறச்செய்கிறார் இவர். அஃறிணை எனப்பார்க்கப்படும் பொருளை உயர்திணைக்கு உயர்த்துகிறார்.

தலைப்புக் கவிதையான 'ஒரு சிறு தூறல்' கவிதையில் மழை வரும் என்ற எதிர்பார்ப்புப் பொய்த்து விடுகிறது. மழையை எதிர்பார்ப்பதில் மனிதர்களைக் கொண்டு வரவில்லை அவர். புல்லும், குளமும், மிருகங்களும், பறவைகளும் நீரை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. (மனிதன் நிலத்தடி நீரை எல்லாம் உறிஞ்சி விடுகிறானே என்பதை மறைமுகமாய்ச் சொல்கிறார் போலும்) அவை எல்லாம் ஏமாந்து போகின்றன கவிதையின் முடிவில்.

"குருட்டுப் பிச்சைக் காரனுக்கு / விழுந்த செல்லாக்காசு போல / ஒரு சிறு தூறலுடன் ஓடிப் போயின மேகங்கள்"

என்று முடிக்கும் உவமை அருமை.

சமூகத்தின் மீதான வருத்தம், கோபம் இவற்றை வெளிப்படுத்தும் சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். 'பள்ளம்' கவிதை 'உலகம் சமநிலை பெற வேண்டும்' என்பதை வலியுறுத்துவதாக இருக்கிறது. மேடும் பள்ளமும் குறீயீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒடுக்கப் பட்டோர் உள்ளக் குமுறல்கள் எப்போது வேண்டுமானாலும் வெடித்துக் கிளம்பலாம். அது புரியாமல் மேல்தட்டிலுள்ளோர் களித்துக் குதூகலித்து அவர்களை மேலும் மேலும் ஒடுக்குவதை ஒடுக்கப்பட்டோர் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதை அழகாக வெளிப்படுத்தும் கவிதை அது.

'அதற்குக்கூட' கவிதை நவீன தாராளமயப் பொருளாதாரத்தைச் சாடும் விதமாகவும் இன்றைய விவசாயிகள், இந்தக் கொள்கையால் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்

என்பதை வெளிப்படுத்தும் விதமாகவும் இருக்கிறது. "ஊரான் ஊரான் தோட்டத்தி லே......................." என்ற பட்டுக் கோட்டையாரின் பாடல் அடிகளை நினைவுபடுத்தும் கவிதை இது.

"சிறகுகள்" "நெருப்பு" இரண்டு கவிதைகளும் இன்றைய சமூகப் போக்கினை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளன. 'நெருப்பு' கவிதையில்

"வருங்காலம் என்ன சொல்லும் / தனி ஒருவன் / போரில்லாமலேயே / இதைச் செய்தானென்று"

என்பதில் அவருடைய வருத்தம் கொப்பளிக்கிறது. பண்பாடு, கலாச்சாரம் என்ற நம் வேர்கள் எதைப் பற்றியும் தெரிந்து கொள்ளாமல் நவீன யுகத்திலேயே திளைக்கும் இன்றைய சமூகத்தின் மீதான வருத்தம் இது.

அங்கதச் சுவை மிகுந்த கவிதைகள் சில இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. அவை வாசிப்போரை நகையாட வைக்கிறது. 'வேணும்' என்ற கவிதையை ஒரு மூதாட்டி பேசும் தொனியிலேயே எழுதியிருப்பது சிறப்பென்றால்,

"அரிசி வாங்காட்டியும் / கிரண்டர் வாங்கணும்ல" என்று முடிப்பது அக்கவிதைக்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது. இலவசங்களில் மகிழ்ந்து போகும் நம் மக்களை நினைத்து அழுவதா? நம் அரசு இயந்திரங்கள் இப்படி இருக்கின்றதே என்று நொந்து கொள்வதா? என்று யோசிக்க வைக்கிறது. "மாயாஜாலம்" என்ற கவிதையில் ஓட்டுக்காக வந்து நிற்கும் அரசியல்வாதிகளை மிகுந்த நகைச்சுவை உணர்வோடு காட்டுகிறார் கவிஞர். இதெபோல 'மின்வெட்டு' 'தாத்தாக்கள்' (முதியோர் நிலைமை), காதும் கடனும் (செல்போன் பேச்சு) எனப் பல கவிதைகள் பல்சுவையுடன் இடம் பெற்றுள்ளன.

வெறும் கவனிப்புகளாகவே அமைந்துள்ள சில கவிதைகள் சிந்திக்கவும் மனத்தைத் தொடுவதுமாக அமைந்து உள்ளன. 'ஒரு நாயின் மரணம்' (மரணம்); கோயிலுக்கு வருபவர்கள் (சலனங்கள்); வீதியில் கிடக்கும் மாத்திரைத்தாள் (எதற்கோ) எனப் பார்வையில் படும் பல விஷயங்களைக் கவிதையாக்கும் இவர் கலையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

பெண்ணின் நிலையைச் சொல்லும் ஒரு கவிதை 'அசை போடல்'; பல பெண்கள் தங்களுயைய திறமைகளை வெளிக் காட்டமுடியாமல், குடும்பம், உறவுகள் எனச் சுருங்கிப் போக வேண்டிய கட்டாயத்தை, யதார்த்தமாக எந்த விதக் குற்றம் சாட்டும் தொனியும் இல்லாமல் முன் வைத்திருப்பது பாராட்டத்தக்கது.

'மறைவாய்' 'எண்ணம்' என்ற கவிதைகள் தத்துவ விசாரத்தைத் தூண்டுபவையாக உள்ளன. பல தளங்களில் சுழன்று சுழன்று சிந்திக்கத் தூண்டுவதான இத் தொகுப்பு பாராட்டுக்குரியது. வளவ. துரையன் மிகுந்த பாராட்டுக்குரியவர். சிறப்பான அட்டைப் படத்துடன் வெளியிட்ட தாரிணி பதிப்பகத்தார் பாராட்டுக்குரியவர்கள்.

(ஒருசிறு தூறல் - கவிதைத் தொகுப்பு - வளவ. துரையன் - பக்: 72; விலை: ரூ 100; வெளியீடு : தாரிணி பதிப்பகம், 4ஏ, ரம்யா பிளாட்ஸ், 32/79 காந்தி நகர் 4 ஆவது பிரதான சாலை, அடையார், சென்னை - 600 020)

● கோபி சேகுவேரா

நேற்று மாலை டீ கடைக்கு சென்றபோது
ஆர்கானிக் முட்டை போண்டாவை பற்றி கேட்டறிந்தேன்
ஒரு தத்துவத்தை
ஃபேண்ட் பாக்கெட்டிலிருந்து தவறவிட்ட இடைவேளையில்
நாட்டுச்சக்கரையின் கிருபையால்
மீண்டும் ஆர்கானிக் என்கிற வார்த்தை
என் வாழ்வின் பிளாஸ்டிக் பைகளோடு சிக்கிக்கொண்டிருந்தன
பேப்பர் கப்பின் உள்ளிருந்து எழுந்த வந்த குரலுக்கு
ஆர்கானிக் பாலுக்கென்று
பிரத்யேக வடிவம் ஏதும் தெரியவில்லை

அனேக இரவுகளில்
ஆர்கானிக் பற்றி நிறைய மனப்பாடம் செய்துகொண்டேன்
மெய்மறந்து மதுவருந்திய மாலைகளில்
ஆர்கானிக் பூண்டு மிக்சரை தேடி அலைந்திருக்கிறேன்
ஒரு தனித்த மழை நாளில்
கேரிபேக்கில் வாங்கி வந்த ஜிலேபியில்
ஏதேனும் ஆர்கானிக் இருக்கிறதா என்று
சுயபரிசோதனை செய்துகொண்டேன்

சௌகர்யமாக இருந்தவனுக்கு
உடலின் ஊழி எழுந்திட
தலைமேல் இன்று பொசுக்கென்று ஏறிக்கொண்டது
கொம்பூதிய ராஜகிரீடமாய் ஆர்கானிக் காதல்.

❑



● சசிகலா திருமால்

# பூமி காப்போம்

விளைநிலங்கள் எல்லாம்
விலைநிலங்களாக்கப் பட்ட நிலையில்
வாழ வழியில்லாமல் வலியோடு வாழ்க்கையை
முடித்துக் கொண்டிருக்கிறார்கள் எமது
விவசாயிகள்..
மண்ணில் விதையை விதைப்பவர்கள்
அந்த விதையோடு சேர்ந்து தாங்களும்
மண்ணிற்குள் விதைக்கப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள்..

சாகுபடி செய்த விவசாயிகளை
சாகும்படி செய்வதில் தான்
சாதனை படைத்துள்ளோம் நாம்
நவீன இந்தியாவில்..
சேறும் பூமிதான் என்றறியவில்லை என்றால்
சோற்றுக்கு வழியின்றி நிற்கும் நிலை வரலாம்..
விவசாயம் காப்போம்..

❑

● யாழ் ராகவன்

கொட்டித் தீர்த்த மழையில்
ஒளிர்கிறது
வண்ணங்களின் வன்மம்

புயல்காற்றின் ஆதுல்ய சிரிப்பில்
அடையாளமாகியிருக்கிறது
இலைகளை இழந்த மரம்

நகங்களின் அதி தீவிரம்
கீறலிட்டிருக்கிறது குயிலின் குரலை

நாயின் குடலை பிதுக்கி
நடுச்சாலையில் சிதறடித்திருக்கிறது
தறிகெட்டு ஓடிய மஞ்சள்பேருந்து

வடநாட்டு வாகனங்கள் மலிந்த
மோசமான நிலப்பரப்பில்
தேவையாக இருக்கிறது மேலுமாக
வேகத்தடைகள்

கணநேரப் பாய்ச்சலில்
புதிய விண்கலம் தரையிரங்கிய
காலத்தில்
கண்மறைக்கும்
வெளிச்சத்தின் ஜாலம்

❑

● திருமதி. இராம.பெருமாள் ஆச்சி, சென்னை

கவிதை நூலைக்
கையிலெடுக்கிறேன்

வெளிச்சுவரருகே முணுமுணுக்கின்றன
மர இலைகள்..

இன்னிசைப்பாடலொன்றை
இசைக்கின்றது குயில்..

ஓவெனக் கூச்சலிடுகின்றனர்
விளையாடும் குழந்தைகள்..

காய்கறிகளின் பெயர்களை
கூவிச்செல்கின்றார் தள்ளுவண்டிக்காரர்.

அடுக்ககத்தின் கீழ்த் தளத்தில
எரிவாயு உருளையை உருட்டும் ஓசை

எதிர் வீட்டின் அழைப்பு மணியைக்
கதற விடுகின்றார் பூக்காரப்பெண்மணி..

அட்டைப்படத்திலிருக்கும் நவீன சித்திரம்
புருவ முடிச்சுகளில் புதிராகின்றது.

ஒலிப்பான் அலற ஓய்விடம் வரும்
மகிழுந்தைத் தவிர்க்கும் செவிகள்.


ஆழப்பெருமூச்சொன்றை
உள்ளிழுக்கத் தூண்டும் மசாலா மணம்..

திசை திருப்புதல் தவிர்த்துச் சில பக்கங்களில் விரைகின்றன விழிகள்..

வேடிக்கைகளின் வீரயத்தைக் குறைக்குமளவிற்குக் காரமில்லை..
வளமற்ற சொற்களின் வார்த்தைக் குழம்பு.. ❑

சிறுகதை

கிருஷ்ணசிங்கம்.



# ஏமாற்றம்

அவனின்பெயர் சூரியகுமாரன். அவனை எல்லோரும் சூரியன் என்றுதான் அழைப்பார்கள். வெள்ளை நிறத்திற்குக்கும் கம்பீரமான உடற்கட்டுக்கும் கல்வியறிவுக்கும் அந்தப்பெயர் அவனுக்கு முற்றும்பொருந்தும்.

கொழும்பு கொச்சிக்கடையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவனின் தந்தையார் இளையதம்பிக்கும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த தவமலருக்கும் மூத்தமகனாகப்பிறந்த சூரியன் பெற்றோரின் சொல்லைப்பேணும் சிறந்தகுணமுள்ள வாலிபனாவான்.

ஆடைத்தயாரிப்பு நிறுவனமொன்றில் இளையதம்பி எழுத்துவினைஞராகப் பணிபுரிந்துவந்தார். சூரியன் அங்கே கொம்பியூற்றர் தொழில்நுட்பவாதியாக இணைந்தசமயம் இளையதம்பியின் நண்பரும் நோர்வேநாட்டில் ஆடையகமொன்று நடத்துபவருமான அருளானந்தம் தனது கொள்வனவு நோக்கமாகக் கொழும்புக்குவந்தவர். இரின்நண்பரான இளையதம்பியைச்சந்தித்துறவாடி மகிழ்ந்தார். அவரின் அழைப்பையேற்று வீட்டிறுகுச்சென்றவர் அங்கு விருந்துண்டு இளைப்பாறியவேளை..

சூரியனைத் தனதுமகள் உதயாவுக்குக் கலியாணம் கட்டிக்கொடுக்க விரும்புவதாகக்கூறி அவளின் பேரழகுமிகுந்த படங்களைக்காட்டி அவர்களின் மனத்தில் ஆசைகளைவிதைத்து பலவாக்குறுதிகளைக் கொடுத்துச் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டார்..

சூரியனதும் அவரின்மகள் உதயாவினதும் ஒப்புதல் அத்தாட்சிப் பத்திரங்களைப்பெற்று திருமணத்துக்கான அரசசட்டநடவடிக்கைகள் அனைத்தையும்புரிந்து அருளானந்தம் சூரியனை நோர்வேக்கு அழைத்துவந்தார்.

மணநிகழ்;வுகள் நோர்வே ஒஸ்லோநகரில் ஆடம்பரமாகவே நடந்தன. பேரழகுமிகுந்த பெண்ணான உதயா வெள்ளிஜரிகை வேலைப்பாடுகள் கொண்டதொரு றோஸ்நிறச் சேலையை உடுத்து மெல்லிய சிகப்புநிற இரவிக்கையையும் தரித்திருந்தாள். அவளது பளிங்குமுகம் மென்மேலும் ஒளிபெற்றுப் பிரகாசித்;தது. உதயாவின் உயர்ந்தழி;தாற்றமும் உறுதியான உடற்கட்டும் சூரியனை வியப்பிலாழ்த்தியது.

கலியாணவீடும் வரவேற்புக் களியாட்டங்களும் ஓய்ந்து முதலுறவும் முடிந்துவிட்டது. புதியதொரு வாழ்க்கைப் பூஞ்சோலையுள் மகிழ்வுமிகவே உலாவுவதாக அவன் உணர்ந்து பூரித்தான்.

உதயா சூரியனோடு பெரிதாகக் கதைக்கமாட்டாள். அவளின் பதில்கள் எப்பொழுதும் மிகச்சுருக்கமாகவே வந்துவிழும். தனது தோழிகளோடு கதைக்கும்போதுமட்டும் சிரிப்புஇளையோடும் நொஸ்க்மொழியில் நீண்றநேரம் உரத்துக்கதைப்பாள். அவள் எப்பொழுதும் தனிமையில் அமர்ந்திருக்கவே விரும்பவாள்.

ஏதோவொரு ஆழமானயோசனையில் அவளின் மனமலைவதையும் முகஞ் சோர்ந்து பொலிவிழந்து போவதையும் அவதானித்த சூரியன் மெல்லநெருங்கி அவளை அணைத்தபோதெல்லாம் கையால்தட்டி அவனை விலதிவிட்டு இருக்கையிலிருந்து எழுந்துபோவதை அவள் வழக்கமாக்கிக் கொண்டாள். அதையெண்ணி அவன் கவலைப்படுவான்.

அப்பா!.. நாங்கள் தனிக்குடித்தனம்பண்ண எனது வீட்டுக்குப் போகப்போகின்றோம்.

என்று உதயா கூறவும். தந்தையார் அருளானந்தம் அதற்கு மறுப்புரைக்கவும். தாயாரும் கணவரோடுசேர்ந்து அவளை வலியுறுத்தவும். தமக்கையார் உதயா சொல்லுவதுதான் சரியென்று அவளின் தங்கைமார் இருவரும் முடிவெடுக்கவும். அவர்களின் நொஸ்மொழி விவாதம் என்னவென்று புரியாது சூரியன் அதிர்ந்துவிழிக்கவும் அன்றையப் பின்பொழுதுகரைந்து இரவுவந்து தழுவியது.

உதயா!.. என்னநீங்கள் பெரிதாகப்பேசி அமளிப்பட்டு ஆளுக்காள் இடைமறித்துக் கதவளிப்பட்டு இறுதியாகவோர் தீர்வுக்குவந்தீர்கள். நானதை அறிந்துகொள்ளலாமா.

என்று அவன் கேட்கவும். சிரத்தையற்றுச் சிரித்தஉதயா

அதுவா.. நாங்கள் நாளைக்கு என்னுடைய வீட்டுக்குப்போய் அங்கைதான் தனிக்குடித்தனம் பண்ணப் போகின்றோம். என்றவள் சொல்லவும் சற்றுக்கோபமாக விழித்தவண்ணம்.

எங்களைப் போகச்சொல்லி எல்லோரும்சேர்ந்து விரட்டினவையோ.

என்றவன் கேட்கவும். தன்தலையிலடித்துக் கொண்டவள். வெறுப்போடு..

உனக்கொரு நாசங்கட்டும் விளங்குதில்லை. உன்னோடை நானிருந்து என்னதான் செய்யப்போகின்றேனோ தெரியாது..

என்று புறுறுத்தவள்.. ஆங்கிலத்தில் அவனுக்கு நடந்தவை எல்லாவற்றையும் கூறவே..

உதயா! நீரெடுத்தமுடிவுதான்சரி. நாங்கள் தனிமையாக இருந்தால் எப்பொழுதும் எல்லாவற்றுக்கும் நல்லது. என்றுகூறிய சூரியன் அவளைநோக்கிக் கள்ளமாகச்சிரிக்கவே..

நாளைக்கு நான் வேலைக்குப் போகவேணும். எனது லீவுமுடிந்தது. அப்படியே உன்னை நொஸ்மொழி படிக்கிறதுக்கு பள்ளிக்கூடத்திலை சேர்க்கவேணும்.

எனக்கு இங்கிலீசுதெரியுமே பிறகெதற்கு இந்தப்படிப்பு..

எடமக்கு! நொஸ்க்மொழி படிக்காமல் இஞ்சைவேலை தேடமுடியாது. கொம்பியுற்றர் வேலைக்கும் நொஸ்க்மொழிதான் முக்கியம்;.

என்றவள் அவனை விட்டுடகன்றுசென்று தாயாரோடும் தங்கைமாரோடும் உரையாடியபடி தனது வீட்டுக்குத்தேவையான பண்டபாத்திரங்களை எடுத்தடுக்குவதில் மும்முரமானாள்.

மறுநாள் உதயாவின் வீட்டுக்கு வந்தாகிவிட்டது. மாளிகைபோன்ற அந்தவீட்டைச் சுற்றிக்காட்டியவள்..

எப்படியிருக்ககிறதுவீடு. இதுவெனது சொந்தவுழைப்பால் வாங்கியது. இதன் விலையைச் சொன்னால் நீயிங்கே ஏங்கிவிழுந்திவிடுவாய்.

ஏனிந்தக் கிராமப்பக்கத்தில் வாங்கினநீர். வரும்போது நான்பார்த்தனே அக்கம்பக்மெல்லாம் காடும் புதருமாகத்தெரிந்தது. இரண்டு மான்கள் ஓடுவதையும் கண்டனான். வேறென்ன ஆபத்தான மிருகங்கள் இருக்குமோதெரியாது.

சூரியனின் பேச்சைக்கேட்டு உதயா சிரித்தவாறு

பெரியகொம்புகளுள்ள மிருகமான மரைகளுமிருக்கு. நரிகளுமிருக்கு. இதுபெருங்காடல்ல ஒஸ்லோநகரத்தினொரு எல்லைப்பிரதேசம்தான்சுரங்கவளிறெயிலும்பஸ்போக்குவரத்துமுண்டு. அந்தாபார் வீட்டுக்குமுன்னாலையே பஸ்தரிபிடமுள்ளது. டைக்சிசேவிசும் இருக்குது. உந்தச்சந்தியிலையே பல்பொருள் அங்காடியிருக்கு. டிக்சோபார் வையின்சொப் எல்லாம் அங்கேயிருக்கு அதன்பின்னாலை றெயில்நிலையமுமிருக்கு.

எல்லாவசதியுமுள்ள அமைதியான இடமிது. பெருங்கோடீஸ்வரர்கள் விரும்பிவாழுகின்ற உல்லாசமான கிராமமிது. சரிநீவா.. அம்மா போட்டுத்தந்த பிரியாணியிருக்கு சாப்பிடுவோம்.

என்றவள் விரைந்துசென்றதும் பனிபெய்வதையும் அதுதேங்கிக் குவிவதையும் ரசித்தவன் உடலதிரும் குளிரால் நடுங்கியபடி வீட்டுக்குள்சென்றான்.

நாட்கள்நகர்ந்தன. அவனின் கல்விக்குரிய வேலையங்கே கிடைக்கவில்லை. மாமனார் அருளானந்;தம் தனது கடையில் மருமகனுக்கு வேலைகொடுத்து மனஞ்சோர்ந்துவிடாது அவனை ஊக்குவித்தார்.

எல்லாம் எங்கடை நாட்டுக்காரர்கள் செய்யகிற தவறான குழறுபடிகளாலை பிரச்சினைகள் உருவாகுது. அங்கையிருந்து கொண்டுவந்து காட்டுகின்ற கல்வித்தராதரப் பத்திரகளை இங்கேயுள்ள நிறுவனங்கள் இப்பொழுது நம்புவதில்லை.

உமக்கென்ன உம்மடை பெண்சாதியார் நல்லவேலையில் இருக்கிறாதானே. பணத்தடுப்பாடுவராது. உமது படிப்பிற்கேற்ற வேலைகிடைக்கச் சற்றுத்தாமதப்படும் அவ்வளவுதான். இப்போதைக்கு என்னோடை கடையிலைவந்திரும்.

என்றுகூறி அவனை ஆற்றுப்படுத்த மாமனார் முயன்றார். அவரெதைச் சொன்னபோதும் சூரியனின் மனந்திருப்தி அடைவதில்லை.

தனிக்குடித்தனம் வந்ததிலிருந்து அவனின் வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையவில்லை. மனைவியார் உதயா இவனை மதிப்பதில்லை. சுருங்கக்கூறினால் அவர்களிடையே அன்பான உரையாடலும் தாம்பத்திய உறவுங்கூட ஒழுங்காக நடைபெறுவதில்லை.

காலப்போக்கில் பிரிவினை முற்றியது. அந்தப்பெரிய தனிவீட்டில் அவளொரு அறையிலும் இவன் பிறிதொரு அறையிலும் தூங்கியெழுந்தார்கள். சமையல் சாப்பாடும் தனித்தனியாகவே நடந்தன. காரிலேபுறப்பட்டுப்போறவள்எப்பொழுது வீட்டுக்குத்திரும்புவாள்என்பதுதெரியாது. தனக்குக் கணவனென்று ஒரு மனிதன் இருக்கின்றானென்ற நினவேயில்லாததொரு வாழ்க்கையைத் தொடர்ந்தவளோடு பேசிவிவாதிக்க அவன் நினைப்பான். ஆனால் அதுநடப்பதில்லை. மௌனத்துள் ஆறுமாதங்கள் இதேபோக்கில் கரைந்து மறைந்தன.

மாமா!.. உங்கடைமகள் இப்படியிப்படியெல்லாம் நடந்துகொள்ளுகின்றாள். எப்படியெல்லாம் என்ரைமனம் கலங்கும் என்றதை யோசித்துப்பாருங்க. இத்தனை காலமும் பொறுத்;திட்டன். இனியேலாது. நீங்கள்தான் உதயாவோடை கதைக்கவேணும்.

என்று சூரியன் முறையிட்டபோதெல்லாம் அவரிடமிருந்து எந்தவிதப்பதிலும் வருவதில்லை. அவன் தனது மருமகனென்ற உறவையும் அவர் மறந்துவருவதை அவன் உணர்ந்தான். மற்றைய தொழிலாளர்கள்போன்று அவர் தனக்கும் கட்டளைகள் இடுவதையும் தாங்கிக்கொண்டான்.

உதயா வீட்டிலிருக்கும்போது தொலைபேசியில் கதைத்துப் பொழுதுபோக்குவாள். அன்று எவரோவொருவரோடு கதைக்கும்போது எனக்குமது புரிவேண்டும் என்பதற்காக ஆங்கிலமொழியில் உரத்துபேசினாள்.

இறக்குமதி மாப்பிளையை கலியாணம் கட்டியிருக்கக்கூடாது. நாநொருமடைச்சி. என்ரை டடியைத் திருப்திப்படுத்த இந்தப்பொம்மையை வாங்கிவந்து வீட்டிலை வைச்சிருக்கிறன். அதுபேசிறதெல்லாம் படுபொய். கள்ளச்சேட்டிபிக்கற் கொண்டுவந்து அந்தாள் தானொரு கொம்பியூற்றர் இஞ்சினியர் என்றுகாட்டுது. அதை எவனும்நம்புவானே..

இதற்குமேல் அவளைப் பேசவிடாது கடுங்கோபத்தோடு எழுந்த சூரியன்..

நிறுத்து ரெலிப்போனை!.. என்ரைபடிப்பைப்பற்றிக் கண்டபடி கதைச்சியோ.. என்னாலையதைப் பொறுத்திருக்கமுடியாது. என்னை அத்திரப்படுத்தாதே!.. பொறுமைக்கும் ஒரெல்லையிருக்கு.

என்று எச்சரித்தவன்; வீட்டைவிட்டு வெளியேறி வீதியில் வேகமாகநடந்தான். தொடர்ந்;தவெகுதுயர் வாழ்க்கையானது கசந்துபோகவே தாயகத்தைவிட்டுத் தான்வந்தின் தவறையுணர்ந்து கொண்டான்.

தனது குடும்பத்தினர்களுக்கு மாதாமாதம் பணமனுப்பவேண்டுமே என்ற பொறுப்புணர்வால் மாமனாரின் கடைவேலையை விடாதுசெய்துவந்தால் இவள் என்னை மிகவும்மட்டமாக மதித்துவிட்டாள். எனது படிப்பையும் நம்பாது கேலிபண்ணுகிறாள்.

என்றெல்லாம் நினைத்துச் சினம்பற்றிய சூரியன் திக்கற்றுநடந்தான். அவனின் மனப்புயலுக்குச் சமமான பெருங்காற்று வேகத்தோடு வீசிக்கொண்டிருந்தது.

மரங்கள்மீதும் கட்டிடங்களிலும் வீதிமருங்கிலும் தேங்கிக்கிடந்த பனிக்குவியல்கள்; கரைந்துவழிந்து நிலமெங்கும் சகதிச்சேறகமாறி ஓடிக்கொண்டிருந்து. சூரியன் தனதுவோகநடையால் தடுமாறியவனாக சறுக்குண்டு விழ்தெழுந்தான்.

இவையாவும்நடந்து வாரமொன்று நகர்ந்தபின்பு. அதிசயமாக உதயா அவனை நெருங்கிவந்து தணிந்தகுரலில் பேசத்தொடங்கினாள்..

நான் பேர்கன்நகரிலுள்ள அலுவலகத்துக்கு வேலைமாற்றலாகி நாளைகு ஒஸ்லோவை விட்டுப்பிறப்படப்போகிறன். இனிநான் இங்கைவரமாட்டன். இந்தவீட்டை என்னுடையபரிசாக எழுதித்தரப்போறன். ஏற்றுக்கொள். உனக்கும் எனக்கும் எள்ளளவும் சரிப்படவில்லை. காரணங்கள் கனக்கவுள்ளன. அதைச்சொல்லி உன்னைத் திருத்தித முடியாது. நானும் திருப்தியடையமுடியாது.

உன்னைக் கலியாணம்கட்டியது என்னைப்பொறுத்தமட்டில்.. அதுவொரு திடீர்விபத்து என்று உணர்கின்றேன். நான் உன்னை விவாகரத்தச் செய்யமாட்டன். காரணம் உனக்கு இந்தநாட்டுக் குடியுரிமை கிடைக்கவதுவுதவும். என்பதற்காகவே இந்தமுடிவு.

நொஸ்க்மொழியும் ஆங்கிலமும்கலந்து கதைத்தவளின் வார்த்தைகளை முழுமையாகப்புரிந்து கொள்ளமுடியாது திணறிசூரியன் அவளின் தொனியில்தெரிந்த வேகமிகுவீச்சைக்கண்டு அதிர்ந்து எதிர்வாதமிட்டுக் குரல்கொடுக்கமுடியாது இடிந்துபோனவனாய் இருந்துவிடவே..

அவளோ.. அன்று இரவில் தனது மூட்டைமுடிச்சுகளைக் காரில் எற்றிக்கொண்டிருந்தாள். மறுநாள் அதிகாலையே அவளின் கார்புறப்பட்டுபோன ஒலியானது அவனையெழுப்பியது. தூங்கமுடியாத துயரம்மிகுந்த சிந்தனையில் இரவுமுழுவதும் உழன்றவனின் விழிகள்சிவந்து எரிந்தன. அஸ்த்தமனமான எதிர்காலம் கேள்விக்கும் கேலிக்குமுரிய தீர்வற்றதொரு உறுத்தலாகத் தோன்றவே.. கண்ணாடியில்தெரியும் தனது உருவத்தைக்கண்டு மிரண்டான்.

தலைமுழுகித் தெளிவை வரவழைத்தவன் கடைவேலைக்குப் புறப்பட்டவேளை மாமனார் அருளானந்தத்திடமிருந்து தொலைபேசி அழைப்புவந்தது.

நான்நேரில் உம்மோடு கதைக்கத் துணிவற்றவனாகத் துன்பத்தால் மனந்தளர்துபோனவனாக அழுதபடியிருந்து பேசுகின்றன்.

உதயாவை எனது மகளென்றுசொல்ல வெட்கப்படுகிறன். அவளின் வாழ்க்கையில் ஒருதிருதியான மாற்றம்வருமென்று நம்பித்தான் உம்மையிங்கு அழைத்து அவளின் இஸ்டத்தோடை திருமணம் முடித்துவைத்தனான்.

இந்தப்பெரியதவறைச்செய்ததற்கு உம்மிடம் மன்னிப்புக்கேட்கின்றன். உமது வாழ்வோடுநான்

விளையாடிவிட்டேன். இப்படியொரு விபரீதம்வருமென்று நான்நினைக்கவில்லை.

திடகாத்திரமான உடல்வாகுகொண்ட அழகான உம்மைக்கண்டதும் எனது நண்பரான உமது அப்பாவிடம் கலியாணம் குறித்துக்கதைத்து அதையொப்பேற்றியது நான்செய்த மிகப்பெரிய மோசடியானசெயல்.

ஒருதலைப்பில்லாமல் தொலைபேசியில் உளறிக்கொட்டிக் கொண்டிருந்தவரின் பேச்சையிடைமறித்த சூரியன்

என்னகதைக்கிறியள் உதயாவுக்கு என்னநடந்தது. காலைமை காரிலைபோணவ உங்களைவந்து காணவில்லயா. உங்களோடை கதைக்கவில்லையா.. வேலைமாற்றமாகி பேர்கனுக்குப் போகறேனென்று சொன்னாவே..

அவள் சொன்னதெல்லாம் படுபொய். இங்கைதான் ஒஸ்லோவிலை குறன்லாண்டென்ற பகுதியிலை இருக்கிறள். அங்கையுள்ள பெரும்முதலாளி ராச்குமாரின்மகன் இரவிநாத்தோடை முன்னம் சேர்ந்திருந்து குடும்பம் நடத்தியவள். மறுபடியும் இப்போது அவனோடை போய்ச்சேர்ந்திட்டாள்.

அவர்களிடையே ஏற்பட்ட பிரிவினையாலை கடுங்கேபங் கொண்டுதான் உதா இந்தக்கலியாணத்துக்குச் சம்மதித்தவள். அவனையினி நினைத்தும் பாற்கமாட்டன். என்றெல்லாம் சத்தியஞ்செய்தவள். உங்களின்ரை மகளை உதறிவிடாது ஏற்றுக்கொள்ளுங்க என்று மன்றாடியவள். நனும்மனமிரங்கி ஏற்றுக்கொண்டன். இப்பமீளவும் அவனோடைசேர்ந்து குடும்பம் நடத்தப்போட்டாள்.

அவளைச்சந்திக்கவோ கதைக்கவோ முடியாது. நாங்கள் கிட்டவும் நெருங்கமுடியாத பணபலமும் சண்டித்தனமும் அடியாட்கள்துணையும் உள்ளவர்கள் அவர்கள். அவள் செத்துப்போனாளென்று என்ரைகுடும்பத்தினர்கள் மனந்தேறியிருந்திடுவினம். ஆனால் உம்மைநினைக்கத்தான் ஆறாதபெரும் கவலையாகவிருக்குது..

வழமைபோலை கடைவேலைக்குவாரும். உமக்குக்கட்டாயம் கொம்பியூற்றர் இஞ் சினியர்வேலை கிடைக்கும். என்றுகூறியவர் பதிலை எதிர்பாற்காது தொலைபேசியைத் துண்டித்தார். அவரோடு மீளத்தொடர்வை ஏற்படுத்திப்;பேசிய சூரியன்.

நான் உங்கடைமகளை டீவோஸ் செய்வதற்கு வழக்குத் தொடுக்கப்போறன். அதுமுடிவுக்குவந்ததும் நான் எனது ஊருக்குத் திரும்பிப்போவன். நீங்கள் இந்தவீட்டைவந்து பொறுப்பெடுங்க. உங்கடை கடைவேலையையும் விட்டுவிலகிறன்.


நான் நண்பனொருவனோடை சென்றுதங்கப்போறன். அவன் கழுவல்வேலைசெய்கின்ற நிறுவனம் நடத்துகின்றான். உழைத்துச்சீவிக்க உடலிலைவலுவிருக்கு. என்னைப்பற்றிய கவலையை விட்டுத்தள்ளுங்க.

உங்களுடைய சுயநலவாத தந்திரபுத்தியைப்பற்றிக் கதைக்கிறதுக்குத் தகுந்தவார்த்தைகள் வாயிலை வருகுதில்லை.

என்றவன் கோபத்தால் உடல்பதறத் தனது தொலைபேசியை நிறுத்திக்கொண்டான். ❑

கட்டுரை

● அன்பாதவன்



# சமகாலச் சூழலியல் கவிதைகளில் வலம் வரும் யானை

*"நகரத்து மக்கள் பொம்மை யானைகளைச் செய்ய காட்டில் உயிருள்ள யானைகளைக் கொன்று தந்தங்களைத் திருடிப் போகின்றனர்"*

*- பாலமுருகன் சோளகர் தொட்டி*

*தமிழிலக்கியத்தின் பிதாமகரும் சாகித்ய அகாடமி விருதாளருமான தி.க.சி இலக்கியத்துக்கான "பஞ்ச சீலக் கொள்கை" ஒன்றினை அறிவித்தார்.*

*1. தமிழியம். 2.மார்க்சீயம் 3, தலித்தியம் 4, பெண்ணியம் 5, சூழலியம் குறிப்பாக சூழலியம் இன்றைய சூழலில் மிகமிக அவசியமானது அவசரமானது.*

*சூழலியல் என்பது வேறொன்றுமில்லை. நாம் வாழும் பூமி, நாம் காற்று வாங்கும் கடல் மழைக்காக ஏங்கும் அகாயம்.. நுகரும்.. நீர்.. சுவாசிக்கும் காற்று சுடும் தீ நம்மைச் சுற்றியிருந்து. பலவேறும் பயன் தந்து நம்மை நித்தமும் காக்கும் இண்ட அய்ம்பூதங்களுக்கு அந்த தேசதோழமைகளுக்கு நாம் செய்த கைமாறு தான் என்ன?*

*சூழலியல் என்பது பஞ்சபூதங்களின் வினையாலானது அணுக்கழிவுகளாலும் வேதிக்கழிவுகளாலும் நீராதாரங்கள் மாசுபட, வாகனப் பெருக்கமும், தொழிற்சாலைகளின் கழிவுப்புகையால் காற்று மண்டலம் கறுப்பாகின்றது. ஏரிகள், களம் குட்டைகள் மனைகளாகி மறைய நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அரசுக்கட்டடங்களை எழுப்பி விட்டு மழைநீர் சேமிக்க சொல்லும் முரண் நமக்கே உரியது. வனங்கள் அழிவு நதிகளின் மறைவாய்ப் போனதை*

உணர்ந்துதோமோ நாம்? குட்டிப்பையனின் வெடிப்பும், செர்னோபில் விபத்தும் நமக்குள் எந்த தாக்கத்தையும் மேற்படுத்தவில்லையென்பதையே கூடங்குளம் காட்டுகிறது. கடலில் கழிவுகளைக் கொட்டிவிட்டு கரைகளை அழகு படுத்த ஆசைப்படும் சிங்காரர்களை என்ன செய்யலாம்?

நாம் செய்கிற காரியங்கள் சூழல் பாதிப்பை உண்டாக்கி நமக்குத் தான் ஊறு விளைக்குமெனத் தெரிந்தும் தொடர்ச்சியாக பல சூழல் கேட்டினை செய்துக்கொண்டே இருக்கிறோம்.

"இன்றையச்சூழலின் நெருக்கடிகளையும், நெருக்கடிகளில் அமிழ்ந்து போகாத திமிறல்களும் உணர்வுகளும், எதிர்வினைக் கொள்கிற ஒரு சமூகத் தேவையை நமக்கு தந்திருக்கின்றன. சீரழிந்து வரும் பண்பாடுச்சூழல்களை மறுபரிசீலனை செய்யவும் புத்துருக்கொடுத்து மனிதவயப்படுத்தவும் நேரம் வந்திருக்கிறது. இதை உணர்த்திடும் கவிஞர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் இன்னம் புதிதாய்த் தோன்றியாக வேண்டியதொரு சூழ்நிலை ஒரு கட்டாயம் ஏற்பட்டு வருகின்றது" எனும் இலக்கியத் திறனாய்வாளர் பேரா. தி.சு. நடராசனின் கருத்துக்கள் கவனதில் கொள்ளத்தக்கவை.

நாம் செய்கிற காரியங்கள் சூழல் பாதிப்பை உண்டாக்கி, நமக்கே துன்பங்களைக் கொடுக்குமென்று தெரிந்தும் தொடர்ந்து இதுமாதிரியான சூழல் கேட்டினை செய்துகொண்டே இருப்பனை மனிதன் என்றா அழைக்கப் போகிறோம்! வனங்களின் அழிவு, காணுயிர்களின் அழிவு, நதிகளின் அழிவு, மனிதர் மீதான பேரழிவை ஏற்படுத்தும் என்பதை அறிந்திருக்கிறோமா?.. அறிவியல், தொழிநுட்பம் என்ற பெயரிலும் இயற்கைச் சுற்றுலா என்ற போர்வையிலும் வரைமுறையற்ற வீக்கத்தை வளர்ச்சியென நம்பும் மூடநம்பிக்கையைக் கைவிட வேண்டும்.

இயற்கை வளமும் சூழலியலும் மனிதகுல வாழ்க்கையின்முக்கியக் கூறுகளாக அமைந்துள்ளன. எந்த ஒரு வளர்ச்சிக்கான நடவடிக்கையும் அது செயல்படும் சுற்றுச்சூழலைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாவிடில் நீண்ட நாட்களுக்கு நீடிக்க முடியாத ஒரு நிலைக்கே இட்டுச் செல்லும் என்பதை காணுயிர் கொலையாளிகள் உணர்வதெப்போ..?

கவிஞர்கள் நம் சமூகத்தின் ஓரங்கம் தான் சமூகத்தின் நிகழ்வுகளில் அக்கறையும் கவலையும் தீர்வுகளைத் தரும் தீர்க்கப்பார்வையோடும் கூர்மையான விமர்சன நோக்கில் கவிதைகள் பிறப்பின் படைப்பாளிக்கும் மொழிக்கும் சிறப்பெனலாம்.

இந்தக் கட்டுரை சமகாலத் தமிழ்க் கவிதைகளில் வலம் வரும் யானைகள் குறித்து பேச யத்தனிக்கிறது. யானைகள் குறித்து விவாதிக்க முற்படுகையில் வனநலம் என்கிற மையத்தை விவாதிக்காமல் தாண்டமுடியாதே!

"காடு என்பது கனவு மற்றும் உயிர் சங்கிலிகளின் தொடக்கக் கண்ணி, முதல் கண்ணி அறுபட்டால் சங்கிலிகள் அறுந்து போகும், பின்னர் கோர்ப்பது கடினம். அதைப்போலவே இன்று நம்முடைய உணவுச் சங்கிலியும் உயிர்ச் சங்கிலியும் அறுபட்டு நிற்கின்றோம். முன்பு இருந்த பறவைகள் இல்லை. இப்பொழுது இருக்கின்ற ஒரு சில பறவைகளும், அழிவின் விளிம்பில் நிற்கின்றன. உயிரினங்கள் இல்லை. யானை, புலி, சிங்கம், கரடி என யாவும் அழிவின் விளிம்பில் நின்றுகொண்டு நமக்கான வாழ்வாதாரம் பறிபோனதால் தங்களின்

வாழ்விடத்திற்காக போராடிக் கொண்டிருக்கின்றன" எனும் சூழலியலார் மா. அமரேசனின் (சுற்றுச் சூழலும் சாதியப் புனிதமும்) இந்த சிந்தனையைத்தான் சிறிய கவிதையொன்றின் மூலம் பெருவினா எழுப்புவார் அன்பாதவன்.

"எம் முல்லையைக் காத்தவனைத்

தந்திரமாய்க் கொன்றவர்களே

வனராஜாக்களுக்கு உண்டு பசியும் தாகமும்

தந்தங்களும் சந்தனக் துண்டங்களும் சென்றதெங்கே?

பிளிறல்களுக்கஞ்சும் உங்களால் ம(று)றைக்க முடியுமா?

அடர்ந்த கானகத்தில் அநாதியாயொரு விடையிலா வினா"

காடுகள் தொடர்ச்சியாக அழிக்கப்படுமேயானால் சூழல் மாசுபடுவதையும் பருவ நிலை மாற்றங்களையும் தவிர்க்க இயலாது என்பதை சமீபத்திய அகால புயல், மழை, வெள்ளம், வறட்சி போன்றவற்றால் உணரலாம்.

"ஆறுகளும், நீரும், காட்டுப் பகுதிகளும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பதால் அவற்றுக்கானப் போராட்டங்கள் இந்தியச் சூழலில் இயக்கங்களை அங்கங்கே உருவாக்கியிருக்கிறது" என்பார் எழுத்தாளர் சுரபாரதி மணியன் (பசுமை அரசியல் பக். 08) "வேட்டை"எனும் தன் கவிதையில் வலங்கைமான் நூர்தீன் கவிதையில் குறிப்பிடும் சில செய்திகள் வாசகரின், விமர்சகர்களின், சூழலிய ஆத்ரவாளர்களின் கவனத்துக்குரியது.

"வனவிலங்குகள் நடமாடும்

பகுதி இரவு ஒன்பது மணிக்குமேல்

வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாவம் வஞ்சமறியா விலங்குகள்

மனித நடமாட்டமும்

சாலைப்போக்குவரத்தும் இருந்தாலே

அப்பகுதிக்குள் அவைகள் நுழையப்போவதில்லை

இனி அடைத்துவிட்டுக் காத்திருப்பார்கள்

அறியாமல் வந்து சிக்கிக்கொள்ளும்

அதிகார வேட்டையில் அரிய மிருகங்கள்"

(வலங்கைமான் நூர்தீன், பாகன் திரும்பும் வரை பக் 37)

*யானைகள் சூழலியல் கண்ணியில் ஓர் முக்கிய மையம் எனலாம். "தாய்வழிச் சமூகத்தின் கூட்டு வாழ்க்கையை இன்றளவும் தொடரும் காட்டு விலங்கு தான் யானை "என்பார் சூழலியல் ஆர்வலர் கோவை சதாசிவம் வனப்பகுதிகளின் செடிக்கொடிகள் மரங்கள் நல்ல நிலையில் பாதுக்காகும் பணியில் யானைகளின் பங்கு முக்கியமானது.*

**காடுகளின் அழிவுக்கும் வனவிலங்குகளின் எண்ணிக்கை திடீரெனக் குறைவதொரு மிக முக்கியக் காரணமாகும். காடுகள் அழிவதற்கும், வன விலங்குகளின் எண்ணிக்கை குறைவதற்கும் காரணங்கள் சில.**

*1. வனவிலங்குகளை வேட்டையாடுதல்.*

*2. வன மிருகங்களின் வாழ்வியல் பரப்பு ஆக்கிரமிக்கப்படுதல்.*

*3. சமீக காலமாக அதிகரிக்கும் வனத்தீ*

*4. காடு, காட்டினூடாக அமைக்கப்படும் போக்குவரத்து*

*5. காடுகளை ஆக்கிரமிக்கும் ஆன்மீக மய்யங்கள்*

*6. பன்னாட்டு நிறுவனங்களின் வனக்கபளீகரம்*

*7. வனப்பாதுகாப்பு சட்டங்களின் போதாவை*

*8. ஆரண்யத் தாவரங்களின் அழிவு*

*" அழிக்க அழிக்கப் பொறுமை காக்கும் காடுகளைப் பற்றி தெரியாது உனக்கு காடுகளை அழிக்கலாம். நீ காட்டின் வேர்களை அழிப்பாயோ நீ? முடியுமோ உன்னால? பொறுமையிழந்து ஒரு நாள் திருக்கை வால்களாய்ச் சுழல ஆரம்பிக்கும் காட்டின் வேர்கள். அடி பொறுக்க முடியாமல் சுடுமணற்புழுவாய்த் துடிப்பாய் நீ அப்போது" என ஆக்ரோஷமாய் முழங்கும் கவிஞர் அறிவுமதியின் சொற்களுக்கு செவி மடுக்க நேரமிருக்கிறதா நம்மிடம். (அறிவு மதி, கடைசி மழைத்துளி பக் 76)*

**"தமிழ் சங்க இலக்கியங்களில் யானையை, 170க்கும் மேற்பட்ட பெயர்களில் குறிப்பிடுகிறார்கள். அவைகளில் சில வருமாறு :**

*1. யானை, 2. வேழம், 3. களிறு, 4. பிளிறு, 5. கலபம், 6. மாதங்கள், 7.கைமா, 8. உம்பல் - சான்று, 9. வாரணம் 10. அஞ்சனாவதி, 11. அத்தி, 12. அத்தினி, 13. அரசுவா, 14. அல்லியன், 15. அனுபமை, 16. ஆம்பல், 17. ஆனை, 18. இபம், 19. இரதி, 20.குஞ்சரம் / இராசகுஞ்சரம், 21. இருள், 22. தும்பு, 23. வல் விலங்கு, 24. கரி, 25. அஞ்சனம், 26. நாகம் (கதநாகம்)*

*"உயிர் ஓம்பும் நேசக்காட்டையழிக்கிறாய்*

*கழைதின் யானையாய்" என சங்க காலத்து யானையை சமகாலப் படிமமாக்கும் இரா. தமிழரசியின் வரிகளினூடே சமகாலத் தமிழ்க் கவிதைகளில் சூழலியல் அக்கறையோடு யானைகள் குறித்து பதிவு செய்திருப்பதைக் காண்போம் இனி.*

“இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதன் தன் பேராசையாகப் பிற உயிர்கள் வாழுமிடத்தை ஆக்கிரமித்துக் கொண்டதன் விளைவாக காடுகள் அழிக்கப்பட்டன. இதனால் காட்டில் வாழும் உயிர்கள் நேராக மனிதர்கள் இருப்பிடம் தேடி வர ஆரம்பித்தன. உணவும் தண்ணீரும் இல்லாமல் வயலை நாசம் செய்கின்றன” என்பார் கே.அசோகன் (யானைகளின் வருகை, முன்னுரை) இதையே கவிதைக் காட்சியாய்த் தருகிறார் வதிலைபிரபா.

“பிளிறும் யானைக் கூட்டம்

கபளீகரம் செய்யும் போது

சேரும் கதிருமாய் குழைந்து கிடக்கும் வயல்.

ஊருக்குள் வருகின்ற யானைகள்

ஒருபோதும் காடு கடந்து வரவில்லை.

பயம் பீடித்த களிறுகள் அவை.

..

தனக்கான நிலத்தை தனக்கான நீரை

தனக்கான காற்றையும் தேடி அலையலாம்.

இப்போதும் கபளீகரம் செய்கின்றன.

பயம் பீடித்த யானைகள்.”

- (வதிலைபிரபா, மரம் சுமக்கும் யானைகளின் பிளிறல் பக்.16)

வதிலைபிரபா பயன்படுத்தியிருக்கும் “பயம் பீடித்த யானைகள்” எனும் சொல்லாடல்தான் மிக முக்கியமானது. இருப்பும், இருப்பிடமும் எந்த உயிருக்கும் மிக இன்றியமையாதது. ‘வலியதே மிஞ்சும்’ என்கிற விதி யானைகளுக்கும் பொருந்தும்தானே!

“யானைகள் தரையில் உலவும் மேகங்கள் யானைகளை இழந்துவிட்டு நாம் மழையை எதிர்பார்க்க முடியாதடா தம்பி” கவிஞர் அறிவுமதியின் சொல்லுக்குள் தான் எத்தனை சூட்சுமம்.

யானைகள் குறித்து காணுயிர் ஆய்வர் கோவை சதாசிவம் குறிப்பிடுவது மிக முக்கியமானது. “யானைகள் தான் காடுகளில் வழித்தடங்களை உருவாக்குகிறது. காடுகளில் வறட்சி நிலவும்போது நீரோட்டங்களைத் தேடி ஊற்று பறிக்கிறது. யானைகள்தான் இனப்பெருக்க காலங்களுக்குத் தேவையான தாது உப்பு மண்ணைத் தேடிக் காண்கிறது. அதனால்தான் காட்டுமாடுகளும், மான் கூட்டங்களும், இன்னபிற தாவர உண்ணிகளும் யானைகளைப் பின் தொடர்கின்றன. இப்படி காட்டின் ஆதார உயிராக விளங்கும் யானைகளின் வாழ்வு இன்று மிகுந்த அலைக்கழிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது” (உயிர்ப் புதையல் பக்.73) இந்த வேதனை வலியை வேறுவிதமாய்ப் பதிவு செய்கிறார் வதிலைபிரபா

“கொம்புக்காகத் தும்பிக்கை யிழந்த யானை ஒன்று வீழ்ந்து கிடந்தது” இவர் சொன்ன வரியைச் சற்றே காட்சிப் படிமமாய்ப் பாருங்கள்! காட்சி தரும் அதிர்வு அலை அடங்க வெகு நேரமாகும். மனிதன் மட்டுமே ஒருபுறம் ‘கஜமுகன்’ எனக் கடவுளாக்கியும், தந்தத்துக்காக களிறுகளைக் கொலை செய்வதுபோல் இரட்டை வேடதாரியாக இருக்கிறான்.

வனவிலங்குகள் என்பவை சுற்றுச்சூழ மண்டலத்தின் ஒரு அவசியமான மய்யமாகும். வனாந்திரத்தில் தாவரங்களை பாதுகாக்க காடு வாழ் உயிரினங்களின் இருப்பு மிக முக்கியம் வனப்பகுதிகள் தொடர்ச்சியாக அழிந்து வருவதால் சூழல் மாசுபடுவதால் வானிலை மாற்றங்களால் சிலவகை தாவரங்கள் பட்சிகள் மற்றும் விலங்குகள் அழிவதற்கான காரணமாகின்றன. யானைகள் தனது ஆதார வாழ்விடமான காடு விட்டு வெளியேறுவது ஏன்?

“தன்னை அண்ணாந்து பார்க்கும் சிறுமி

தவறவிட்ட தன் குட்டியை நினைவூட்ட

சுரக்கும் பால்மடி கனக்கத் தள்ளாடியபடி

ஆசிர்வதிக்கும் கோவில் யானை” - (கயல்.ஆரண்யம், பக் 26)

வன வளங்களை சார்ந்தே யானைகளின் இருப்பும் முன்னேற்றமும் அமைந்திருக்கிறது. சுயநல மனிதன் தனது அபரிமிதமான ஆசைகளுக்காக யானைகளை அழிக்கப் பார்க்கிறான். அதனால் தான் ஆரண்யத்தி அரசனாக வலம் வந்த வன ராஜாக்கள் கோயில் வாசல்களல் தெருக்களில் பிச்சை எடுக்கும் அவலம் சற்றே போராடினாலும் ஒற்றை கும்கி களால் கட்டுப்படுத்தி வழிக்கு கொண்டு விடும் அரசு அத்தகைய கும்கி க்கும் பாசமுண்டெனப் படிவு செய்கிறார் கயல்

“மூங்கில் தளிரின் பேரழகில் மயங்கி

உண்ணத் தயங்கும் குட்டி யானைகளின் கருணை கண்டு

கனல் துகளொத்த கண்கள் கலங்கும்

வழக்கமாய்க் காடதிரப் பிளிரும் கும்கி” - (கயல்.ஆரண்யம், பக்.30)

தாய்மண் நீங்கி அடிமைச்சங்கிலியோடு கோயில் வாசலில் ஆசி வழங்கி பிச்சையெடுப்பதோ யானை வாழ்வு?

கோடிச் சுடரென நீர் தெறிக்க

புனலாடிக் குளித்திருந்த யானை

புரியாமல் பார்க்கிறது

நகர் வந்த நாளாய்

பாகன் தன்னை நீராட்டும் ஓரங்கள் நசுங்கிய வாளியை”

- *(கயல், ஆரண்யம், பக் 32)*

*இயற்கையோடு இயைந்த வாழ்வைப் பாடுவது வாழ்வுக் கலாச்சாரத்தின் பண்பாட்டின் தவிர்க்கமுடியாத அங்கமாக அல்லது ஆதாரமாக இயற்கையை கவிதையாக்க வேண்டும். எனில் அதற்கு உடனடி விளைவுகள் இல்லாமல் போனாலும் மரபாக ஊறி பின்னொரு காலத்தில் ஒன்றிணைந்த இயற்கை வாழ்விற்கு மனித சமூகம் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்வதற்கான ஒரு சிறு முன்னெடுப்பைக் கவிதை செய்துவிட்டதாகக் கருதலாம்பரணிப் பாடியக் கவிஞன் தனிமையில் எப்படியெல்லாம் கதறியிருப்பான் யானைகளை நினைத்து என்பார் கவிஞர் கயல் கானகத்தில் வாழும் விலங்குகள் மடிவதால் நம் சூழலியல் தொகுப்பில் வேறு வேறு பிரச்சினைகள் மையம் கொள்கின்றன இயற்கையான தட்பவெப்ப சமநிலையை பராமரிக்க வனவிலங்குகள் பெரிதும் உதவுன்றன. அதிலும் குறிப்பாக யானைகள் பங்களிப்பு அதிகம் மிக மிக அதிகம் காட்டு விலங்குகளின் எண்ணிக்கை குறைதற்கு வனம் அழிதல் முக்கிய காரணமாகும்.*

*“பெட்டிக்கடையில் கை நீட்டிகிறது*

*கிளைகளை முறித்த பலத்தைத் திரட்டி*

*அரைமூடி தேங்காயை ஏந்துகிறது*

*கால்விரலின் கட்டளைக்கு உடல் மடுக்கிறது..”*

*எப்பொது நம்மைக் காட்டிற்கு அழைத்துச் செல்வார்கள்*

*வாழ்வின் மாபெரும் சாட்சியாகிவிட்டிருந்தது அது*

*-(யியற்கை, கடைசி தூரதேசப் பறவையிடம் மன்றாடும் நீர்நிலை பக்.82)*

*இயற்கைக்கு வெளியே நின்று எழுதப்படும் கவிதை இயற்கையின் அழிவை சிதைவை அதன் வலியை பாடுவதாக மட்டுமே அமைந்துவிடுகிறது இயற்கையின் அல்லது சுற்றுச் சூழலின் ஆன்மாவில் அணுவிலும் அணுவான ஒரு துகள்தான் நாம் என்கிற புரிதல் அப்போது மருவி விடுகிறது.*

*“காட்டில் வாழும் விலங்கு யானையென்று*

*வீட்டுப்பாடம் எழுதிக்கொண்டிருந்தாள் சிறுமி*

*-யானையைப் பார்த்திருக்கிறாயா?*

*உதட்டைப்பிதிக்கி இல்லையென்றான்*

*யானையைப் போல் பிளிறியும் நடந்தும்*

*என் மீது அமரவைத்து யானைச்சவாரி செய்தேன்*

*உறங்கிவிட்டான் யானைப்படம் கொண்டு வருவதற்குள்*

*இரவு முழுக்க என்னைச் சவாரி செய்துக்கொண்டிருந்தது யானை"*

*- (சோலைமாயவன், விரல்களில் வழியும் குரலற்றவனின் செங்குறிதி ப.14)*

*தனது காலடியில் நழுவும் நிலத்தை வேறொன்றின் இல்லாமையாக பாவித்துக் கவிதை எழுதும் கவி மனம் தான் எத்தனை சோகம் இறந்துகொண்டிருக்கும் யானையின் மீது எப்போதும் போல மொய்க்கும் ஈக்களைப் போலாகிவிடுகிறது கவிதை அது இக்கவிதை.*

*"மரத்தை வெட்டிச் சாய்த்தான்.. யானை வீழ்ந்தது*

*இரு பெருந் தந்தங்களோடு*

*வயிறு பிளந்து வீழ்ந்துகிடந்த யானைகளை*

*அப்புறப்படுத்தினான் பெரும் லாரிகளைக் கொண்டு*

*தலைமீது தும்பிக்கை வைத்து ஆசீர்வதித்தவை..*

*ஒவ்வொரு முறையும் ஆசீர்வதிக்கப்பட்டவன் தான்*

*வெட்டி வீழ்த்துகிறான்..*

*இன்னமும் வனம் முழுக்க மரங்கள் ஆசீர்வதித்தபடி"*

*- (வதிலைபிரபா.மரம் சுமக்கும் யானைகளின் பிளிறல் பக் 61)*

*யானைகளின் அழிவிற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.*

- *நீர் மாசுபடுதல்*
- *காற்று மாசுபடுதல்*
- *அமில மழை*
- *பூமியின் வெப்ப உயர்வும் ஓசோன் குறைதலும்*
- *பெருகி வரும் மக்கள் தொகையும்,தொழிற்சாலைகளும்*
- *வளர்ந்து வரும் நகரமயம்*
- *அழிந்துவரும் அரிய வன வளங்கள்*
- *வனவிலங்குகளின் உணவு சங்கிலிகளில் ஏற்படும் தடங்கல்*

*சூழலை நமக்கு வெளியேயான ஒரு அமைப்பாக அவதானித்து எழுதப்படாமல் நாம் சூழலின் அணுவிலும் அணுவிலும் அணுவிலும் ஒரங்கம் என்பதை ஒப்புக்கொண்டு அந்த மன நிலையிலிருந்து படைப்புகள் ஆக்கம் பெற வேண்டும் செஞ்சி தமிழினியனின் கவிதை ஒன்று சற்றே நம்பிக்கையூட்டும் விதமாக.*

"குழைத்து உறவு சேர்த்த மண்ணில்

யானை செய்தான் மகள்

தும்பிக்கை அளவும் காதுகளின் அழகும்

பயணிக்க வைத்தன காடுகளில்

பிறிதொரு நாளில் மழையில் கரைந்து

மண் காட்டை அடைகிறது இடம்மாறி

கூட்டமாய் வந்த யானைகளில்

குட்டியானை பிளிறுகிறது மண்ணளை நுகர்ந்து

குட்டியானையின் கால்களில் அப்பிய மண்

காடெங்கும் பரவி உண்டாக்கியது யானைகளை"

சமகாலச் சூழலியல் கவிதை முது வேனிற்காலத்தில் சட சடவெனத் தூறி ஆவியாகிவிடும் மழையாக இருக்கின்றன. ஆனால் இப்போதையத் தேவை பெருக்கெடுத்தல் அப்படி பெருக்கெடுத்தல் என்பது நாம் சூழலுக்குச் செய்கிற புண்ணியம் அல்ல நாம் நமக்காக விதைத்துக் கொள்கிற பருக்கை என்கிற புரிதலோடு இருக்கவேண்டும் என்கிற கவிஞர் யியற்கையின் அறிவுரை அனைத்துப்படைப்பாளிகளுக்கும் உரியது காடுவாழ் கருப்புக் கவிதைகளை கிழித்து எரிபவர்களை அடையாளம் காண்போம்.

"இவ்வுலகம் இனியது

வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன

மழை இனிது மலை இனிது" காடு இனிது

ஆறுகள் இனியன

மரமும் செடியும் காயும்

மலரும் காயும் கனியும் இனியன

நீர்வாழ்வனவும் நல்லவை

மனிதர் மிகவும் இனியர்

என்கிற பாரதிப் பாட்டனின் வரிகள் இன்றும் என்றும் விதைக்கின்றன நன்னம்பிக்கையை! நல்லது! நம்பிக்கை தானே வாழ்க்கை.

❑

சிறுகதை

● சரஸ்வதிராசேந்திரன்



# உறவின் உன்னதம்

கணவர் இறந்துபோனதும் கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோல் உணர்ந்தாள் அலமு. அதுவரை கூட்டுக் குடும்பமாய் இருந்தவள் தனித்து விடப்பாட்டதால் தடுமாறிப்போனாள். மைத்துனர் பாஸ்கர் எல்லா சொத்துகளையும் கைப்பற்றிக்கொண்டு

அவளை வீட்டை விட்டே அனுப்பிவிட்டார். கணவன் ரகு அண்ணனின் நிழலில் வாழ்ந்ததால் போனால் போகுது என்று ஒன்றாக வைத்து தந்தை கொடுத்த சொத்தை தானே பார்ப்பதாகச் சொல்லிமீலீணீ தம்பியை ஏமாற்றிக்கொண்டிருந்தார் பாஸ்கர் கணவரே கேட்காதபோது நாம் ஏன் அதில் தலையிட்டு குடும்ப ஒற்றுமையைக் கலைக்க வேண்டுமென்று வாளாவிருந்தாள் அலமு. ஆனால் இன்று நிலைமை வேறு தன் ஒரே பிள்ளைக்காக முன்பின் தெரியாத வீட்டில் சமையல் வெளி வேளை செய்து குடும்பத்தை காப்பாற்றிக் கொண்டாள் இத்தனைக்கும் பாஸ்கருக்கு குழந்தை கிடையாது ஆனால் ஆரம்ப காலத்திலிருந்தே சுய நயலமாகத்தான் இருந்தான் மகன் அருணுக்கு விபரம் தெரிந்ததும் கோப்பப்படுவான் ஏனெனில் அம்மாவின் கஷ்டத்தைப் பார்த்துப் பார்த்து வளர்ந்தவன் காலத்தின் ஓட்டமும் இருவரின் வயசுகளும் வேகமாய் ஓடியபடியே இருந்தன கையில் ரூபாய் இல்லாதபோது கடன் நெருக்கும் போதெல்லாம் பாத்திரம் கழுத்துச்சங்கிலி அடகுக்குப்போகும் அருணால் அம்மாவை கண்டிக்க முடியாமல் மனசெல்லாம் சோகத்தில் அரித்த வெறும் கூடாக வளைய வந்தான் கோபம் வரும்போது பெரியப்பாவை திட்டித்தீர்ப்பான் அதையும் அனுமதிக்க மாட்டாள் அலமு. எப்படியோ அவனும் அம்மாவின் நிலை தெரிந்து படித்து பட்டமும் வாங்கி வேலையும் கிடைத்து விட்டது அது ஒன்றுதான் ஆறுதல் அலமுக்கு.

நண்பர்கள் எல்லாம் அருணை கிளப்பி விட்டு பெரியப்பாவிடம் தன் உரிமையைக் கேட்கச் சொல்லிக் கொடுப்பார்கள் அவன் வெகுண்டால் அலமு கண்டிப்பாள் அருணை // உன் பெரியப்பாவைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது அவர் சின்ன வயசிலிருந்தே சுகவாசி எல்லா சுகங்களையும் தானே அனுபவிக்க வேண்டும் என்று விரும்புபவர் சொந்த தம்பியான உங்க அப்பாவே அவரிடம் பயந்து எதையும் கேட்கமாட்டார் அப்படி சத்தம் போடுவார் அவரே கேட்காத போது நாம் எப்படி...வேண்டாம் அருண் எவ்வளவோ கஷ்டப்பட்டாலு கடவுள் நம்மை கைவிடவில்லை நம்மை நன்றாகத்தானே வைத்திருக்கிறார்.

“அம்மா அதற்காக நமக்குச் சேர வேண்டியதைத் தராமல் நம்மை எத்தனை கஷ்டப்படுத்தியிருக்கிறார் அவரை சும்மா விடலாமா. என்ன மனுஷர் அவர் போன் ஜென்மத்தில் செய்த பாவம் தான் குழந்தைகூட இல்லை நமக்குச்சேர வெண்டியதை கொடுத்து விட்டு அவர் சுகமாக வாழட்டுமே யார் வேண்டாமென்கிறார்கள் இப்படி பேராசைப் பேயாக இருக்கிறாரே மனசாட்சியே கிடையாதா? ''

''அதை விடுப்பா தெரிந்தது தானே உரியதற்கு அவசரப்படக்கூடாது உரிமை இல்லாததற்கு ஆசைப்படக்கூடாது என்ன இருந்தாலும் அவர் உன் பெரியப்பா”

''அம்மா அர்ஜுன் உறவுகளை நினைத்து போரிடத் தயங்கியபோது கண்ணன் என்ன சொன்னார் இது ஒரு அறப்போர் இது சுய தர்மம் அதுக்காகப் போரிடுவதில் தவறில்லை என்று சொல்லவில்லையா அதோடு நம்மைப் பார்த்து பலரும் கேலி செய்வார்கள் சாமர்த்தியம் இல்லாதவன் என்று அதற்கு நாம் இடம் கொடுக்கலாமாம்மா ''

'' நமக்கு என்ன வேண்டுமோ அதை அந்த கண்ணன் கொடுப்பார் தேவையில்லாம நீ சண்டை வம்பை வாங்க வேண்டாம் நீ வாழப்போறவன் பெரியவர்கள் வாயில் விழவேண்டாமே பொறுமையா இருப்பா ‘சண்டை போட்டால் அவர் சும்மா இருப்பாரா ? இருவரும் மாறி மாறிசண்டை போடுவதால் அதற்கு முடிவே இல்லாமல் போகும் வேண்டாமே.. நாளை உனக்குத்திருமணம் என்றால் அவர்தானே பெரியப்பா ஸ்தானத்தில் நின்று எல்லாம் செய்யணும்

அவர் செய்தது உலகத்திற்குத் தெரியாது நம்மைத்தான் சொல்வார்கள் சொத்துக்காக உறவை மதிக்கலைன்னு இது தேவையா //பேசாமா போய் வேலையைப்பாரு ''

காலம் ஓடியது அன்று ஞாயிற்றுக்கிழமை அருண் எழுந்திருக்க வில்லை லீவு நாள்தானே தூங்கட்டும் என்று அலமுவும் எழுப்பவில்லை வாசலில் காலிங்க் பெல் சப்திக்க அலமு மெல்ல எழுந்துபோனாள் அவர்கள் குடும்ப நண்பர் சொன்ன செதியால் அரண்டு போனாள் அலமு அவ்சரமாக ஓடிவந்து மகனை எழுப்பினாள் ''என்னம்மா இத்தனை பரபரப்பு " ''அருண் உங்க பெரியப்பா ஆக்சிடெண்டிலே போயிட்டாராம் ''

'' போகட்டுமே அவரிடம் தான் பணம் இருக்கு மனைவி இருக்காங்க எல்லாம் பணம் பார்த்துக்கும் இதற்கு நீங்க ஏம்மா அலறுறீங்க"

''அருண் பேசாதடா பின் அவருக்கும் உனக்கும் என்ன வித்தியாசம் இருக்கு என்ன இருந்தாலும் அவர் வயசிலே மூத்தவர் எழுந்து போய்ப் பார் உன் பெரியம்மாவை ''

'' ஏம்மா இத்தனை செய்தும் நீங்க போறப்ம் போக்கைப் பார்த்தா என்னையே கொள்ளியும் வைக்கச் சொல்வீங்க போலிருக்கே ''

''அதற்கும் அவசியம் ஏற்பட்டால் செய்யத்தான் வேண்டும் வாதம் செய்யாமல் எழுந்துவா"

சாவு வீட்டில் எல்லோரும் அருணைத்தான் சிபாரிசு செய்தார்கள் கொள்ளி வைக்க ஆனால் அருணின் மனம் ஒப்பவில்லை அம்மாவிடம் சொல்லிக் கொள்ளாமல் வீட்டிற்கு வந்து விட்டான் பாஸ்கரின் மனைவி சாவித்திரி அலமுவிடம் அழுது அருணைக் கொள்ளி வைக்கச் சொல்லுமாறு கெஞ்சினாள் அலமு அவளுக்குத் தைரியம் சொல்லி விட்டு எல்லா ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லி விட்டு வீட்டிற்கு வந்தாள்

''அருண் நான் இத்தனை சொல்லியும் நீ என்னையும் மதிக்காமல் வந்து விட்டாயே ''

''எப்படிம்மா ''..

'' அருண் எந்த உறவானாலு இறப்புக்குப் பின் அதற்கு முறையான இறுதி சடங்கை செய்யணும் அப்பதான் அவரோட ஆத்மா சாந்தி அடையும் உறவின் உன்னதமே அதுதானடா கிளம்பு நீகேள்விப்பட்ட தில்லையா ஜடாயுங்கிற பறவை இறந்தப்ப அதுக்கு இறுதிச்சடங்கை ராமர்தான் செஞ்சாரு ஏன் அதே ராமர் வாலியை கொன்னபோதுகூட தன் தம்பி அங்கதனைத்தான் இருதிச் சடங்கு செய்ய வச்சாரு தன் மனையைத்தூக்கிப்போன எதிரியான இராவணனை கொன்று காக்கை கழுகுக்குப் போடாமல் விபீஷணை விட்டு இறுதிச்சடங்கு செய்ய வச்சார் நமக்கு சேர வேண்டிய சொத்தை கொடுக்காததற்காகவா நீ இறுதிச்சடங்கு செய்ய மறுக்கிறாய் தப்புப்பா உறவை மதிக்கணும் வா எழுந்து ''

''படிப்பறிவு இல்லா அம்மாவின் பண்பைப் பார்த்து உருகிப்போனான் அருண். பிறகென்ன அருண் வைத்த கொள்ளியில் பாஸ்கரின் ஆத்மா சாந்தி அடைந்தது மட்டுமில்லை அவன் பெரியம்மாவிற்கும் அவன் மகனாகி அவர்களையும் தன் அம்மா ஸ்தானத்தில்வைத்து கடைசி வரை காப்பாற்றினான் அவர்கள் சொத்துக்கும் அவனே கார்டியன் ஆனான்..

❑

● ச.ப்ரியா

*வாசித்து முடித்து மூடி வைத்த*
*புத்தகங்களுக்குள்*
*இருந்தெல்லாம்.*
*இதுவரை யாரும் நுகர்ந்திடாத*
*நறுமணம் பரவுவதாக,*
*சொல்பவர்களுக்கு எப்படித் தெரியும்.*
*இனியா!*
*ஒவ்வொரு தாள்களையும்*
*எச்சில்களால் நனைத்து திருப்பும்.*
*வழக்கம் கொண்டவன் நீயென!*

❑

❍

● ச. இராஜ்குமார், திருப்பத்தூர்

*எப்போதும் செல்லும் சாலைதான் அதில்*
*யாயாசகம் கேட்டபடி வயது முதிர்ந்த ஒரு பாட்டி..*
*ஆனால் இதுவரை நான் அவருக்கு*
*யாசகம் கொடுத்ததில்லை*
*ஆனால் அதற்க்காக அவர்*
*வருத்தபடவில்லை..!!!!!*
*ஏனோ இன்று அதை நினைக்கையில்*
*என் மனம் வலிக்கிறது..!!!*
*மனிதாபிமானம் இருக்கிறதா இல்லையா*
*என்று என் மனம் என்னையே*
*கேட்க்கிறது..!!!*
*ஒருமுறையேனும் உதவிடு..!!!!*

❑

● தங்கேஸ்


# நாம் மரங்களாய் இருந்தாலென்ன?

.

*நாம் மரங்களாய் இருந்தால் என்ன?*
*சொற்கள் தேடாமல்*
*வெள்ளை காகிதம் நாடாமல்*
*காற்றில் கவிதையை எழுதிக்கொண்டு*
*இலை நடனமிட்டபடி*
*பச்சையங்களில்*
*கசியும் நிலவை தேக்கி*
*நட்சத்திரங்களுக்கு*
*ஜாதகம் கணித்து*
*நாம் மரங்களாய் இருந்தாலென்ன?*
*துளித் துளியாய்*
*நம் உடலில் பாய்ந்து சிலிர்த்திடும்*
*இந்த ஜென்மத்து பௌர்ணமிகளை*
*கணக்கிட்டுக் கொண்டும்*
*நுரைத்துப்பொங்கி வழியும்*
*நினைவுப் பிசினை*
*மரப் பட்டைகளாய் மாற்றிக்*
*கொண்டும்*
*இலைச்சருகளால் வாழ்க்கையை*
*ஆசீர்வதித்திக் கொண்டும்*
*நாம் மரங்களாய் தான்இருந்தாலென்ன?*

❑

● இனியவன் காளிதாஸ்



அவள் அவனுக்காக
விரதமிருந்தாள்..
அவன் அவளை நினைத்து
விசனமிருந்தான்..
அவள்
பசி துறந்தாள்..
அவன்
பசி மறந்தான்..
அவள் வேண்டுதல்களில்
அவனே பிரதானமானான்..
அவன் பிரதானமெல்லாம்
அவளை வேண்டுவதாகவே இருந்தது..

அவர்கள் அடிக்கடிப் பார்த்துக்
கொள்வதில்லை
இருந்தும்.,

எப்போதும்
எதிரில் இருப்பதாகவே
உணர்ந்தார்கள்..

அவர்கள் ஒருவருக்கொருவர்
தொலைவிலிருந்தார்கள்
இருந்தும்.,

இன்னும்,இன்னுமென
நெருங்கியிருந்தார்கள்
இதயத்தினுள்..

அவர்கள் அவ்வளவாகப் பேசிக்
கொள்ளவில்லை..

இருந்தும் அவர்களுக்குள்
நேசத்தை பகிர்ந்திராத
நிமிடங்களில்லை..

ஆம்..
உதடுகளால் ஒருபோதும்
மொழிபெயர்க்க
முடிவதில்லை..

உள்ளங்கள் உரையாடும்
உண்மை நேசம்தனை..

❑

● ஆதிலட்சுமி சிவகுமார்

# கோபக்காரி



மென்காற்று உடலைத் தழுவிக் கொண்டிருந்தது. வானத்தில் ஆங்காங்கே கருமேகங்கள் திரண்டு பங்குனிமாத வெயிலின் சூட்டைத் தணிக்க முயற்சித்துக் கொண்டிருந்தன.

கோயிலில் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. சுவாமி சுற்றுவதற்கு வெளியே வரும்வரை எங்காவது உட்காரலாம் என்றால் முடியாமலிருந்து. மேளம், காவடி, பாற்செம்பு, கருப்பூரச்சட்டி என எங்கும் குவியல் குவியலாய்ச் சனம்.

வானதி ஒவ்வோர் ஆண்டும் பார்க்கிற திருவிழாதான். ஆனால் இந்தமுறை காந்தனுடன் வந்திருப்பது அவளுக்கென்னவோ பெருமையாக இருந்தது. ஊரில் காவாலியாகத் திரிந்த காந்தன் பட்டுவேட்டியில் மிக எடுப்பாகத் தெரிந்தான். அவனுடைய மீசைதான் முகத்திற்கு ஒரு கம்பீரத்தை கொடுத்துக்கொண்டிருப்பதாக அவள் நினைத்துக்கொண்டாள்.

தன்னையும் காந்தனையும் யாரும் பார்க்கிறார்களா என அவ்வப்போது சுற்றிப் பார்த்துக்கொண்டாள். தங்கள் இருவரையும் பார்த்து, ஊதாரி, உவாக்கரை என்று காந்தனை திட்டித்தீர்த்த தன் குடும்பத்தினருக்கு, நல்லதாகச்சொல்லவேண்டும்என்றஎதிர்பார்ப்போடுதான் வானதி கோயிலுக்கு வந்தாள்.

கோயிலினுள்ளே மணிச்சத்தம் அமளியாகக் கேட்டது. உள்ளே நுழைந்து பூசை பார்க்க இயலாதளவிற்கு சனம். வெளியில் நின்ற சனங்கள் சுவாமியைப் பார்க்காமலே கைகளைத் தலையிற் குவித்து வணங்கினார்கள். கோயிலுக்குள்ளிருந்து வரும் வாசனைப்பொருட்களின்

நறுமணமும் சனங்களின் பரவச ஒலியும் வானதியின் மனதில் ஒருவித மயக்க உணர்வை ஏற்படுத்தின.

வானதியும் கண்களை மூடி அம்மாளாச்சியை நினைந்துருகியபடி நின்றுகொண்டிருந்தாள். இப்போது அவளுக்குள் பெரும் பக்தி உணர்வு பொங்கிவழிந்தது.

“ ம்... அப்பிடி என்ன கடவுளிட்டை நீண்டநேர வேண்டுதல்... “ அருகில் நின்ற காந்தன் காதருகே வந்து கண்கள் மின்னக் கேட்டான்.

“ ம்... அடுத்த திருவிழாவுக்கிடையிலை... காணாமற்போன உங்கட அக்கா திரும்ப கிடைச்சிடவேணும்... அதைத்தான் கேக்கிறன்... “

அவனுடைய முகத்தில் துன்பவரிகள் பரவின. மெதுவாக அவளை கையால் அணைக்க முயன்றான். அவள் அதற்கு இடமளிக்காமல் விலகிநின்றாள்.

“ எங்களோடை வாங்கோ... எண்டு கேக்க கேக்க... எங்கள நம்பிவந்த பிள்ளையள கைவிட்டுப்போட்டு ஒருக்காலும் வரமாட்டன் எண்டு போனவ... அவவின்ர அந்தநேரக்கோலத்தை இப்ப நினைச்சாலும் மனம் கலங்குது... பாவம்... “

அவளின் கண்களில் கண்ணீர் திரையிட்டது.

திரும்பிப் பார்த்தாள். காந்தன் கண்களை மூடிக்கொண்டு நின்றான். அவளுக்கு சிரிப்பு வந்தது. ஊரில் உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டு, அந்த மன உளைச்சலில் அடாவடித்தனங்கள் செய்துகொண்டு திரிந்த காந்தனாக இப்போது அவன் அவளுக்குத் தெரியவில்லை.

முழங்கையால் அவனைத் தட்டி, “ என்ன வேண்டுதல்... ? “ எனக் கேட்டாள்.

“ ம்..... மன்னாரிலை வீரச்சாவடைஞ்ச உன்ரை தம்பி.. அடுத்த திருவிழாவுக்கிடையிலை எங்கட வீட்டிலை திரும்பவந்து பிறக்கவேண்டும் எண்டு நினைக்கிறன்... “

வானதி ஒருகணம்.... ஒரேயொரு கணம் ஆடிப்போனாள். அழுகையில் உதடுகள் துடித்தன.

“ நாங்கள் வீட்ட போவமா.... “

“ திருவிழாப் பாக்கவேணுமெண்டு தானே வந்தனி.. பிறகென்ன... “

“ இல்லை... மனசுக்கை கவலையாக இருக்கு...”

“ அம்மாளாச்சியை கும்பிடு வானதி... கவலையெல்லாம் ஓடிப்போயிடும்.... “

“ அப்பிடி தம்பி வந்து பிறந்தால்... தம்பியின்ர பெயரையே வைப்பமோ.... “ ஆசையுடனும் வெட்கத்துடனும் அவனிடம் கேட்டாள். அவன் தலையை ஆட்டிச் சிரித்தான்.

“ அங்கை பார்.... “ அவன் காட்டிய பக்கம் திரும்பினாள். அம்மா கண்களை மூடிக்கொண்டு, கும்பிட்டபடி நின்றாள்.

வானதியின் மனதில் ஏதோவோர் உணர்வு உந்தியது.

“ பிள்ளைமனம் கல்லாப்போய்... நான் காந்தனோடை வந்திட்டாலும்... பெத்தமனம் பித்தாகத் தானே இருக்கும்.... பாவம் அம்மா... நல்லா மெலிஞ்சுபோனா.... விரதத்துக்கு பத்துநாளும் ஒருநேரச் சாப்பாடுதான்.... “

“ அ...ம்...மா... “ நடுங்கிய கையால் மெதுவாக அம்மாவைத் தொட்டாள். கண்களை விழித்துப் பார்த்த அம்மாவின் கண்கள் சிவந்தன.

“ ஆரை அம்மா எண்டு கூப்பிடுறாய்... ஒருத்தரும் வேண்டாமெண்டு தானே அவனோடை போனனி... பிறகென்ன... நான் செத்தாக்கூட நீ வரக்கூடாது... என்ர கண்ணில முழிக்கக்கூடாது எண்டு சொன்னான் தானே... அவனோடையே போயிரு... உனக்கு நாங்கள் ஒருதரும் இல்லை.... சொல்லிப்போட்டன்.... “

அம்மாவின் குரல் மேளவாத்திய ஒலிகளையும் மீறி, கர்ணகடூரமாய் ஒலித்தது. அக்கம்பக்கத்தில் நின்றவர்கள் திரும்பிப் பார்க்க வானதி நிலை குலைந்துபோனாள்.

“ நாளைக்கு ஊர்முழுக்க இதுதான் கதையா இருக்கப்போகுது.... “ அவள் தலையைக் குனிந்தபடி காந்தனிடம் வந்தாள்.

“ வீட்ட போவம்... வாங்கோ... “ அவளின் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது.

“ பூசை முடிஞ்சுது வானதி... வந்தனாங்கள்... சுவாமி வெளியில வரப் பாத்திட்டுப் போவம்.... “

“ வேண்டாம்... இப்ப போவம்.. இல்லாட்டி நான் தனிய நடந்து போயிடுவன்... “ அவன் எதுவும் பேசவில்லை.

இருவருமாக நடந்தார்கள். அவளின் மனதில் ஏதேதோ எண்ணங்கள்... காந்தன் அம்மாவின் அண்ணன் மகன்தான். அமமாவோடு சேர்த்து ஐந்து சகோதரிகளையும் திருமணம் செய்து கொடுத்த பொறுப்பு மாமாவினுடையதுதான்.

பெண் சகோதரிகளின் சீதனத்திற்காகவே உழைத்து உருக்குலைந்தவர் மாமா. மற்ற எல்லோரையும் விட, அம்மாதான் தனக்கு வேண்டியவற்றை அடம்பிடித்து மாமாவிடம் வாங்கிக் கொண்டவள். மாமா ஒரு நல்ல வேட்டிகூட கட்டியதில்லை.

மாமா வறுமைப்பட்ட குடும்பத்திலிருந்துதான் மாமியைத் திருமணம் செய்துகொண்டார். அவருக்கு மூன்று பெண்பிள்ளைகளும் இரண்டு ஆண்களும். இரண்டு பெண்பிள்ளைகளுக்குப்பிறகு நான்காவதுதான் காந்தன்.

குடும்ப வறுமை அவனைப் பாதித்தது. கொஞ்சம் அப்படி இப்படியாக அவனது பழக்கங்கள் மாறிப்போனாலும், அவனுடைய முரட்டுக்குணத்தின்மேல் வானதிக்கு ஓர் ஈர்ப்பிருந்தது.

அம்மா மாமா கொடுத்த சீதனக் காணியையும், நகைகளையும் அடகுவைத்து தன் இரண்டு ஆண்பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பினாள். மாமாவிடம் பொருளுமில்லாமல் பணமுமில்லாமல் போய்விட்டது.

வறுமைப்பட்டவர்கள் என்பதற்காகவே அம்மா மாமா குடும்பத்தை வெறுத்தாள். காந்தனுக்கும் வானதிக்கும் இடையில் இழையோடிய காதல் அம்மாவைப் பத்திரகாளியாக்கியது. அவள் ஆடியசன்னதக் கூத்தில், நடுங்கிப்போய்த்தான் வானதி மாமா வீட்டுக்கே ஓடிவந்தாள்.

வந்தவளை மீண்டும் அழைத்துப்போய் மாமா அம்மாவிடம் பேசிப்பார்த்தார். அம்மா இறங்க மறுத்தேவிட்டாள்.

மாமா அவளைத்திரும்ப தன் வீட்டுக்கே அழைத்துவந்து, ஊர்பார்க்க எளிமையாகத் திருமணம் செய்து வைத்துவிட்டார். இதுதான் அம்மாவின் பிரச்சினை.

மாமாமாமி குடும்பத்தோடு தான் வானதி இருந்தாள்.

“ எல்லாருக்கும் முன்னாலை அம்மா இப்பிடிக் கத்துவா எண்டு நான் நினைக்கேல்லை... நினைச்சிருந்தால் கிட்டப் போயிருக்கமாட்டன்... “

“ ...........”

“ என்ன...அம்மா அப்பிடி என்னை அவமானப்படுத்தி பேசினது உங்களையும் பாதிச்சிருக்கும்.... உங்களுக்கு கவலையோ..... “

“ சீச்சீ... உதுக்கெல்லாம் கவலைப்பட ஏலுமே... அவ ஆர்... உன்ர அமம்மாதானே... பேசாம மறந்திடு... “

“ அம்மா ஆக்களுக்கு சீதனம் குடுக்க உழைச்சதாலைதான் மாமா வயசுகடந்து கலியாணம் கட்டினவர்.. அதாலைதான் அவராலை உழைச்சு காசுசேர்க்கவும் முடியேல்லை.... பாவம் மாமா.. ச்

ச் பழசுகளை என்னத்துக்கு இப்ப.. நாங்கள் இப்ப சந்தோசமா இருப்பம்.. ச் என்று அவன் சொன்னதோடு அவளும் விட்டுவிட்டாள்.

நாட்களின் நகர்வில் அவள் தாய்மையுற்றிருந்தாள். அவளால் தனக்கு விருப்பமான உணவுகளை உட்கொள்ள இயலாதிருந்தது.

ச் என்ன இருந்தாலும் பெற்றதாய்க்கு ஒருசொல்லு சொல்லவேணும்.. பேரப்பிள்ளை வரப்போகுதெண்டாலும் கோவம் ஆறிப்போயிடும்..“

மாமி சொன்னபோது அவள் மறுத்தேவிட்டாள்.

ச் அதென்ன பிள்ளை.. பெத்தமனம் பித்தாகாம இருக்குமே.. ச் என்றதோடு மாமி நின்றுவிடவில்லை.

தோட்டவேலைக்கு வரும் செல்லம்மாவிடம் விடயத்தை அம்மாவுக்கு தெரியப்படுத்தச் சொல்லிவிட்டார் மாமி. இரண்டுநாட்கள் கழித்து செல்லம்மா மாமியிடம் சொன்னதை இவளும் கேட்டாள்.

“ அவள் போனதோடை அவளை நாங்கள் கைகழுவிப்போட்டம்.. இஞ்சை இனிஒருத்தரும்

வந்துவந்து அவளின்ரை கதை சொல்லவேண்டாம்.. அவன் உதவாக்கரை எண்டு தெரிஞ்சும் அவனோடை ஓடிப்போனவ.. எக்கேடானாலும் கெட்டுப்போகட்டும்.."

அம்மா சொன்ன வார்த்தைகளை செல்லம்மா சொன்னபோது வானதி துடித்துப்போய்விட்டாள்.

இரவுநேரம் அப்போதுதான் வெளியேயிருந்து வந்த காந்தன் கிணற்றடியில் குளித்துக் கொண்டு நின்றான்.

" டேய்.. குளிச்சது காணும்.. கெதியிலை ஒரு ஓட்டோவை பிடிச்சுக்கொண்டு வா.. வானதிக்கு உடம்பு சரியில்லை.. ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகவேணும்.. ச் மாமியின் குரல் வானதியின் காதுகளில் ஒலித்ததும், ச் அம்மா.. அம்மா.." என்று அவள் அழத்தொடங்கிவிட்டாள்.

" என்ன செய்யிறது பிள்ளை.. அந்த நெஞ்சழுத்தக்காரி தானே உன்னை வேண்டாமெண்டு சொல்லிறா.. அழாதை.. நாங்களிருக்கிறம்.."

மாமியின் தோள்களை அணைத்தபடி மருத்துவமனைக்குப் போனாள். இரண்டு நாட்கள் உயிரைப்பிழிந்தெடுக்கும் வலி. மருத்துவர்கள் தமது பட்டறிவுகளையெல்லாம் ஒன்றுதிரட்டி முயற்சித்தார்கள். முடியவேயில்லை.

எல்லோர் முகத்திலும் களைப்பும் ஏமாற்றமும் வழிந்தன.. அவளோ மயக்கமடையும் நிலைக்கு வந்துவிட்டாள்.

வேறுவழியில்லை. அறுவைச் சிகிச்சைதான் இனியென மருத்துவர்கள் முடிவெடுத்ததை அறிவித்தபோது, காந்தன் கலங்கி அழுதான். மாமி எவ்வளவோ ஆறுதல் சொன்னாள்.

மெல்ல மெல்ல அவள் உணர்விழந்து கொண்டிருந்தாள்.

இப்போது அவளுடைய கண்கள் மெதுமெதுவாக விழிக்க முயல்கின்றன.. யாரோ பேசுவதெல்லாம் புரியாதமாதிரி காதுகளில் கேட்கிறது.. மருத்துவமனைக்கு வந்த நினைவு மெதுவாக மனதுக்குள் வருகிறது. தாகம் மேலிட, வலிந்து கண்களைத்திறக்கிறளாள்.

அது.. அம்மாதான். அம்மாதான் கோவக்காரியாச்சே..

நம்பிக்கையற்று.. இமைகளை வலிந்து திறந்து பார்க்கிறாள்.... அம்மாதான்.

"அம்..மா.."

அம்மா வானதியின் தலையைத்தடவியபடி, தனது சேலையின் தலைப்பால் அவளது கண்ணீரை ஒற்றி எடுத்துவிட்டுச் சொன்னாள்,

"ஆம்பிளப் பிள்ளை.. சரியா அப்பாவைப்போல.."

அவள் அம்மாவைப் பார்த்தாள். அம்மா இப்போது பெருமிதத்தோடு நிற்பதாகத் தெரிந்தது அவளுக்கு.

❑

● கவிஜி



ஓவியம்: முத்து

# நகுலன் தேர்ந்தெடுத்த கவிதைகள் - நூல் ஒரு பார்வை

டி கே துரைசாமி என்ற இயற்பெயரை நகுலனிடம் இருந்து பிடுங்கி தூர எறிகிறேன். நகுலனுக்கு நகுலன் என்பதைத்தாண்டி வேறு எந்த பெயரும் பொருந்தாது என்பது தான் அவர் மீது நான் கொள்ளும் பிரமிப்பு.

நகுலனின் படைப்புகள் பற்றிய எழுத்துக்களை விட நகுலனைப் பற்றிய எழுத்துக்கள் தான் அதிகம் எழுதப் பட்டிருக்கின்றன என்கிறார்.. "நகுலன் தேர்ந்தெடுத்த கவிதைகள்" நூலைத் தொகுத்த யுவன் சந்திரசேகர்.

நகுலனின் படைப்புலகத்தில் கவிதைக்கும் உரைநடைக்குமான இடைவெளி மிகவும் சன்னமானது என்கிறார் அவர். நான் கூட அதை உணர்ந்திருக்கிறேன். நகுலனின் கவிதைகள் எந்த இடத்தில் கவிதையாக மாறும் என்பது மிக தத்ரூபமான அரூப செயல் என்றே நம்புகிறேன். அப்படி ஒரு தோற்றத்தில்தான் தன்னை அவர் தனக்குள்ளாகவே சுருக்கி சுருக்கி ஒரு மாணிக்கத்தின் துகளென கவிதைக்குள் ஆனார் என்பது பெரிதினும் பெரிது போல கவிதையிலும் கவிதை போல நகுலனினும் நகுலன் எனலாம்.

நான் வானம் வெறித்து நின்ற ஒரு நொடியில் இதை எழுதத் தூண்டியது, நான் வானம் வெறிக்கத் துவங்கும் முன் படித்த நகுலனின் கவிதைகளாகத்தான் இருக்க வேண்டும். நகுலனின் கவிதைகளைப் படிப்பது போதி இல்லாமல் தியானிப்பது. அது காலம் நிறுத்தி வேடிக்கை காட்டும் மாய வித்தைகளின் மொத்தம்.

பித்த நிலையே புத்த நிலை. புத்த நிலையே யுத்த நிலை. கண்ணுக்கு தெரியாத யுத்த நிலையாய் முன் வரிகள் திறக்கும் பறவையின் அலகாய்

வந்து போகும் இடைவெளிக்குள் இல்லவே இல்லை என் வெளி. அங்கே முழுக்க நகுலனின் உளி.

மெல்லிசான சதுரக் கல்லை நீரோடு வீச.. அது நீரில் பட்டும் படாமல்.. பட்டும் படாமல்.. போய் கடைசியாக பட்டும் படாமலே..போய் விடுவது ஒரு விதமான சிதறல். அப்படி சிதற சிதற தான்.. நகுலனின் கவிதைகள் உதிர உதிர பூக்களாகும் புது தத்துவம் பிறக்கிறது. இன்று வரை வெளி..வளைந்து கொண்டே இருப்பதாகவும்.. பெருவெடிப்பின் சத்தம் நகர்ந்து கொண்டே இருப்பதாகவும் அறிவியல் கூறுகிறது. நகுலனின் அறிவில் யாருமற்ற ஒரு வெளி.. நூலெங்கும் வியாபித்திருப்பதை உற்று நோக்கினால் உணர முடிகிறது.

சிலரின் கவிதைகளை படிக்க படிக்க எழுதத் தோன்றும்.. நகுலனின் கவிதைகளை படிக்க படிக்க எழுதி விட்டதாகவே தோன்றும்.

புத்தகத்தில் ஒரு கவிதை இப்படி..

"யாருமற்ற இடத்தில்

என்ன நடக்கிறது

எல்லாம்.."

யாருமே இல்லாமல் போனாலும் அந்த இடத்தில் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது.. என்கிறார். அதை உணர நகுலன் தேவையே இல்லை என்பது போல.

அவரின் படைப்புகளில் உள் சென்று வெளியே வருவது கொஞ்சம் சிரமம்தான். முத்தெடுக்க வேண்டுமானால் மூச்சடக்கித்தான் ஆக வேண்டும். உள் சார்ந்த மரபுகளின் நீட்சியென நவீனம்

தலை விரித்தலில் நகம் போல மெல்ல மனம் கீறும் பொருளோடு இருக்கிறது என்பதாக நான் உணரப் படுகிறேன். உணராத பொருள் ஒன்றும் இருப்பதை உணராமல் இல்லை.. உணர உணரத்தான் உணர முடியும்.. உணருதலைப் போல..உணர்ந்துக் கொண்டே இருப்பதைப் போல..உணருதல் ஒன்றும் அத்தனை சுலபமான உணர்தல் அல்ல. உணர்ந்து படியுங்கள். உணர்ந்து கொள்ள முடியும். உணர்கொம்புகளுக்கு உள்ளும் ஒரு புறம் உண்டு என்பது தான் நகுலன் அடுத்த பக்கமும்.

நகுலனின் வட்டம்.. மிகச் சிறியது.

ஆனால் அதில் ஒரு ஆச்சரியம் இருக்கிறது. பார்க்க பார்க்க.. அது இன்னும் இன்னும் சிறியதாகி ஒரு புள்ளியாகிக் கொண்டே போவதில்தான் கிறுகிறுத்துப் போகும் சுற்றத்தைக் காண்கிறேன். கனா காண்பது போல.. கனாவை.. தூக்கத்தில் இல்லாமல் காண்பது அத்தனை சுலபமல்ல. அது தீவிரமான கலையின் குருதி கசிதல் போல. நகுலனின் இருண்மை பேராவல் கொண்டவை. படிப்பவர் சிறிது கவனம் சிதறினாலும் அது கம்பியில் இருந்து தவறி விட்ட சிறு பிஞ்சின் பாதமாகி விடும்.

“இருப்பதற்கு என்று தான்

வருகிறோம்

இல்லாமல் போகிறோம்..”

ஜனனத்தின் மரணத்தின் இடைவெளியை எத்தனை ஆழமாய் மூன்று வரிகளில் சொல்கிறார் பாருங்கள். நிஜம் சுடத்தான் செய்யும். விட்டு சென்ற காதலியின் கண்களைப் போல..நான் சிறுவயதில் கொய்யா மரம் ஏறுவேன்.. இறங்குவேன்.. அவ்ளோ உயரத்தில் ஏறி இறங்குதல் எனக்கு ஒரு விஷயமாகவே தெரியாது. விழுந்தால் கண்டிப்பாக கை கால் உடையும் உயரம் தான். ஒரு நாள் ஏறி உச்சியில் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது கீழே நின்று என்னைப் பார்த்த என் மாமா.. “குட்டி பாத்துடா.. விழுந்துடாத” என்றார். அதன் பிறகு என்னால் இறங்க முடியவில்லை. ஏணி வைத்து இறக்கினார்கள். அப்படி தான்.. நகுலனின் கவிதைகளை அப்படியே படித்து விட்டு வந்து விட்டால்.. உங்களுக்குள் போக வேண்டியது எல்லாம் போய் விடும். நகுலன் என்று நினைத்து படித்தால் ஒரு வெளிக்குள் மாட்டிக் கொள்வீர்கள். அவர் அப்படித்தான் மாட்டிக் கொண்டார். ஆனால் அவர் மாட்டிக் கொண்ட வெளியில் கொய்யா மரங்களின் வேர்களை அவரே சமைத்தார் என்பது தான் ஏணிகளற்ற படிப்பு.

நகுலனின் கவிதைகளை விட நகுலனைப் படிப்பது இன்னும் சுவாரஷ்யம் ஆகி விட்டதைத்தான் நவீன முரண் என்று கூறுகிறார் தொகுப்பாசிரியர்.

அவர் படைப்புகளில் தொடர்ந்து “சுசீலா” என்றொரு கதாபாத்திரம் வந்து கொண்டே இருக்கிறது. அது அப்படித்தான்.. பாரதிக்கு கண்ணம்மா கற்பனையாகத்தான் இருக்க வேண்டுமா என்ன..? “ராமச்சந்திரன்” கவிதையில் கூட நமக்கு தெரியாத நிறைய ராமச்சந்திரன்கள் இருக்கிறார்கள் என்ற சிறு புனைவை உண்மையாக்கி இருப்பார்.

“அலைகளை சொல்லி

பிரயோஜனமில்லை

கடல் இருக்கும் வரை" என்றொரு கவிதை.

இதை யார் வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால் நகுலன் எழுதும் போது கடலுக்குள் நிற்கும் உணர்வு. அலைக்குள் தவிக்கும் பதட்டம். கவிதைக்குள் திமிரும் சொற்கள்.

"நினைவு ஊர்ந்து செல்கிறது

பார்க்க பயமாக இருக்கிறது

பார்க்காமல் இருக்கவும் முடியவில்லை"

என்பதாக நினைவின் புதுவெளி விரிவதைக் காண முடிகிறது. நாமும்கூட இல்லாமல் போக பயப்படும் நினைவு இருப்பவர்கள் தான்.

எனது தேடல்களில் நான் நகுலனை ஒரு ஆழ்கடலெனவே நினைக்கிறேன். எனது மயக்கங்கள் எல்லாம் முயங்கித் தவிக்கும் பாலைவனத்தில் நகுலனின் வரிகளாகி சிதறுவதில் புது வெள்ளை மணல்துளிகள்.

"வெளியில் விழுந்து விட்டேன்..

யாவும் கண்டு

கொள்ளாமல்..

பின் வெளியே செல்வதேயில்லை.."

என்ற நகுலனின் கவிதை சொல்வது மீண்டும் மீண்டும் மீனாகி கிடப்பது தான் ஆழ்கடலின் தத்துவம். பசி போக்கும் தத்துவங்களும் உண்டு.

இந்த நூலில் பிற சேர்க்கையில்.. சுகுமாரனும் யுவன் சந்திர சேகரனும் நகுலனைப் பற்றி பேசிக் கொள்ளும் உரையாடல்கள் மிக உன்னிப்பாக கவனிக்க வேண்டியவை. நகுலன் என்ற இலக்கிய ஆளுமையைப் பற்றிய அவசியமான அலசல்.

ஒரு கட்டு வெற்றிலைக்கும் சீவலுக்கும்.. பிராந்தி போத்தலுக்கும் அவரிடம் வித்தியாசம் இல்லை. அவருக்கு எல்லாமே ஒன்று தான். அவர் தனிமையை தனக்குள் தான் கொண்டார். அது வெளியிலும் தனிமையாகவே பார்க்கப் பட்டு விட்டது. மிக சிறந்த தவம் செய்தது போல தான்.. இந்த புத்தகம் இருந்தது. இனி வரம் கொடுக்கலாம் போன்ற அமைதி உள்ளே ஏற்பட்டு விடும்..படித்து முடிக்கையில்.

ஞானத்தின் திறவை வார்த்தைக்குள் விட்டு.. தாகத்தின் வெளியை வாக்கியத்தில் தேடும் நகுலனின் கவிதைகளை படிக்காமல் விட்டவர்கள் பாக்கியவான்கள். ஒரு மேம்போக்கான வாழ்வு பாக்யவான்களுக்குத்தான் கிடைக்கும். பரிதவிப்போருக்கு தான்.. வாழ்வின் ஆழ்நிலை வாய்க்கும். அதை நகுலனைப் படிக்கையில் கண்டடைந்தேன்.

"மழை மரம் காற்று" நீள்கவிதையில் இரண்டு பகுதிகள் இப்புத்தகத்தில் இருக்கிறது. சாய்வு நாற்காலியில் தொடர்ந்து ஏழு நாள் அமர்ந்தபடி எழுதிய கவிதை என்று தெரிய வருகிறது. மழைமரக்காற்றோடுநகுலனும் சேர்ந்திருப்பது.. வார்த்தை அச்சில் வார்த்த வாழ்வின் புத்தகம்.

நகுலனின் திறந்த நிலை கவிதைகளில் வாசகர்களே மர்மம் நிரப்பிக் கொள்ளும் மாயம் நகுலனின் கவிதைக்கு நிகழ்வது கவிதைகளின் மர்மம் என்று தான் புரிந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

பெரிதாக கவித்துவம் இல்லாத.. ரொமாண்டிஸம் இல்லாத.. குற்றசாட்டு இல்லாத.. குவி வளையம் இல்லாத..நகுலனின் கவிதைகள் ஒன்றுமில்லாதவைகளால் நிரம்பி இருக்கின்றன என்பது தான் இங்கே பேசு பொருள். ஒன்றுமில்லாமல் இருப்பதற்கு தான் கூடுதல் தகுதி தேவை என்ற மெய்ப்பொருள் காண்பதில் நகுலன் தொட்ட இடம் யாருக்கும் வாய்க்காது.

அட்டைப்படத்தில் நாற்காலியில் பெருத்த யோசனையோடு அமர்ந்திருக்கிறார் அல்லது அப்படி நமக்கு தோன்றுகிறது. தோற்றப் பிழைக்கு காட்சி என்ன செய்யும். சாட்சி தான் என்ன செய்யும். எனக்கு தோன்றியது இப்படி.

"இந்த வழுக்கை தலையில் தான்

எத்தனை மினுமினுப்பு

இந்த சோடாபுட்டி கண்ணாடியில் தான்

எத்தனை பளிச்சிடல்

தேரில் அமர்ந்திருக்கும்

சாமியைப் போல திகட்டவேயில்லை

பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்

சாகப் போகும் காதலியைப் பார்ப்பதாக

இருக்கிறது

பரவசம் எதுவெனில்

எழுதத் தோன்றும் கவிதையைக் கூட

மறக்கத் தோன்றுகிறது

ஒருவேளை அசைந்து நிமிர்ந்து பார்க்க

நேரிட்டால்

எதிர் நின்று சிரித்துக் கொண்டிருப்பேனோ

சிறுவன் நகுலனாக..!"

❑

# பாரியன்பன் - கவிதைகள்



*1.*

*நம் வீட்டு மதில் மேல்*
*அமர்ந்த காக்கைகள்*
*இருபுறமும் மாறிமாறி*
*கரைந்தன.*
*மதியம் உன் வீட்டுக்கு*
*நான் வந்தேன்.*
*மாலையில் என் வீட்டுக்கு*
*நீ வந்தாய்.*
*நம் இருவர் வீட்டிற்கும்*
*கடைசிவரை வரவேயில்லை*
*விருந்தாளிகள்.*

*2.*

*நெடுநாள் கழித்து*
*சொந்த ஊர் பயணம்.*
*வரவேற்பிலும் பாசத்திலும்*
*சற்றும் குறையாத*
*சுற்றமும் நட்பும்.*
*பழைய அசல்*
*காணாமல் இருந்தது*
*என் கிராமம்.*

*3.*

*பக்தி சிரத்தையுடன்*
*கடவுளை வேண்டினால்*
*எல்லாமும் அருள்வதாய்*
*செல்கிறார்கள்*
*ஆன்மீகப் பெரியோர்கள்.*
*அனைத்தும் நிறைவாய்*
*பெற்றிருக்கும் கடவுளிடம்*
*நாங்கள்*
*வேண்டிக் கொண்டுதான் இருக்கிறோம்.*
*எங்களுக்கு*
*அள்ளித் தர வேண்டாம்.*
*கிள்ளித் தரக்கூட மனமில்லை*
*அந்தப் பொல்லாத கடவுளுக்கு.*

*4.*

*காந்தி உருவம் பதித்த*
*ரூபாய் நோட்டுகளே*
*உழைப்பையும் அறிவையும்*
*தீர்மானிக்கிறது.*
*எனது வியர்வையும்*
*அவனது மூளையும்*
*பேரமாவது கூட*
*காந்தி உருவம் பதித்த*
*ரூபாய் நோட்டுகளுக்காகத் தான்.*
*காந்தியல்லாத*
*நோட்டுக்களாக பெறப்படுபவை*
*அனைத்தும் பயனற்றவை..!*

*5.*

*அந்தக் கடவுளிடத்தில்*
*நான் எட்ட நின்றே*
*கோரிக்கை வைக்கிறேன்.*
*இந்த வண்டுகளுக்கு*
*ரொம்பவும் தான் துணிச்சல்.*
*பூக்களின் கருவறைக்கே சென்று*
*ரகசியம் பேசுகின்றன.*

**மகிழை.சிவகார்த்தி, புறத்தாக்குடி,**



# “ஏதோ ஒன்று”

*இனம் புரியாத ஏதோ ஒன்று எனக்குள்*
*துள்ளிக்குதித்து குதுகலமாய்!*

*அக்கணம் கவர்ந்திழுக்கும் எதிர்*
*பாலினமொன்று என்னை கடந்துபோகிறது!*

*அதைக்கண்டதும் எனக்குள்ளிருக்குமொன்றோ*
*துள்ளிக்குதிக்கிறது கட்டுக்கடங்காது!*

*சற்றுத்தூரம் கடந்தபின் நின்று*
*அது திரும்பிப்பார்க்கிறது!*

*ஒன்றையொன்று பார்த்ததில் அதுவும் இதுவும்*
*மகிழ்ச்சிக்கடலில் திளைக்கிறது!*

*இரண்டும் சேர்ந்த ஒத்த நிலைப்பாட்டிற்கான*
*பெயரும் அர்த்தமும் அவைகளுக்கே*
*தெரியவில்லை!*

*அப்படியே அவைகள் சொன்னாலும்*
*மற்றவர்களுக்கு புரியபோவதுமில்லை!*

*விட்டுவிடுங்கள் அது அவைகளுக்குள்ளாகவே*
*இருந்துவிட்டுப்போகட்டும் சந்தோசமான*
*என்னமோ ஏதோ ஒன்றாய்!*

❑

● எஸ்ஏ. முத்துபாரதி



# பாராட்டு

அந்த பள்ளிக்கூடத்தின் வாசலில் நின்றிருந்த காவலாளியிடம் தனது அலைபேசியில் உள்ள படத்தைக் காண்பித்து இந்த மாதிரி சீருடை அணிந்த மாணவர்கள் இந்தப் பள்ளியில்தானே படிக்கிறார்கள் எனக் கேட்டார் தொழிலதிபர் சிவபிரகாசம். பள்ளிக்கூட வாசலில் நின்றிருந்த அந்தக் காவலாளி அந்தப் படத்தைப் பார்த்து சற்றே அதிர்ச்சியுடன் ஆமாங்க அய்யா, இந்தப் பையன் ஏதும் பிரச்சனை செய்துட்டானா எனக் கேட்டார். இல்லை இல்லை அப்படி எதுவும் இல்லை, பயப்பட வேண்டாம். இது சம்பந்தமாக பள்ளி தலைமையாசிரியரை சந்தித்துப்

பேச வேண்டும் என்றார். சரிங்க ஒரு நிமிடம் பொறுத்திருங்க, எனச் சொல்லி தனது காவலர் அறைக்குச் சென்று அங்கிருந்த தொலைபேசியில் பேசிவிட்டு வந்து, தலைமையாசிரியர் இருக்கும் இடத்திற்கான வழியைக் காட்டினார் காவலாளி.

அவரிடம் நன்றி தெரிவித்து தலைமையாசிரியர் அறையை நோக்கிச் சென்றார் சிவபிரகாசம். இவரின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்து வரவேற்று அமர வைத்தார். உதவியாளரை அழைத்து குடிப்பதற்கு குடிநீர் தரச் சொல்லிவிட்டு தேநீர் ஏதும் குடிக்கறீங்களா எனக் கேட்டார். அதெல்லாம் வேண்டாங்க, இன்று காலை நான் நடைபயிற்சி முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு மாணவன் தனது மதிய உணவு பாத்திரத்தைத் திறந்து அதிலிருந்த உணவினை சாலையின் ஓரத்தில் பரிதாபமாக அமர்ந்து கையேந்திக் கொண்டிருந்த ஒரு முதியவருக்கு வழங்கிக் கொண்டிருந்தான். நான் உடனே எனது அலைபேசியில் அதை படம்பிடித்துக் கொண்டேன். அந்த மாணவன் சென்றதும் நான் சென்று அந்த முதியவரின் நிலை அறிந்து முறைப்படி காப்பகத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்துவிட்டேன். இருந்தாலும், தனக்கான உணவினை தயங்காமல் அந்த முதியவரின் வறுமை நிலையைப் பார்த்து வழங்கிய அந்த மாணவனைப் பாராட்ட வேண்டும் என்றுதான் வந்துள்ளேன். அந்த மாணவனுக்கு பரிசு வழங்கி பாராட்ட விரும்புகிறேன் என தனது அலைபேசியில் இருந்த அந்த மாணவனின் புகைப்படத்தைக் காட்டினார். மகிழ்ச்சியுடன் ஆர்வமாக வாங்கிப் பார்த்தார் தலைமையாசிரியர். அந்த மாணவனின் படத்தை தனது அலைபேசியிலும் பதிந்து கொண்டார். உடனே உதவியாளரை அழைத்து இந்த மாணவன் எந்த வகுப்பு எனப் பார்த்து அழைத்து வாருங்கள் எனக் கூறினார். உதவியாளர் சென்று சில விநாடிகளில் திரும்ப வந்து "அய்யா, இந்த மாணவன் ஆறாம் வகுப்பு படிக்கும் தங்கமணி" என நமது உடற்கல்வி ஆசிரியர் தெரிவித்தார் எனக் கூறினார். சரி அழைத்து வாருங்கள் என தலைமையாசிரியர் சொன்னதற்கு, தொழிலதிபர் மறுத்து "நாமே நேரடியாக வகுப்பறைக்குச் சென்று மற்ற மாணவர்கள் மத்தியில் பாராட்டும்பொழுது, மற்ற மாணவர்களுக்கும் இதுபோன்ற நல்ல பழக்கங்கள் உருவாக வாய்ப்பு ஏற்படுமே" என்றார். இதுவும் நல்லதுதான் வாருங்கள் போகலாம் என தொழிலதிபரை அழைத்துக் கொண்டு ஆறாம் வகுப்பிற்குச் சென்றனர். அப்பொழுது வகுப்பாசிரியர் அற்புதராஜ் மாணவர்களுக்கு வரலாற்று ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

வகுப்பிற்கு வெளியே தலைமையாசிரியரும் உடன் வந்திருந்த விருந்தினரையும் பார்த்தபின் பாடம் எடுப்பதை நிறுத்திவிட்டு, மாணவர்களிடம் தலைமையாசிரியர் வந்துள்ளார் அனைவரும் எழுந்து நின்று வணக்கம் சொல்லுங்கள் என்றார். இப்படி வகுப்பாசிரியர் அறிவிக்கும்பொழுது தலைமையாசிரியர் தொழிலதிபருடன் வகுப்பறைக்குள் நுழைந்தார்.

மாணவர்கள் அனைவரும் ஆச்சரியமாக, ஆர்வமுடன் பார்த்தனர். ஏனெனில் இதுபோன்று தலைமையாசிரியர் வழக்கமாக வகுப்பறைக்கு வருவதில்லை. அதுவும் ஒரு அறிமுகம் இல்லாத புதிய விருந்தினருடன் வந்துள்ளாரே என அனைவரும் ஆச்சரியத்துடன் காத்திருந்தனர். தலைமையாசிரியர் பேச ஆரம்பித்தார். "இங்கே தங்கமணி என்கிற மாணவன் என் அருகில் வரவேண்டும்" என்றார். தன் பெயர் உச்சரிக்கப்பட்டதும் திடீரென பயத்துடன் எழுந்து நின்றான் தங்கமணி. பயப்படாத தம்பி இங்க வாங்க என அழைத்தார். சற்று தயங்கியபடி தலைமையாசிரியர் அருகில் சென்றான்.

அவனை தன் முன்னால் அனைவரும் பார்க்கும்படி திருப்பி நிறுத்தி, இன்று இம்மாணவன்

செய்த செயலைப் பாராட்டி இந்த பெரியவர் பரிசு வழங்குவதற்காக நமது பள்ளிக்கு வந்துள்ளார் என அறிவித்தார். அனைவர் மனதிலும் எதற்கு பரிசு, அப்படி என்ன செய்தான் தங்கமணி என்கிற கேள்விக்கு மேல் கேள்வி எழுந்தது. தலைமையாசிரியர் காலையில் நடந்த சம்பவத்தைச் சொன்னவுடன் தங்கமணி இயல்பான நிலைக்கு வந்தான். அதுவரை அவன் மனது படபடவென அடித்துக் கொண்டிருந்தது. அத்துடன் அந்த தொழிலதிபர் அந்த முதியவரை காப்பகத்தில் சேர்த்துவிட்டதையும் தெரிவித்தார்.

இதுபோன்ற உதவி செய்யும் மனப்பான்மை உள்ள நமது மாணவனைப் பாராட்டி அவர் பரிசு வழங்க விரும்புகிறார் எனச் சொன்னவுடன் அனைவரும் கரவொலி எழுப்பி தங்கள் பாராட்டுதல்களையும் தெரிவித்தனர். தொழிலதிபர் சிவப்பிரகாசம் அவர்கள் தங்கமணிக்கு பரிசு வழங்கினார். பணிவுடன் பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தான் தங்கமணி.

தலைமையாசிரியரும், விருந்தினரும் சென்றபின்னர் வகுப்பாசிரியர் தங்கமணியை அழைத்து தோளில் தட்டிக்கொடுத்து பாராட்டினார். எங்களிடம்கூட இப்படி நடந்ததைச்சொல்லவில்லையே எனக் கேட்டார். அய்யா, இப்படி எதாவது உதவி அவ்வப்பொழுது செய்து கொண்டேதான் இருக்கிறேன். அனைத்தையும் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம் எனக் கருதினேன் என்றான். அனைவரின் கரவொலியில் மீண்டும் அந்த வகுப்பறை கலகலப்பானது. அன்று மதிய உணவு இடைவேளையில் தன்னுடன் பகிர்ந்து சாப்பிடுமாறு உணவு கொண்டு வந்திருந்த அனைவரும் வற்புறுத்தினர். அனைவரின் அன்பிற்கும் நன்றி சொல்லி அனைவரிடமும் ஒரு கவளம் உணவு வாங்கி சாப்பிட்டு தன் நட்பினையும் அன்பினையும் பகிர்ந்து கொண்டான் தங்கமணி.

❑

● பா.சிவகுமார்

# ரிங்டோனாய் குருவிச்சத்தம்!

*சித்தம் கலங்கி*
*அலைந்து திரிந்து கூடு மறந்து*
*மின்காந்தக் கதிர்வீச்சில்*
*இனப்பெருக்க மண்டலம் பாதித்து*
*கட்டுப்பாடிழந்த*
*விமானமாய்*
*பொத்தென விழுந்து*
*கொஞ்சம் கொஞ்சமாக*
*அடங்கி மரணத்தைத் தழுவி*
*செம்பட்டியலில் இடம் பெறுகின்றன*
*25 கிராம் எடை கொண்ட*
*இறைவனின் குட்டிப் படைப்புகள்!*
*சிட்டுக் குருவிகள்!*


*உலக நடப்பு தெரியாமல்*
*பப்ஜியில் முடங்கி*
*சுட்டுக் கொண்டிருக்கிறது*
*இன்றைய இளைய தலைமுறை!*
*ஒவ்வொருவரைக் கொல்லும் போதும்*
*சிட்டுக் குருவிகள்*
*செத்து விழுவது தெரியாமல்..*

*இனப்பெருக்கம் பாதிக்கப்பட்டு*
*சிட்டுக்குருவிகள் பரிதவிக்கையில்*
*இச்சை பெருக்கிட*
*சிட்டுக்குருவி இலேகியம்*
*தேடியலையுது*
*முதிய தலைமுறை!*

*ரிங்டோனில் உள்ள*
*குருவிச் சத்தம்*
*அப(அபா)யக் குரலாய்*
*எனக்கு மட்டும் தானா கேட்கிறது?*

❑

● சிறீ சிறீஸ்கந்தராசா



# ஈழத்துச் சிறுகதை வரலாறு

*தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களும் வளம் சேர்த்துள்ளனர்.*

*மு. தளைய சிங்கம் (1935 - 1973) மிகச் சிறந்த சிறுகதை எழுத்தாளராக விளங்கியுள்ளார். 1960 முதல் 1965 வரையிலான காலக் கட்டத்தில் பல சோதனைக் கதைகளை எழுதியுள்ளார்.*

*புதுயுகம் பிறக்கிறது என்ற தலைப்பில் இவருடைய கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இக்கதைகள் பெரும்பாலும் மேனாட்டுப் புதிய இலக்கியப் படைப்புகளை ஒத்துக் காணப்படுகின்றன.*

யாழ்ப்பாணத்துக் கிராமிய மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு எழுதியவர்களில் செம்பியன் செல்வன், செங்கை ஆழியான் இருவரும் குறிப்பிடத் தக்கவர்கள்.

செ.கணேசலிங்கன், செ.கதிர்காம நாதன், எம்.ஏ.ரஹ்மான், கே.டானியல், க.குணராசா, இளங்கீரன், அ.செ.முருகானந்தன், அ.பாலமனோகரன், எஸ்.பொன்னுதுரை ஆகிய சிறுகதை எழுத்தாளர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

இயேசு ராஜா, குப்ளான் சண்முகம் போன்ற சிறுகதை ஆசிரியர்களும் சிறந்த கதைகளை எழுதி வருகின்றனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து எழுதிய பெனடிக்டு பாலன், தென்னிலங்கை இசுலாமிய மக்களின் வாழ்க்கைப் பின்னணியில் எழுதிய திக்குவல்லை கமால் போன்றவர்களும் குறிப்பிடத் தக்கவர்கள்.

தற்போது பல பெண் எழுத்தாளர்களும் புலம் பெயர்ந்த எழுத்தாளர்களும் பெருகி வருகின்றனர். இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியன், சுதா ரூபன் போன்றவர்கள் புலம் பெயர்ந்த எழுத்தாளர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவார்கள்.

ஈழத்தின் சிறுகதை முன்னோடிகள் என்ற வகையில் மூவரைக் குறிப்பிடலாம்.

இலங்கையர்கோன்

இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகியவர்களே அவர்கள்.

இவர்கள் ஆளுமைமிக்க சிறந்த சிறுகதையாசிரியர்களாக இருந்தார்கள். சிறுகதை என்ற புதிய இலக்கிய வடிவத்தை எமது வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். புராண இதிகாசக் கதைகளை பெரும்பாலும் கருவாகக் கொண்டு கற்பனை ரதத்தில் பயணித்து சுவையான வாசிப்பு அனுபவத்தைத் தந்தார்கள்.

இருந்தபோதும் போதும், எமது மண்ணின் பிரச்சனைகளை பெரிதாக தமது படைப்புகளை வெளிப்படுத்தவில்லை.

சிறுகதை என்ற இலக்கிய வடிவத்தை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் பணி அவர்களுக்கானதாக இருந்ததால் அதன் வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கபட்டதில் வியப்பில்லை. கரு, களம் ஆகியவற்றைப்பொறுத்த வரையில் தாம் சார்ந்த சமூகத்தை முன்னிலைப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது எனலாம்.

"இம்மூவரதும் கதைகள் பெரும்பாலும்

(1) வரலாற்று இதிகாச சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

(2) தனிமனித அவலங்களையும் உணர்வுகளையும் (சமூக, யதார்த்த சூழலின்றி) வெளிப்படுத்தின.

(3) மனோரதியப் பாங்கில் அமைந்திருந்தன."

எனப் பேராசிரியர் செ.யோகராசா ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

இருந்தபோதும் மண்வாசனையுள்ள, சமூக விழிப்புணர்வை நோக்கிய படைப்புகள் அக்காலத்தில் எழுதப்படவில்லை எனக் கூறமுடியாது.

ஆனந்தன் என்ற புனைபெயரில் எழுதிய சச்சிதானந்தன் சாதிப்பிரச்சனையை மிகச் சிறப்பாக அக்காலத்திற்கு ஏற்றவாறு தண்ணீர்த் தாகம் என்ற சிறுகதையில் சொல்லியிருந்தார்.

மறுமலரச்சி சஞ்சிகை காலகட்டத்துப் படைப்புகளான இலங்கையர்கோனின் 'வெள்ளிப் பாதரசம்',

சம்பந்தனின் 'துறவி',

சி.வைத்தியலிங்கத்தின் 'பாற்கஞ்சி'

கனகசெந்திநாதனின் 'ஒரு பிடி சோறு',

அ.செ.முருகானந்தனின் 'வண்டிச் சவாரி'

போன்றவை இன்றும் பேசப்படுமளவிற்கு மிகச் சிறந்த படைப்புகளாக இருக்கின்றன.

குடாநாட்டுக்கு அப்பாலான முயற்சிகள் மேற் கூறிய முயற்சிகள்

யாழ்ப்பாணத்தில் கருக்கட்டிய வேளையில் மலையகத்திலும் சிறுகதை படைப்பாக்க முயற்சிகள் தோன்ற ஆரம்பித்தது.

மலைநாட்டுத் தோட்டத் தெழிலாளர்கள் பற்றி திரு.கோ.நடேசஐயர் சில சிறுகதைகளை எழுதியாக அறிய முடிகிறது. கே. கணேஷ், அவர்களும் இவ்வாறன முயற்சிகளில் எழுதியுள்ளார். 'சத்திய போதி மரம்' என்ற அவரது சிறுகதை அறம் வெல்லும் என்பதை உணர்த்தும் ஒரு நல்ல படைப்பாகும்.

கிழக்கு மாகாணத்தில் அதிலும் முக்கியமாக மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்தும் சிறுகதை எழுத்து விதைவிட ஆரம்பித்தது.

வித்துவான் கமலநாதன், சிவா, மற்றும் புரட்சிக் கமால்

ஆகியோரை முன்னோடிகளாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். பித்தன் மற்றொரு சிறந்த சிறுகதையாசிரியர் ஆவார்.

மூதூர் பிரதேசத்திலிருந்து எழுதியவரான வ.அ.இராரத்தினத்தின் 'தோணி' இன்றளவும் போற்றப்படும் படைப்பாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**1950** முற்பட்ட காலகட்டத்தில் அவ்வாறான சிறந்த சிறுகதைகள் ஈழத்துச் சுழலில் எழுந்தபோதும், அதற்குப் பிற்பட்ட காலத்தில்தான் எமது சிறுகதைத் துறையில் பாரிய துரித வளர்ச்சியைக் கண்டது எனலாம்.

இலங்கையிலும் பொதுவுடமை சார்ந்த கருத்துக்கள் 40, 50களில் மக்களிடையே

செல்வாக்குச் செலுத்தின. தொழிலாளர் எழுச்சிகள் தோன்றின. இடதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கு இளம் சமுதாயத்தினரிடையே பெரும் செல்வாக்கைச் செலுத்தியது. இவை படைப்புலகிலும் பிரதிபலித்தது.

இதனால் இன்றுவரை ஈழத்தில் படைக்கபடும் சிறுகதைகள் சமூக உணர்வோடும் அதன் மேம்பாடு நோக்கியுமே படைக்கப்படுகின்றன. வெறுமனே புகழுக்காவும், பொழுது போக்கிற்காகவும், பாலியல் கவரச்சிக்குமாக எழுதப்படுவதைக் காண்பது அரிது.

மற்றொரு புறத்தில், இலங்கை அரசியலிலும் தேசிய உணர்வு ஏற்பட்டமையும் எமது சிறுகதை வளர்ச்சிக்கு அளப்பரிய வாய்ப்பாக அமைந்தது. எமது மண்ணின் பிரச்சனைகளை மண்வாசனையுடன் எழுதவேண்டும் என்பதை எமது எழுத்தளர்கள் முற்று முழுதாக ஏற்றுக் கொண்டனர்.

ஈழத்து இலக்கியப் பரப்பில் முக்கிய விமர்சகர்களாக வெளிப்பட்ட பேராசிரியர்கள் சிவத்தம்பி, கைலாசபதி போன்றவர்கள் முற்போக்காளர்களாக இருந்த காரணத்தால் தம் அணிசார்ந்த எழுத்தாளர்களையும்; முற்போக்கு அம்சங்கள் கொண்ட படைப்புகளை பாராட்டிச் சிலாகித்ததை மறுக்க முடியாது.

நந்தி, சாந்தன் போன்றவர்கள் ஆரம்பத்தில் முற்போக்கு அணியுடன் இருந்தபோதும், தமிழ் தேசிய உணர்வுடன் படைப்புகளைத தருவதில் பின்நிற்கவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்.

இவ்வாறு பல்வேறு பிரிவுகளாக நின்று தங்களுக்குள் மோதியபோதும் எமது மண்ணின், தேசத்தின் இலக்கியம் வளர்ந்து சென்றது.

கணேஸ், அ.ந.கந்தசாமி, டொமினிக் ஜீவா, டானியல், என்.கே.ரகுநாதன், நீர்வை பொன்னையன், ஈழத்துச் சோமு, தெணியான், செ.யோகநாதன் போன்ற பலரையும் முற்போக்கு அணி சார்ந்த முக்கிய படைப்பாளிகளாக குறிப்பிடலாம்.

'ஈழத்து இலக்கிய செல்நெறியில் முற்போக்குச் சிறுகதைகளின் சுவடுகள்' என்ற தொகுப்பு நூல் பற்றி விமரசித்த லெனின் மதிவாணம் இவ்வாறு கூறுகிறார்.

'இத்தொகுப்பில், முற்போக்கு நோக்கிலான சிறுகதைகளாக இரத்த உறவு (அ. ந. கந்தசாமி),

ஒரு புதிய ஆயுதம் (சி. வி. வேலுப்பிள்ளை),

தண்ணீர் (மொஹிதீன்),

வாய்க்கரிசி (டொமினிக் ஜீவா),

பிரசாதம் (எஸ். அகஸ்தியர்),

மண்பூனைகளும் எலி பிடிக்கும் (மருதூர்க்கனி),

47 வருடங்கள் (கே. விஜயன்),

*தேவ கிருபையை முன்னிட்டு வாழும்.... (காவலூர் ராசதுரை), ஊர் நம்புமா? (நந்தி),*

*ஒரு கிராமத்து பையன் கல்லூரிக்கு செல்கின்றான்*

*(செ. கதிர்காமநாதன்), பெருமூச்சு (ஏ. இக்பால்),*

*எப்படியும் பெரியவன் தான் (தெணியான்),*

*மாறுசாதி (திக்குவல்லை கமால்),*

*நிலவோ நெருப்போ?(என்.சோமகாந்தன்),*

*என் நண்பன் பெயர் நாணயக்கார (சாந்தன்),*

*அந்தக் கிழவன் (அ.ஸ. அப்துஸ் ஸமது),*

*பகவானின் பாதங்களில் (மு. கனகராசன்)*

*ஆகியன காணப்படுகின்றன.*

*மார்க்ஸிய நோக்கிலான சிறுகதைகளாக*

*தண்ணீர்,(கே டானியல்),*

*போர்வை(என். கே ரகுநாதன),*

*சங்கமம்(நீர்வை பொன்னையன்),*

*நேற்றைய அடிமைகள்(செ.யோகநாதன்)*

*ஆகியன காணப்படுகின்றன.*

முற்போக்கு கருத்தியல் கொண்டபோதும் நந்தினி சேவியர் விமர்சகர்களால் பெரும்பாலும் கண்டு கொள்ளப்படுவதில்லை. மிகச் சிறந்த ஒரு முற்போக்குப் படைப்பாளியாக அவர் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆழ்ந்த மார்க்ஸிய கொள்கைப் பிடிப்புக் கொண்டவர். ஆயினும் அவரது படைப்புகளில் எந்தக் கோசமும் முனைப்படுவதில்லை. மிகுந்த கலைநயம் வாய்ந்த படைப்புகளை அவர் தந்திருக்கிறார்.

அவரது 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்' என்ற தொகுப்பு வெளி வந்தது. அதற்கு முன்னுரை எழுதிய ரவிக்குமார் அவர்கள் 'குரலை உயர்த்தாமலே கொதிப்பை வாசகனுக்குக் கடத்த முடியும் என நிருபிப்பவை இவரது கதைகள்' என்கிறார்.

குப்பிளான்.சண்முகம், சட்டநாதன், உமா வரதராஜன் (அரசனின் வருகை), ரஞ்சகுமார் (கோசலை), எஸ்.எல்.எம்.ஹனிபா (மக்கத்துச் சால்வை), ஓட்டாவடி அரபாத், திசேரா, திருகோவிலூர் கவியுகன். ராகவன், போன்றவர்களின் படைப்புகள் இவற்றுள் தனித்துவமான

வாசிப்பு அனுபவங்களைத் தருகின்றன.

எஸ்.பொ எப்பொழுதும் தனித்துவமான படைப்பாளியாக இருந்த அதே நேரம் இலக்கியத்தில் தூய்மை பேணுபவர்களின் கடும் விமர்சனங்களும் ஆளாக நேர்ந்திருக்கிறது.

படைப்புகள் செழுமையாக வரவேண்டும் என்பதில் அக்கறையோடு செயற்பட்டவர் அ. யேசுராசா. தனது படைப்புகள் ஊடாகவும், அலை சஞ்சிகை ஊடாகவும் ஈழத்து படைப்பிலக்கியத்திற்கு ஆற்றிய பணி அளப்பரியது.

முனியப்பதாசன் மற்றொரு தனித்துவமான படைப்பாளி. ஆன்மீகத் தேடல், அழிவும் தேய்வும், ஆணிவேர், துறவி போன்ற பல படைப்புகளை எடுத்துக் காட்ட முடியும். 'முனியப்பதாசனின் எழுத்துக்கு நிகரில்லை.

மு.தளையசிங்கம், மு.பொ, ஆகியோரின் ஆத்மார்த்தம் சார்ந்த தனித்துவமான பாதையில் பயணித்தனர்.

தளையசிங்கத்தின் கோவில்கள், அகல்யை, மு.பொ வீடும் பல்லக்கும், சீதை யுகங்களை விழுங்கிய கணங்கள், போன்ற பல சிறுகதைகள் ஆத்மார்த்தத்தோடு தமிழ் தேசிய கருத்தியலோடு இணைந்தவை இவர்களது படைப்புகள்.

**பெண்ணியம்**

பெண்ணியக் கருத்தியல் கொண்ட படைப்புகளைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், கோகிலா மகேந்திரன், பத்மா சோமகாந்தன், பாலேஸ்வரி, கவிதா, சந்திரா தியாகராஜா, அன்னலட்சுமி ராசதுரை, ரூபராணி ஜோசேப், ராணி சீதரன் எனப் பலரையும் கூறலாம்.

இருந்தபோதும் பெண்ணியம் கவிதையில் கண்ட எழுச்சியைச் சிறுகதைகளில் தரிசிக்க முடியவில்லை.

**புலம் பெயர் படைப்புகள்**

புலம் பெயர் படைப்புகள் பெரும்பாலும் தாம் இழந்த வாழ்வின் துயரங்களை இரை மீட்பனவாகவே இருந்தன.

ஆனால் அவர்களுள் அ.முத்துலிங்கம், ஆசி.காந்தராஜா, பொ.கருணாகரமூர்த்தி ஆகியோர் புதிய தரிசனங்களைத் தந்தார்கள்.

வித்தியாசமான படைப்புலகுடன் தொடர்ந்து பயணிக்கின்றனர். அவர்களது களங்கள் புதியன. அப் புதிய களங்குடன் எமது பாரம்பரியங்களை கலந்து படைப்பதில் வெற்றி பெற்றுள்ளார்கள்.

விமல் குழந்தைவேல், ராஜேஸ்வரி. பாலசுப்பிரமணியம், ஷோபா சக்தி, சுமதிரூபன், இரவி.அருணாசலம், சிறிதரன், ரமணீதரன்(சித்தாந்த சேகுவரா), சார்ல்ஸ் போன்றவர்களின் சிறுகதைகளும் அதிகம் கவனத்திற்குள்ளாயின.

தமிழ்நதி என்ற புனைபெயரில் எழுதிவரும் கலைவாணி கவனத்தில் எடுக்க வேண்டிய படைப்பாளி. சிறுகதை, கவிதை, நினைவுப் பதிவுகள், நூல் விமரிசனமென 'இளவேனி'ல்' என்னும் தன் வலைப்பதிவில் படைப்புகளைப் பகிர்ந்து கொள்கிறார்.

சுமதி ரூபன் மற்றுமொரு அருமையான படைப்பாளி. யாதுமாகி என்ற சிறுகதைத் தொகுதி வந்துள்ளது. குணேஸ்வரன் இவை பற்றிக் கூறுகையில்

'இத்தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கதையும் பெண்களின் ஒவ்வொரு பிரச்சினையை முன்வைக்கின்றது. சிறுவயதில் இருந்து பெண் என்ற காரணத்தினால் ஆணாதிக்க சமூகத்தின் ஒடுக்குமுறைக்கு ஆளாகும் பல பெண்களை கதைகளில் இனங்காண முடிகின்றது.'

புலம் பெயர்ந்த படைப்பாளிகளிடம் ஒரு பணிவான வேண்டுகோள்:

உன் படையும் கொடியும் பல்லக்கும் பவனிவருவதை

இந்தப் பூமிப்பந்து பார்த்தாக வேண்டும்!

வெறும் புனைவுகளும், பூச்சூடல்களும், இன்னும் புரிந்துகொள்ளவே முடியாத பெண்விடுதலை பற்றியும் உங்கள் பொழுதுகளையும் ஆற்றல்களையும் வீணாக்காதீர்கள்!!

இந்த மண்ணின் விடுதலையை நீ விரைவுபடுத்த வேண்டும்!! வலியிலிருந்து இந்த மக்களை நீ மீட்டெடுக்கவேண்டும்!!

உலகின் எப்பாகத்திலும் உன்குரலே உரத்து ஒலிக்கவேண்டும்!!

உங்கள் படைப்புக்கள் எல்லாம் இவற்றையே சுமந்துவர வேண்டும்!

❑

● செவல்குளம், செல்வராசு

# பழி


தனிமையின் விரக்தியில்
விட்டம் பார்த்துக்கிடக்கும்போதும்
தள்ளாடி நடந்து
வீடு வந்து சேரும்போதும்
தாளாத போதையில்
தடுமாறி விழும்போதும்
"ஏ நிறைகுளத்தா(ன்)
எம்புள்ள பிழப்பு
ஊர் சிரிக்க ஆயிப்போச்சே" னு
கண்ணில் நீரொழுகப் புலம்புவாள்
அம்மா

தற்கொலைக்கு முயன்று
வீடு மீண்ட வாரத்தில்
ஊரடங்கிக்கிடந்த
உச்சிப் பொழுதில்
'மரியா' பார்க்கவந்தபோது
வீட்டில் வேறு யாரும் இல்லை
ஒன்றும் சொல்லாமல் அழுதாள்
அம்மா
இருவரும் மௌனமாயிருந்தோம்

"பெத்த தாயி செய்யுற காரியமான்னு
ஊர் கரிச்சுக் கொட்டுமே
எம் பழிய எங்க போய்த் தீப்பேன்
ஏ வண்டி மறிச்சா(ள்)
எம்புள்ள வாழ்கைய
நேராக்கமாட்டியா" னு
புலம்பிக்கிட்டே வீடுவிட்டகன்றாள்.

❑

● சதீஷ் குமரன்



சின்னஞ்சிறு அலகு
வானத்தைப் பருகும் குருவி
குளம்.

❍

சில்வண்டுகள் பாடித்தீர்க்கும் குளிர்
இரவில் அதன்
கானல்வரிகள்
எவர் காதில் விழக்கூடும்
மழையாய்

❍

சாமிகளே எட்டிப்பார்க்காத எங்கள்
தெருவில் ஆடித்தீர்த்தது பேய் மழை
❍

சேற்று வாடை நிரம்பிய
கவிச்சிகளாலானது என்
பிரியங்களும் நம் முத்தங்களும்
❍

திடீரென வந்துவிட்ட மழை
திக்குமுக்காடிப்போனது
குடைகளற்ற நம் அந்தி

❍

ஒற்றைக் கால் ஒடிந்து வடக்கிருக்கும்
வெட்டுக்கிளியின் கனவுகளிலும்
கான்கிரீட் முட்கள்.

❍

மழை வந்தவுடன் தரைவரை இறங்கி
வேர்விட்டு ஒளிர்கிறது உன் பேரன்பின்
மின்னல்.

❍

பிரிவின் இறுக்கத்தை அவிழ்த்தெறிந்து
ஈரமாக்கி ஆடுது
யாவருக்குமான மழை !

❍

பொன்னரளி மரத்தின்
நடுவே
புகுந்து செல்லும்
நிலவின் தலையில்
முளைத்திருந்தன ரெண்டு
காம்புகளிலான
மஞ்சள் கொம்புகள்.

❑

# மு.முபாரக் கவிதைகள்

எல்லா சுவர்களிலும்
நிரம்பி வழிகிறது
கண்ணீர் அஞ்சலி சுவரொட்டி,
யாருக்காக அழுவது என
தீர்மானிப்பதற்குள்
புதிதாய் முளைத்துவிடுகிறது..ஒரு மரணம்!

❍

சிலுவையில்
அறையப்படுவதென்பது
வேறொன்றுமில்லை..
தாங்கமுடியா வலியொன்றை
சுமந்து புன்னகைப்பது தான்!

❍

மழையில் நனையும்
ஆட்டுக்குட்டிக்கு
குடைபிடிப்பவனை
கேலியாய் பார்க்கும்
கண்களுக்கு புலப்படுவதில்லை..மனிதம்!

❍

புன்னகையோடு மட்டும்
பார்த்துப் பழகிய
சிறுவன் இறந்த பிறகு
அதிகமான தைரியம்
தேவைப்படுகிறது..
அவன் விளையாடி மகிழ்ந்த
வீதியைக் கடப்பதற்கு!

❍

மரணம் வேண்டி
காத்திருப்பவனுக்கு
வாழ்க்கையையும்
வாழ்வதற்காய் காத்திருப்பவனுக்கு
மரணத்தையும் தரும்
காலத்தின் கண்கள்
குருடாக்கப்பட்டிருக்கிறது..
பார்வை தெரியாது என நடிக்கும்
யாசகனைப் போல்!

❍

வானம் எழுதிய
கவிதைகள்
இன்னும் சற்று நேரத்தில்
ஓய்ந்து விடும்..
அதன் பிறகு
நாம் காகிதத்தில் கவிதை எழுதலாம்!

❍

மேகமூட்டமாக இருந்தாலும்
இல்லாவிட்டாலும்
ஒவ்வொரு நாளும்
நிலவின் வருகைக்காக
காத்திருக்கும்,
மகளுக்கு அலுத்துப்போவதில்லை..
தான் பிறந்த நாளிலேயே இறந்து போன
அம்மா வருவாள் என
பல ஆண்டுகளாய்
காத்திருந்து பழகியவளுக்கு!

❍

திடீர் கடவுள்கள்
ஒவ்வொரு நாளும்
உருவாகிக் கொண்டே
இருக்கிறார்கள்..
மனிதர்களைக் காணத் தான்
பல நூறு மைல்கள்
கடக்க வேண்டியதாக இருக்கிறது!

❍

மழை,ன்னா என்னப்பா
என கேட்ட மகளிடம்
வானம் தன் கஷ்டம் தாங்கமுடியாம
அழுகுது,ம்மா
என சொல்லியிருந்தேன்,
என்றோ ஒரு நாள்,
கடந்த சில நாட்களாக ஓயாத
அடைமழை,
வீட்டுக்கும் வாசலுக்குமென நடந்து
கொண்டிருந்தவள்,
என்னப்பா மழைக்கு கஷ்டம்
அதிகமாயிடுச்சாப்பா
ரொம்ப அழுகுதே,
அதுக்கு ஆறுதல் சொல்லி அழுகைய
நிறுத்துங்கப்பா,
பாவமா இருக்குதென
சொல்லிக்கொண்டிருக்கிறாள்.. சோகமான
முகத்துடன் !

❍

மழையோ புயலோ
தவறாமல் வந்து விடுகிறது..
அம்மாவை பார்க்க
ஊருக்கு போகும்
போதெல்லாம்,
தேவதையை பார்க்க போவதென்பது
அத்தனை சுலபமில்லை!

❍

சிறு
கல்லெறிந்ததும்,
சிதறிப் போகும்
பறவையாகிறது..
மென்மையான மனது!

❍

இரவைப் பற்றிய
கவிதையொன்றை
எழுதிக்கொண்டிருக்கிறேன்,
எட்டிப் பார்க்கிறது..நிலவு!

என் வீட்டு வாசலில்
மிச்ச உணவிற்காய்
காத்திருக்கும் நாய்க்குட்டியொன்றை
இப்போதெல்லாம்
காண முடிவதில்லை..
பாவம் எத்தனை நாள் தான்
பசி தாங்கும் என்னைப் போல!

❍

வலியோடு
கடந்து போன பாதையை
திரும்பி பார்க்கிறேன்..
நீண்டு கொண்டே இருக்கிறது,
ஏமாற்றங்கள்!

❍

மரம் பற்றிய
கவிதையொன்றை
எழுதிக் கொண்டிருக்கிறேன்,
சொல்ல முடியா துயரங்களை
சுமந்த படி பறந்து வருகிறது..
கூடற்ற பறவையொன்று!

❍

உனக்கென்ன தெரியும் என கேட்கிறாள்
மகள்,
உன்னோடு கொஞ்சி விளையாடத் தெரியும்
என நான் சொல்கிறேன்..
வேறென்ன தெரியும் என மீண்டும்
கேட்கிறாள்,
உன் கை பிடித்து நடக்கத் தெரியும்
என நான் சொல்கிறேன்..
வேறென்ன தெரியும்
என மீண்டும் கேட்கிறாள்,
உனக்கு வீட்டுப்பாடம்
சொல்லித்தருவதற்கு தெரியும் என
நான் சொல்கிறேன்..
என்னைத் தவிர வேறொன்றும்
தெரியாதா என கோபத்துடன் கேட்கிறாள்..
அம்மாவை இழந்து விட்ட உனக்கு
அம்மாவாய் வாழ்வதைத் தவிர வேறொன்றும்
தெரியாது என நினைக்கையில்
கண்ணீரோடு ஓடி வந்து அவள் தந்த
முத்தத்தில் எனக்கு அம்மாவாகி இருந்தாள்
இப்போது!

❍

யாருக்கும் என்னைப் பிடிப்பதில்லை
கேள்வி கேட்பது தவறாம்,
யாருக்கும் என்னைப்
பிடிப்பதில்லை
உண்மையாய் இருப்பது பாவமாம்,
யாருக்கும் என்னைப் பிடிப்பதில்லை
நேர்மையாய் இருக்கச் சொல்வது
கொடுங்குற்றமாம்,
யாருக்கும் என்னைப் பிடிப்பதில்லை
பொது நலமாய் இருப்பது துரோகமாம்,
யாருக்கும் என்னைப் பிடிப்பதில்லை
நான் நானாய் இருப்பது அறிவிலித்தனமாம்!

❍


வீட்டு வாசலில்
ஊர்ந்து கொண்டிருக்கும்
தேளை
விரட்டிக் கொண்டிருக்கும் அம்மாவிடம்,
ஒர்அடி அடித்தால்
செத்துப்போய் விடும்
அதைப் போய் ஏன்
இவ்வளவு கஷ்டப்பட்டு விரட்டிக்கிட்டு இருக்கிங்க
என்ற என்னிடம்,
அதுவும் ஒரு உயிர்தானப்பா,
நாம் தீங்கு செய்தால் தான்
நமக்கு தீங்கு செய்யும் என
சொல்லியபடி மீண்டும் விரட்டத் தொடங்குகிறாள்..
உயிர்களிடத்தில் அன்பு வேண்டுமென நான் பேசிக்
கொண்டிருக்கிறேன்..அவள் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்!

❍

அதிகாலையில் தேநீர் அருந்தும்
புகைப்படம்
ஒன்பது மணிக்கு காலை உணவு உண்ணும் புகைப்படம்,
பத்து மணிக்கு
தனது செல்ல நாய்க்குட்டியுடன்
ஒரு புகைப்படம்,
பதினோரு மணிக்கு தொலைக்காட்சியில்
விரும்பிப் பார்க்கும்
திரைப்படத்தின் புகைப்படம்,
இரண்டு மணிக்கு
திடீர் மாரடைப்பில் இறந்து போன
பக்கத்து வீட்டுத் தாத்தாவிற்கு
இறுதி அஞ்சலி செலுத்திய புகைப்படம்,
மாலை ஐந்து மணிக்கு தன் வீட்டில் செய்த மிளகாய் பஜ்ஜியின்
புகைப்படம்,
ஏழு மணிக்கு நண்பர்களுடன்
அரட்டையடித்த படி எடுத்த புகைப்படம்,
இரவு மெத்தையில் படுத்தபடி உறங்கப் போவதாய் ஒரு புகைப்படம்,
முகநூலில் விழித்து முகநூலில் உறங்கிப்போகின்றவர்கள்,
தன்னை அழித்து வாழவைத்துக் கொண்டிருக்கிறார்கள்..முகநூலை
அறிமுகப்படுத்திய மார்க்கை!

❑

● விசாலி



# நின்றாளும் இயற்கை

எங்கும் பேரமைதி. மூன்று நாட்களாய் சுழன்று சுழன்று பேயாட்டம் ஆடிய அந்த சூறாவளி, தன கோரத்தாண்டவத்தை அந்த நட்ட நடு நிசியில் முடிவுக்குக் கொண்டு வந்திருந்தது. கூடவே வானமே இடிந்து விழுந்தது போல, ஓவெனக் கொட்டிய அந்த அடைமழையும் எங்கும் வெள்ளக்காடாய் ஆக்கிவிட்டு தன ருத்திர தாண்டவத்தை ரத்துச் செய்து கொண்டது இரண்டும் என்ன இரகசியமாய் சமரசம் செய்து கொண்டனவா

இதுவரை கண்களை இறுக்க மூடி, சகலதும் ஒடுக்கியபடி நின்ற அந்த மரம் தன கண்களை மெல்ல விழித்தது. எங்கும் ஒரே வெள்ளக்காடு

கழுத்து வரை வெள்ளம் தளந்தட்டி நின்றது

ஐயகோ எங்கே என் அவயவங்கள் ; வெறும் முண்டமாக நிற்கின்றேனே

கீழே வெள்ளத்துள் தலை விரிகோலமாய் சின்னாபின்னமான தன முகத்தைப் பார்த்தவுடன் வெட வெடவென நடுங்கியது அந்த மரம்

கொப்பு கொப்பாய் கிளைகள் எல்லாம் முறிந்து வெள்ளத்தோடு ஓடின

உச்சி முதல் பாதம் வரை தாங்க முடியாத ஓர் வேதனையை முதன் முதலாக உணர்ந்தது. இதென்ன ஊழிக்காலம் தொடக்கி விட்டதா

இதைப் போல் எத்தனை அழிவுகளை எதிர்த்து நின்று போராடி இருக்கின்றேன்.காற்றும் மழையும் தோழனாகத் தானே நான் தாங்கி

இருக்கின்றேன்.ஓ நூறாண்டு காலம் உருண்டோடி விட்டதோ.முதுமையின் இயலாமை என்பது இது தானோ.

ஐயோ கீழே தன நிழலில் குடியிருந்த பிள்ளையாருக்கு என்ன நடந்திருக்கும்.பதைபதைத்தபடி கண்களால் துழாவியது எந்த அசுமாத்தமும் இல்லை.மூச்சடைத்துப் போயிருப்பாரோ தன்னை அறியாமல் கண்ணீர் விட்டது மரம். எந்த மழைக்கும் குடையாகவும் எந்த வெய்யிலுக்கும். சாமரமாகவும் அல்லவா நான் நின்று உன்னைக் காப்பாற்றி வந்தேன்,

நீ என்னானாயோ தன் இயலாமையை எண்ணி எண்ணி மனம் வருந்தியது மரம் சட்டென்று தன எதிரே நின்ற மின் கம்பம் நினைவுக்கு வந்தது அதற்கு. அறிவியலின் சான்று தான் தானென்று எப்பவும் ஏட்டுக்குப்

போட்டியாய், பரம எதிரி தான்.ஆனாலும் ஆபத்திற்குப் பாவம் இல்லை

பிள்ளையாரைக் காப்பாற்ற கை கொடுக்கக் கூடும் உதவியாக கேட்டுவிடுவோமென

அதன் பக்கம் திரும்பியது மரம்.. என்னே கொடுமை அதுவும் இடுப்பளவு தண்ணீரில் மின்னிழை எல்லாம் அறுந்து தொங்கிக் கொண்டு நின்றது

ஆனாலும் அதன் கர்வம் கொஞ்சமும் குறையவில்லை! என்ன மரமாரே

இதென்ன உன் திருக்கோலம்? இயற்கை வழி நின்று பசுமைப் புரட்சி

செய்வதாய் ஊரெல்லாம் உன் கீழ் வளைத்து போட்டாயே. என்ன ஆயிற்று அட அந்தத்தொப்பை அப்பனையும் அல்லவா உன் கீழே வைத்து சனங்களை உன் வசப் படுத்தினாய் உன் கீழே ஓடின அந்த நீரோடை எங்கே? உன் இனமாய் விரிந்த வயல்வெளி எங்கே?.என்ன ஆயிற்று மரமாரே உங்கள் இயற்கை வழி பசுமைப் புரட்சி..கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனது மின் கம்பம்

துணுக்குற்ற மரம் தூரத் தன பார்வையை வீசியது.அதன் முன்னே விரிந்திருந்த அந்த அழகிய கிராமம் அடியோடு காணவில்லை. வயல் வெளிகள் எல்லாம் அறுவடைக்காய் காத்திருந்த அந்த அழகிய தருணம்

வருண பகவான் பிடியினில் துவம்சமாகி நின்றது. வயலோரம் இருந்த அந்த குடில்கள் எல்லாம் கூரைகள் உடைந்து மிதந்து கொண்டிருந்தன

; என்ன ஆயிருக்கும் அந்த மக்களுக்கு ? அடுத்த அடி ; நெஞ்சு பதற மனம் துடி துடித்து மரம்

.என்ன பாடுபட்டு அந்த கட்டாந்தரைகளை எல்லாம் கழனி

ஆக்கினார்கள் அந்த மக்கள் களைப்பாறக் கூட வீட்டுக்குப் போகாமல் அல்லும் பகலும் உழைக்கும் அவர்களுக்கு இளைப்பாற இடம் கொடுத்து ஆதரித்து நின்ற அந்த மரம்

பேதலித்துப் போய் நின்றது

. மெல்ல இருள் விலக மக்களின் அவலக் குரல்களும் வெள்ள அலைகளினூடே மிதந்து வந்தது.மேலே அதென்ன இரைச்சல் ஹெலிகோப்டேர்கள் வட்டமிட்டதைக் கண்டு மின் கம்பம் மீண்டும்

கர்வமாகச் சிரித்தது. பார் மரமாரே எங்கள் செயற்கை தான் உங்கள் கும்பலைக் காப்பாற்ற வந்திருக்கிறது எங்கே உங்கள் கடவுள் அவரும் அல்லவா சேர்ந்து அம்போவென..எக்காளமிட்டது மின் கம்பம் மரம் தவித்தே போய் விட்டது. அந்த கல் நெஞ்ச மின் கம்பத்திற்குப் பதில் சொல்ல அல்ல

எப்படி இந்த மக்களையும் அவர்கள் உழைப்பையும் காப்பாற்றுவது என்று தான்.. எப்படி?.. எப்படி ?

தடாலென ஓர் சத்தம்.மின் கம்பம் முறிந்தே விழுந்தது ஐயோ பாவமே மெல்லச் சரிந்து கை கொடுக்க முனைந்தது மரம்.முடியவில்லை ஆனால் அந்த அசைவு அதனை மறு பக்கமாகச் சாய்த்தது வேரோடு சாய்ந்தது மரம். அந்தோ என்னே அதிசயம் அதன் வேர் புரண்ட குழி வெளியே குபு குபுவென வெள்ளம் உள்ளே ஓடிற்று ஏதோவொன்று உள்ளிருந்து இழுப்பதாய் சுழி சுழியாய் நீரெல்லாம் கண ப் பொழுதில் காணாமல் போயிற்று

. பிள்ளையார் துணியற்று ஆனால் இருந்த இடத்தில அப்படியே இருந்தார். நீரோடையும் இருந்த இடத்திலேயே ஆனால் கரை புரண்டு ததும்பித் ததும்பி ஓடியது பயிர்கள் எல்லாம் மெல்லத் தலை நிமிர்ந்தன

நாணல்கள் தலை நிமிர்த்த மூங்கில்களோ வெட்கித் தலை குனிந்தன

வீழ்ந்து கிடந்த மரத்தைச் சூழ்ந்து மனிதர்கள் கூட்டம். செத்தும்

கொடுத்தானாம் சீதக்காதி ஓர் இள வட்டம் சொல்லி முடிப்பதற்குள்

இல்லை இல்லை இது சாகவே இல்லை இங்கே பாருங்கள் வேரில் பச்சை

இருக்கு. மக்கள் கூட்டம் வேர் பக்கம் ஓடிற்று

ஓ அப்படியாயின் இங்கேயே நாம் இதனை மீண்டும் நடலாம். ஓம் ஓம் எல்லோரும் ஆமோதிக்கின்றார்கள் ஓம் எங்கள் தாத்தாவும் இதனை நடும் பொழுது சொன்னவர்

இதன் அம்மா முந்நூறு வருடங்கள் வாழ்ந்தது என்று. அது போல் இதுவும் வாழும் சிறுவன் ஒருவன் சொல்லி முடிப்பதற்குள் மரம் கண்களால் துழாவியது ஓ இவர்தான் இளங்கன்றாய் இங்கு நாட்டிய வரின் பேரனோ.. எத்தனை காலமாக அவரை காணவில்லை என்று தேடினேன் அவரைப் போலவே அவர் பேரனும் அப்படியே இருக்கிறாரே

மனதுள் மட்டற்ற குதூகலத்துடன் நிமிர்த்தியவர்களின் கரங்களில் நின்றாடியது மரம்

தூரத்தே முறிந்த மின்கம்பம் வண்டி ஒன்றில் ஏற்றப்பட்டது.

❑

● மோ.கணேசன், சென்னை.



# வீட்டிற்கு வரக்கூடாது!

ஆபிஸில் பத்திரிகை ஆசிரியரோடு மீட்டிங்கில் இருந்தேன். மனைவியிடமிருந்து போன்கால் வந்தது. அழைப்பை துண்டித்துதேன்.

தொடர்ந்து அழைப்பு வந்துகொண்டே இருக்கவே... ஆசிரியரிடம் அனுமதி கேட்டு வெளியே வந்து அழைப்பை உயிர்ப்பித்தேன்.

“ஏன்டி... எத்தனை முறை சொல்லி இருக்கேன். நீ கூப்பிட்டு நான் கட் பண்ணினா மீட்டிங்ல இருக்கேன்னு... என்னடி இப்ப தலைபோற அவசரம்” என்று கத்தினேன்.

“ஏங்க... பெரியவன் சைக்கிள் ஓட்டிகிட்டு போய் சறுக்கிவிழுந்து கை, காலெல்லாம் ரொம்ப காயமாகிடுச்சிங்க. வலது கை பின்புறம் கோடுபோல கிழிஞ்சிருக்குஞ் உடனே வாங்க” என்றாள் என் மனைவி.

அடுத்த அரை மணி நேரத்திற்குள் அடித்து பிடித்து வீட்டிற்குச் சென்றேன். இடுப்பில் துண்டை கட்டிக்கொண்டு, கை கால்களில் ரத்த காயங்களுக்கு சல்பானின் மருந்தை அப்பியபடி எங்களின் மூத்த மகன் ஆதித்தன் நின்று கொண்டிருந்தான்.

என்ன ஆச்சு? என்று கேட்க நேரமில்லாமல், தாம்பரத்தில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூட்டிச்சென்றேன். அவசர வார்டில் பார்த்த மருத்துவர்... “கையிலதான் காயம் ரொம்ப பலமா இருக்கு... சல்பானின் எல்லாம் போடாதீங்க... தொடர்ந்து மூன்று நாள் வந்து ஊசி போட்டுக்கணும். நர்ஸ் இந்த பையனுக்கு இப்போதைக்கு டிடி போட்டுவிடுங்க. டிரெஸ்ஸிங் பண்ணிவிடுங்க” என்று கடகடவென்று உத்தரவுகளைப் பிறப்பித்த டாக்டர், அடுத்த பேஷண்டை வரச்சொன்னார்.

ஊசி, மருந்து, மாத்திரைகளை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்து, மகனையும் மனைவியையும் விட்டுவிட்டு மீண்டும் அலுவலகம் சென்றுவிட்டு, மிகுந்த பசியோடு இரவு வீட்டிற்கு வந்தேன்.

வீட்டில் பெரியவன் மட்டுமே இருந்தான். கை, கால்களில் மருந்து வைத்திருந்தபோதும் “அப்பா...” என்று ஓடி வந்து கட்டிக்கொண்டான் ஆதித்தன்.

“ஏன்டா ஒன்பதாம் வகுப்பு படிக்கிற... சைக்கிள் கூடவா பாத்து ஓட்டமாட்ட. உன் தம்பி 6-வதுதான்டா படிக்கிறான். அவன் பைக்கையே நல்லா ஓட்டறான்டா” என்று நொந்து கொண்டேன். வீட்டில் மனைவி இல்லாததால் “அம்மாவும், தம்பியும் எங்கடா?” என்று ஆதித்தனிடம் கேட்டேன்.

“ரோஸி ஆண்டி வீட்டுக்கு போயிருக்காங்கப்பா...” என்றான் மகன்.

உள்ளே நுழைந்ததும், பூஜை அறையில் படமாக மாறிப்போயிருந்த என் அம்மாவின் முன்பு நின்று, ’ஆபிஸ் முடிச்சிட்டு வீட்டுக்கு வந்துட்டேன்மா... ஊர்ல இருக்கிற அப்பாவுக்கு போன் பண்ணேன். எடுக்கவே இல்லம்மா... வடிவேலுக்கு போன் பண்ணி கேட்டேன். தாத்தா குடிச்சிகிட்டே இருக்கிறாரு மாமான்னு சொல்லிட்டான்மா... அப்பாவை நீதான்மா பாத்துக்கணும். உன் பேரனுக்கு இப்படி ஆகிப்போச்சு... ஏன்மா அவனுக்கு இப்படி ஆகவிட்ட... பத்திரமா பாத்துக்கம்மா’ என்று மனதிற்குள் வேண்டிக்கொண்டபடி பெட்ரூமிற்குச் சென்றேன்.

அலுவலக ஆடைகளைக் களைந்து, லுங்கிக்குள் என்னை நுழைத்து, கை,கால் முகங்களைக் கழுவிக்கொண்டு ஹாலிற்கு வந்தேன்.

“அப்பா.... வடிவேல் மாமா அம்மாவுக்கு போன் பண்ணினாருப்பா... தாத்தா இங்க இருக்கிற வரைக்கும் நல்லா இருந்தாருல்ல... ஆத்தூர் போனதும் மறுபடியும் குடிக்க ஆரம்பிச்சிட்டாராம்பா... இனிமே குடிக்க மாட்டேன்னு என் மேல் சத்தியம் எல்லாம் பண்ணினாரேப்பா... ஏம்பா இப்படி தாத்தா மாறிட்டாரு... அம்மா சொல்றாங்க... உன்

மேல செஞ்ச சத்தியத்தை தாத்தா மீறிட்டதாலதான் எனக்கு இப்படி காயமாகிடுச்சுன்னு... தாத்தா ஏம்பா இப்படி பண்றாரு..." என்று கேட்டான் ஆதித்தன்.

மகனுக்காக பேசுவதா... அப்பாவிற்காகப் பேசுவதா என்று தடுமாறிப்போனேன். "தெரியலடா... எதுவா இருந்தாலும் தாத்தாவை மன்னிச்சிடு... பாட்டி இருந்திருந்தா இப்படி எல்லாம் நடந்துக்கமாட்டாருடா.." என்றபடி அப்பாவுக்காக என் மகனிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டேன். என் கண்கள் மெலிதாக கலங்கின.

போனை கையிலெடுத்தேன். அப்பாவின் எண்ணுக்கு அழைத்தேன்.

முழுதாக ரிங் போனது. எடுக்கவில்லை. மறுபடியும் அழைத்தேன். ஐந்தாவது ரிங்கில் போனை எடுத்தார்...

"அப்பா..." என்றேன்

"கணேசா..." என்றார். அவருடைய குரலில் வலியும் ஏக்கமும் இருந்தது. அதோடு டாஸ்மாக்கின் வீச்சும் இருந்தது.

"என்னப்பா இப்படி பண்றீங்க...

அம்மா இறந்து ஒரு மாசம் வரைக்கும், அம்மா போன துக்கம் போக குடிக்கறேன்னு சொல்லி குடிச்சி உடம்பை கெடுத்துகிட்டீங்க. அங்க இருக்கிற அண்ணனும் பாக்கல. சின்னசேலத்துல இருக்கிற தம்பி வீட்டுக்கு போங்கப்பான்னு சொன்னா, அங்கயும் போகல... சென்னைக்கு கூட்டிவந்து ஒரு வாரம் பெட்ல வச்சிருந்து உடம்பை சரிபண்ணி அனுப்பி வச்சேன். அஞ்சு மாசம் கூட தாண்டல. மறுபடியும் குடிக்க ஆரம்பிச்சிட்டீங்க. மறுபடியும் கூட்டிட்டுவந்து ஹாஸ்பிடலுக்கு போய் உடம்பை சரி பண்ணி கூட்டிவந்தேன். உன் பேரனுங்க ரெண்டு பேரும் உங்களை எப்படி பாத்துகிட்டானுங்க. பெரியவன் மேல சத்தியம் எல்லாம் பண்ணிட்டு போனியே... ஏன்பா இப்படி பண்ணற... இன்னிக்கு அவனுக்கு ஆக்ஸிடென்ட் ஆகிருச்சு தெரியுமா... நீ சத்தியம் பண்ணிட்டு, சத்தியத்தை மீறிட்ட... அதனால அவனுக்கு இப்படி ஆகிருச்சி... இதெல்லாம் நல்லாவா இருக்கு... அக்காவும் என்னை விட்டுட்டு போயிட்டா... அம்மாவும் என்னை விட்டுட்டு போயிட்டாங்க... நீயும் இப்படி குடிச்சி குடிச்சி போயிடு... நான் அனாதையாதான் நிக்கப் போறேன்" என்று பொரிந்து தள்ளிவிட்டேன்.

"ஐயோ... என் பேரனுக்கா ஆக்ஸிடென்டு... ஐயோ... வள்ளியம்மா... நான் என்ன பண்ணுவேன். என்னை ஏன் விட்டுட்டு போன. உன்னால எத்தனை பேருக்கு துன்பம்..." என்று என் அம்மாவிடம் கேட்டவர், என்னிடம் பேச ஆரம்பித்தார்... "யப்பா.... அம்மா ஞாபகம் வந்துருச்சிப்பா... என்னால முடியலடா... ராத்திரி எல்லாம் தூக்கம் வரமாட்டேங்குது. அப்படியே தூக்கம் வந்தா... அக்காவும், அம்மாவும் வந்து கனவுல கூப்பிடறாங்கப்பா... அதான்டா குடிச்சிட்டேன். அம்மா உசுரோட இருந்திருந்தா... நான் குடிச்சிட்டு வந்திருந்தாகூட, மடியில படுக்க வச்சி சோறு ஊட்டுவா... என்னை பாத்துக்க யாருப்பா இருக்கா..." என்றார்.

"நானென்னா செத்தா போயிட்டேன். தம்பி வீட்டுக்கு போன்னா... போக மாட்டேங்கறஞ் சென்னையிலயே இருன்னு சொன்னதுக்கு... அம்மாவோட குழிமோட்டுக்கு போகணும்.

விளக்கு ஏத்தணும்... காய்கறி கடை போடணும்னு சொல்லிட்டு நீதான போன... நீ கிளம்பி சென்னைக்கு வா..."

"சரிப்பா... நான் சென்னைக்கு வரேன்பா... பெரியவனுக்கு அடிபட்டுடிச்சின்னு சொன்னதில இருந்து எனக்கு பெரியவன் ஞாபகமாவே இருக்கு... நான் வந்துடறேன்பா... நீ வந்து கூட்டிகிட்டு போ..."

"நான் வரலை... நவநீதன் நாளைக்கு ஆத்தூருக்கு வரதா சொல்லி இருக்கான். அவனை கூட்டிகிட்டு வரச்சொல்றேன். அவன் கூட கிளம்பி சென்னைக்கு வந்துடுங்க..."

"சரிப்பா... வந்துடறேன். நவநீதன் கூடவே சென்னைக்கு வந்துடறேன்..."

"எதாச்சும் சாப்பிடுங்கஞ் நான் நவநீதன்கிட்ட பேசிடறேன். காலைல வந்து கூட்டிகிட்டு வரச்சொல்றேன்" என்றபடி போனை வைத்தேன்.

மனதில் பாரம் அதிகமாக ஏறியது போல் இருந்தது.

என் நெருங்கிய நண்பனான நவநீதனின் செல்பேசிக்கு அழைத்தேன்.

அழைப்பு சென்ற சில விநாடிகளில் உயிர் கொடுத்தவன் "சொல்றா மாப்ள..."

"எங்கடா இருக்க?"

"ஊருக்குதான் வந்துகிட்டு இருக்கேன்... இப்பதான் கர்நாடகா பார்டரை விட்டு, தமிழ்நாட்டு பார்டருக்கு வந்திருக்கேன். அரை மணி நேரத்துல ஓசூர் வந்துடும். அப்புறம் சேலம், ஆத்தூர்னு வரதுக்கு ராத்திரி 1 மணி ஆகிடும். ஏன்டா கேக்கற"

நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போதே, மனைவியும் சின்ன மகனும் உள்ளே வந்தனர்.

போனில் அப்பாவிடம் பேசியதையும், பேரன்களைப் பார்க்க வேண்டும் என்று அவர் பேசியதையும் சொல்லி, "நாளை அப்பாவை சென்னைக்கு கூட்டிகிட்டு வாடா" என்றேன்.

நவநீதனிடம் சொல்லிமுடித்ததும், என் மனைவியிடமிருந்து கோபமாக வார்த்தைகள் வந்து விழுந்தன.

"உங்கப்பா இங்க வரக்கூடாது..."

போனின் மைக் பகுதியை பொத்தியபடி.. "என்னடி சொன்ன... என் அப்பாவையா இங்க வரக்கூடாதுன்னா சொன்ன..?" என்று கடுமையாக கேட்டேன்.

"ஆமா... இங்க வரக்கூடாது..."

கோபம் எனக்கு தலைக்கு ஏறவே... நவநீதனிடம் "மச்சி நான் அப்புறம் பேசறேன்..." என்று அவனுடைய பதிலுக்குக் காத்திராமல் போனின் அழைப்பை துண்டித்துவிட்டேன்.

கோபம் உச்சிக்கு ஏற... "என்னடி சொன்ன..? என் அப்பாவை வரக்கூடாதுன்னு நீ எப்படிடி

சொல்லலாம்?" என்று கத்தினேன்.

"ஆமாம்... அப்படித்தான் சொல்லுவேன். உடம்பை சரி பண்ணி அனுப்பி வச்சா... சும்மா.. சும்மா... குடிச்சிட்டு உடம்பை கெடுத்துகிட்டு வந்தா... வராதன்னுதான் சொல்லுவேன். உங்கப்பா என் பையன் மேல சத்தியம் பண்ணினாரே... எம்பையன்தானே கை, காலெல்லாம் அடிபட்டு வந்து கிடக்கிறான். பெரிசா ஏதாச்சும் ஆயிருந்தா..." பதிலுக்கு அவளும் கத்த ஆரம்பித்தாள்.

"ஏன்டி... என் அம்மாவை இழந்துட்டு என் அப்பா படுற வேதனை உனக்குத் தெரியுமாடி... இல்ல எனக்குத்தான் தெரியுமா... எனக்கு இழப்பு அம்மா எனும் தொப்புள் கொடி உறவு... என் அப்பாவுக்கு வாழ்நாள் முழுக்க அவங்க உறவு... அவரை வரக்கூடாதுன்னு சொன்ன இந்த வீட்ல இனி நான் ஒரு நிமிஷம் கூட இருக்கமாட்டேன்டி..." என்று கோபத்தில் கத்திவிட்டு, என்னுடைய பைக்கை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டேன்.

மண்டை முழுக்க... உன் அப்பா இங்க வரக்கூடாது என்று மனைவி சொன்னதுதான் ஓடிக்கொண்டு இருந்தது. ச்சே... என்ன மனுசி இவ... பெரியவங்களை நாமதான பாத்துக்கணும். இவளோட அப்பாவா இருந்தா இப்படி சொல்லி இருப்பாளா..? நேரே ஆத்தூருக்கே கிளம்பி போயிடலாமா என்று பல்வேறு சிந்தனைகளோடு பைக்கை செலுத்திக்கொண்டிருந்தேன்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில்... நவநீதனிடமிருந்து போன் வந்தது.

எடுத்து பேசியதும்... "சாப்டியாடா..." என்றான்.

பெத்தவளுக்கு அப்புறம் சாப்டியா என்று கேட்கும் ஒரே ஜீவன் இவன் மட்டும்தான். "சாப்பிடல மச்சான். வீட்ல பிரச்சினை. வெளியில வந்துட்டேன்..." என்றதும்தான் தாமதம்... திட்ட ஆரம்பித்துவிட்டான். "ஏன்டா... என் தங்கச்சிதான் கோபத்துல ஏதோ சொல்லிட்டாளாம். வீட்ட விட்டு நீ எதுக்குடா வந்த... ரெண்டு பசங்க இருக்கானுங்கடா... விளையாட்டாடா இது... ஒழுங்கா இப்ப வீட்டுக்கு போ" என்றான்.

"இல்ல மச்சி... உன் தங்கச்சி உனக்கு போன் பண்ணி அவ தரப்பு நியாத்தை சொல்லி இருப்பா... நம்ம அப்பாவுக்கு யாருடா இருக்கா... என் அண்ணன் கண்டுக்கவே மாட்டான். அவனுக்கு சொத்துதான் முக்கியம். அப்பா முக்கியமில்லை. தம்பி வீட்டுக்கு அவரு போகவே மாட்டேன்னுட்டாரு... நான் சொல்லித்தானடா... அவரு சென்னைக்கே வரேன்னு சொன்னாரு. வரச்சொல்லலைன்னா... குடிச்சி குடிச்சியே காணாம போயிடுவாருடா..." என்று அழ ஆரம்பித்துவிட்டேன்.

"ச்சீ... 38 வயசு ஆம்பள நீ... எதுக்குடா அழுற..."

"58 வயசா இருந்தாலும் நம்மைப் பெத்தவங்களுக்கு எதையும் செய்ய முடியாத கையாலாகத்தனம் வந்தா... யாரா இருந்தாலும் அழத்தான்டா செய்வாங்க... என் அம்மா இப்படி பாதியிலயே விட்டுட்டு போவாங்கன்னு எதிர்பார்க்கலடா மச்சி... அம்மாதான் போயிட்டாங்க... அக்காவாச்சும் இருந்திருக்கலாம்னு நினைச்சா... அந்த மகராசி அம்மாவுக்கு முன்னாடியே போய் சேர்ந்திட்டா... அவ போன துக்கம்தான் அம்மாவுக்கு பெருங்கவலையா இருந்துச்சி... எல்லாம் சொல்லி தேத்தி வச்சிருந்தோம். ஆனா அவங்களும் முந்திகிட்டாங்க...

நமக்குன்னு இருக்குற பெரிய மனுசன் அவர் மட்டும்தானடா... எம் பொண்டாட்டியோட அப்பாவும் எங்க கல்யாணத்துக்கு முன்னாடியே இறந்துட்டாரு... எம் பசங்களுக்கு இருக்கிற தாத்தா எனும் உறவு இவருமட்டும்தானடா. அவ எப்படிடா அப்படி பேசலாம்... ஏம்பா குடிச்சி குடிச்சி உடம்பை கெடுத்துக்கறன்னு அவரிடம் சண்டை போட்டிருந்தா சந்தோஷப்பட்டிருப்பன்டா மாப்ள. இங்க வரக்கூடாதுன்னு சொல்லிட்டாடா... உன் வீட்டை தேடிவராருன்னுதான இவ்ளோ பேசறா அவ..." என்றேன்.

"கோபத்துல எந்த முடிவும் எடுக்கக்கூடாது மச்சின்னு எனக்கு பலமுறை அறிவுரை சொன்ன பத்திரிகைக்காரன் நீ... நீயே இப்படி பேசலாமா... வீட்டுக்கு போடா..."

"பத்திரிகைக்காரனா... நானா... அட போடா மச்சி... பெத்தவங்களுக்கு எதுவும் செய்யமுடியாம இருக்கறவன் பிரதமரா இருந்தாக்கூட, அவன் நடைபிணத்துக்கு சமம்டா மச்சி... அவ அப்படி பேசினது தப்பு... நான் காலையில வீட்டுக்கு போறேன்... நான் பிரெண்டு ரூமுக்கு போறேன்" என்றபடி போனை வைத்துவிட்டேன்.

பிரெண்ட் ரூமிற்கு சென்றேன். இரவு மட்டும் தங்கிக்கொள்வதாகச் சொல்லிவிட்டு படுத்தேன். தூக்கம் வரவில்லை. அப்பாவைப் பற்றியே சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது. கொட்டக்கொட்ட முழித்திருந்து, சூரிய விடியலின்போது, எனையும் அறியாமல் தூங்கிப்போய்விட்டேன்.

நவநீதனிடமிருந்து போன் வரவே...தூக்கத்திலிருந்து எழுந்தேன்.

"சொல்லுடா..."

"டேய் அப்பாவை கூட்டிகிட்டு சென்னை பஸ் ஏறிட்டேன். எப்படியும் சாயந்திரம் வீட்டிற்கு வந்துடுவோம். நீ முதல்ல வீட்டுக்கு போடா..." என்றான்

அடுத்த பத்தாவது நிமிடத்தில் வீட்டிற்கு சென்றேன். வீட்டில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். பாத்ரூமிற்கு சென்று குளித்துவிட்டு, ஆபிஸிற்கு கிளம்பிவிட்டேன்.

பெரியவன் அதற்குள் எழுந்துவிட்டவன்... "அப்பா டிபன்..?" என்றான்

"கடையில சாப்பிட்டுக்கறேன்பா..." என்றபடி கிளம்பிவிட்டேன்.

மாலை அப்பாவுடன் வீட்டுக்கு வந்துவிட்டதாக நவநீதன் தகவல் தரவும், அலுவலகத்திலிருந்து கிளம்பி வீட்டிற்கு வந்து சேர இரவு 8 மணியாகிவிட்டது.

அப்பாவைப் பார்த்தேன். நரைத்து முடியுமாக, பத்துநாள் தாடி வளர்ந்து, ஒரு வாரமாக சாப்பிடமால் கண்கள் பஞ்சடைத்து போனதுபோல் இருந்தது. உடம்பு நடுங்கிக்கொண்டிருந்தது.

"மச்சான் அப்பாவை ஹாஸ்பிடல் கூட்டிட்டு போகலாம் வாடா..." என்றேன்.

அப்பாவை கூட்டிக்கொண்டு குரோம்பேட்டை ஜி.எச்சிற்கு சென்று நிலவரத்தைச் சொல்ல, "ஏன்யா குடிக்கறீங்க... அப்படி எல்லாம் இனிமே செய்யாதீங்க... உங்க உடம்பு தாங்காதுங்கய்யா..." என்று கனிவாக சொல்லியபடியே... விட்டமின் பி12 சத்து ஊசி ஒன்றை

அப்பாவின் இடுப்பில் ஏற்றினார். "ஒரு வாரம் சாப்பாடு இல்லாமல் இருப்பதால் உடம்பில் சத்து இல்லை. அதான் நடுங்குறாரு... விட்டமின் மாத்திரைகளை கொடுத்திருக்கேன். இதை சாப்பிட வைங்க... சரியாகிடும். குடிக்காம பாத்துக்கங்க" என்று பரிவாக சொல்லி அனுப்பினார் அந்த நர்ஸ். ஒரு நர்ஸுக்கு இருக்கும் கனிவு கூட, என்னை கட்டியவளுக்கு இல்லையே.. என்று மனதில் தோன்றவே., நர்ஸை கையெடுத்து கும்பிட்டபடி அப்பாவை அழைத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தோம்.

அப்பா வீட்டிற்கு வந்துவிட்டதால்... பொண்டாட்டி எது பேசினாலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று மனதிற்குள் முடிவெடுத்துக்கொண்டே வந்திருந்தேன்.

வீட்டிற்குள் வந்ததுமே... கத்த ஆரம்பித்துவிட்டாள்...

என்னடா மாப்பிள்ள... உன் தங்கச்சி.. இப்படி பண்றா... என்பது போல எனது நண்பனைப் பார்க்க... அவனும் செய்வதறியாது சிலையாக நின்றான்.

"குடிச்சிட்டு நீங்க வீட்டுக்கு வரக்கூடாதுன்னு சொன்னேன்பா... இதுல என்னப்பா தப்பு இருக்கு சொல்லுங்க... வீட்டை விட்டுட்டு நேத்து இவரு...போயிட்டாரு... ராத்திரி முழுக்க ஒருபொட்டு தூக்கம் கூட இல்லை. அவருக்கு அவர் அப்பா பாசம்... எனக்கு என் பிள்ளை ரத்த காயம் பட்டு வந்து நிக்குதேன்னு தாய்ப்பாசம்... நான் சொன்னது தப்புன்னா... வாசல்ல கிடக்கிறது எடுத்து வந்து அடிங்கப்பா..." என்று அப்பாவிடமே கத்தி அழ ஆரம்பித்தாள்.

"தப்பில்லம்மா... உன் மேல தப்பில்ல. என் பொண்டாட்டி உசிரோட இருந்து... என் பையனுக்கு இப்படி ஏதாச்சும் ஒன்னு ஆகிருந்துச்சின்னா... என்னிடமும் அவ இப்படித்தான் நடந்திருப்பா... நான் அவளை சாமாதானம்தான் பண்ணியிருப்பேன். வீட்டை விட்டு போயிருக்க மாட்டேன். அவன் என்மேல உள்ள பாசத்துல அப்படி பண்ணிட்டான்.

நானும் நல்லாதான்மா இருக்கணும்னு வீட்டுக்கு போனேன். என்னால தனிமையில இருக்க முடியலம்மா... என் பொண்டாட்டி இருக்கற வரைக்கும் அந்த வீடுதான் எனக்கு சொர்க்கமா இருந்துச்சு... அவ இல்லாத வீடு இப்போ நரகமாகிடுச்சும்மா... தனிமையை போக்கிக்க வேற வழி தெரியல. தனிமையை மறக்க குடிதான் உதவுது...

இங்க இருக்கலாமுன்னு நினைச்சா... நீங்க இருக்கிறதோ வாடகை வீடும்மா... நான் கூடுதலா இருந்தா... வீட்டுக்காரங்க உங்களை சண்டைபோடுவாங்கஞ் வீட்டை காலி பண்ணச் சொல்லுவாங்க... சும்மாவே இந்த மெட்ராஸ்ல இருக்கறவங்க... மோசமா நடந்துக்குவாங்க...

நான் வயசான கட்டை... செத்துப்போனாலும் ஒண்ணும் இல்லை. ஆனா எம்பேரன் நல்லாருக்கணும். அவ நம்ம வம்சத்து விளக்கு. அவன் நூறு வருசம் வாழணும்.

இனி அப்படி நடந்துக்க மாட்டேன்மா... எனக்கு என் பேரப்புள்ளைங்க முக்கியம்... இனி குடிக்க மாட்டேன். அவன் என்மேல இருக்கிற கோபத்துல அப்படி செஞ்சிட்டான்... பெரிசா எடுத்துக்காத..." என்றார் கண்கலங்கியபடி.

அதற்கு மேல் கட்டுப்படுத்த முடியாவில்லை என்னால்... "அப்பா..." என்றபடி அவரை கட்டிப்பிடித்து அழ ஆரம்பித்துவிட்டேன்.

❑

ப.தனஞ்ஜெயன்.



# மா சிவானி

சாமியார் பிரகாசமான விளக்கொளியில் தாடியோடு அமர்ந்திருந்தார்.அவரைச்சுற்றி இரு புறங்களிலும் சன்னியாசிகள் அங்குமிங்கும் நடந்தார்கள். காவி உடையில் தலையை முக்காடு இட்டு பின்புறம் துண்டு கட்டியவாறு, துண்டு கொஞ்சம் தொங்கிய நிலையில் சன்னியாசிகள் தலை மூடப்பட்டிருந்தது. அனைத்து சந்நியாசிகளுக்கும் மொட்டை அடிக்கப்பட்ட தலை.ஒரு சந்நியாசி முகத்தில் கூட கடவுள் வசீகரம் இல்லை.சோகமாகவே காட்சியளித்தது.அதை ஆன்மீக தேடல் என்றார்கள்.

சாமியார், பேச ஆரம்பித்தால் புரிந்து கொள்ளச் சற்று சிரமாக இருந்தது அவர் சொற்கள்.அதைப்பற்றிக் கேட்டால் அவருடைய அனுபவம் என்று சிரிப்பார்.அது மனிதர்களுக்குப் பயன்படுகிறதா? அவரை கடவுள் அனுப்பி வைத்துள்ளார் என்ற ஒற்றை சொல்லால் அந்த அறையை நிரப்பிக்கொண்டிருந்தார்.இந்த சாமியாரை அனுப்பி வைத்து விட்டு கடவுள் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றனர் கூட்டத்தில் புதிதாக இருந்த சிலர் சிரிப்பும் நையாண்டியுடனும்.

தன்னார்வத் தொண்டர்கள் வெள்ளை உடையில் வரிசையை ஒழுங்கு செய்வது,அடையாள அட்டை வழங்குவது,வரும் நபர்களைப்பற்றிக் குறிப்பு எழுதுவது,வரிசைப்படி அமரவைப்பது எனச் செயல்வடிவம் தீவிரமாக இருந்தது.பணத்தைக் கட்டிய ரசீதுடன் அந்த கூட்டத்திற்குள் வந்தமர்ந்தாள் சிவானி.

வாழ்கையில் பெரும் பகுதி துன்பமான சூழலைக் கடந்தாக வேண்டும் என்கிற நிலையைத் தாண்டமுடியாமல் செல்வது சமூகத்தில் ஒன்றும் புதிதல்ல.அந்த நிலையைக் கண்டு எவரும் வருந்தப்போவதும் நிலை.அவர் அவர்களின் வாழ்க்கைச் சூழலை யாரும் மாற்றிவிட முடியாது என்கிற தீவிரமான எண்ணங்களின் மன ஓட்டத்தில் அமர்ந்தவளுக்கு அங்கு ஒலித்த ரம்மியமான இசை ஏதோ செய்தது.

அனைவரும் வந்தமர்ந்தனர்.வந்தமர்ந்தவுடன் அந்த கூடத்தின் அறைக் கதவுகள் இழுத்துச் சாத்தப்பட்டன. விளக்கு மட்டும் எரிந்தது.வகுப்பிற்கு வந்தமர்ந்தவர்கள் அறிமுகங்களைச் செய்து கொண்ட பின்பு வகுப்பு ஆரம்பமானது.

சிவானியிடம் மைக் வந்தது. தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்.நிறையப் பேர் தங்களை அறிமுகம் செய்தும் கொள்ளும் விதம் வித்தியாசமாக இருந்தது.வகுப்பிற்கு வந்தமர்ந்தவர்கள் ஒருவர் தன் உடல் நிலை சரியாக வேண்டுமென்றார்.ஒருவர் மனைவியை பிறிந்து வாழ்வதாகச் சொன்னார்.அனைத்திற்கும் சாமியார்களிடம் விடை தேடுவதும்,மனிதர்களின் போக்கில் செல்வதும் தான் இயற்கை.மூன்று நாள் வகுப்பு அது.சிவானி அவர்கள் சொல்லிய வாறே சில பயிற்சிகளைச் செய்தாள்.அனைவரும் கண்மூடி அமரச்சொன்னார்கள்.

சிவானி அவர்கள் சொல்லியவாறே செய்தாள்.மெல்லிய இசையில் தியானம் செய்ய வேண்டும்.அமைதியான சூழலில் அந்த இசையும் மனதிற்கு இதமாக இருந்தது.சாமியார் அவரது குரலில் சில மந்திரங்களையும் சில இசை வாத்தியங்களையும் சிறிது இசைத்தார். சிவானி கண் மூடிய உடன் அவள் கணவனோடு திருமணம் முடிந்த முதல் நாள் நினைவுகள் ஆரம்பமானது.

கதிர் அவள் கணவனின் பெயர்.பெரியவர்களின் சம்மதத்தோடு பார்த்து,முறைப்படி திருமணம் நடைபெற்றது.சென்னையிலிருந்து வேலை காரணமாகப் பெங்களூர் சென்றார்கள். கதிர் புகைபிடிப்பது,பெண்களோடு வீடியோ காலில் பேசுவது போன்றவை எதுவும் பிடிக்கவில்லை சிவானிக்கு.இவளிடம் நெருங்கினால் கூட வேறு எங்கேயோ நினைவை வைத்துக்கொண்டு நெருங்கியது சிவானிக்கு பிடிக்கவேயில்லை.

அடிக்கடி அறையைச் சாத்திக்கொண்டு ஆன் லைனில் வேலை என்று கிடந்தான்.இவள் புதிதாகத் திருமணம் செய்து ஆயிரம் கனவுகளோடு கதவிற்கு வெளியில் காத்திருப்பாள்.அவன் அந்த தருணங்களையெல்லாம் அலட்சியம் செய்தான்.எப்படி இருந்தாலும் கதிரை அன்பாகக் காதலித்தாள் சிவானி.அன்பில் பெண்கள் இவ்வாறு நடந்துகொள்வது நடைமுறையில் இருக்கிறது.விரைவில் கதிர் திருந்திவிடுவான் என்கிற நம்பிக்கை வேறு சிவானிக்கு.

தன்னுடைய வேலைகளை முடித்து கதிர் கதவைத் திறக்கும் வரை காத்திருந்தாள்.நேரம் சென்றது,இரவு உணவிற்கு நள்ளிரவு தாண்டி பிறகு அவன் இருந்த அறையை நோக்கி கதவைத் தட்டினாள்.சாப்பிட வர அழைத்தாள்.கோபமாகக் கதவைத்திறந்தவன்.

“என்னடி உனக்கு அவசரம்,அது வேண்டுமானால் வேற எவன் கூடயாவது போ” என்றான். அவ்வளவுதான் சிவானிக்கு அழுகை வெடித்தது.அழுதுகொண்டே தூங்கிவிட்டாள்.நாளுக்கு நாள் அவனோடு போராட முடியாமல் மனம் சிதைந்து போனாள்.அவன் கொடுக்கும் சொல் சித்திரவதைகள்,சில முறை அடி,சிகரெட் புகைகள்,அவனுடைய போதை பழக்கம் என இவளுக்குப் பிடிக்கவில்லை.பெரும்பாலான ஆண்கள் இன்னும் பெண்களைச் சுதந்திரமாகச் சுவாசிக்க விடவில்லை.இது பூமியெங்கும் நிகழ்கிறது.

சினிமா,நாடகங்கள்,இந்திர சபை ஏன் வேலை பார்க்கும் இடங்கள் எனத் துன்பப்படும் பெண்களைப்போல, அவளுக்கான தேவையைச் சிலவற்றைக்கூட அவளால் சுயமாக முடிவெடுத்துச் செய்ய முடியாத, எல்லா பெண்களைப்போலவே மறைமுக கட்டுப்பாடு இன்னும் இருக்கவே செய்தது அவளுக்கு. கதிரின் தேவையற்ற சிரிப்புகளும்,குடையும் வார்த்தைகளையும் பொருத்து கொள்ள முடியாமல் சிவானி தன் வயிற்றில் வளரும் குழந்தையோடு தன்னுடைய பிறந்த வீட்டிற்கே வந்துவிட்டாள்.

கதிர் பெங்களூரில் அதே வீட்டில் இருந்தான்.அவன் மனைவி சிவானி சென்றதைப்பற்றி கொஞ்சமும் கவலைப்படவில்லை.சிவானிக்கு கணவனோடு சேர்ந்து வாழ வேண்டும் என்கிற எண்ணம் இருந்துகொண்டேயிருந்தது.

இந்த எண்ணம் அவள் கலாச்சாரம் அவ்வாறு சொல்லிக்கொடுத்ததாக இருக்கலாம்.அவள், திசை ஒன்றாக மட்டும் இருந்தது.வயிற்றில் உள்ள பிள்ளையை நோக்கி மட்டுமே இருந்ததால் மகன் ரித்விக்கை பெற்றெடுத்தாள்.தனக்கு மகன் பிறந்திருந்தான் எனத்தெரிந்தும் கதிர் வந்து கூடப்பார்க்கவேயில்லை.உடைந்து போனாள் சிவானி.அந்த நேரத்தில் சிவானியின் உறவினர் ஒருவர் சாமியார் எடுக்கும் வகுப்பு பற்றிச் சொன்னார்.

தனக்கான தீர்வை சாமியார்களிடம் தேடும் கலாச்சாரம் பெரும்பாலும் தொன்று தொட்டு வருகிறது.ஆனால் அது வெற்றி பெறவில்லை.தன் மகனைத் தாத்தாவிடம் விட்டுவிட்டு சாமியார் எடுக்கும் வகுப்பிற்கு வந்தாள்.இவள் வெறுப்பிலிருந்து மெல்ல மீள அங்குக் குரல் ஒலிப்பதாக நினைத்தாள்.

அடிப்படை ஆன்மீகம் சார்ந்த குரலில்தான் சாமியார் பேசினார்.ஏன்..? மாயவித்தை செய்யும் மனிதர்களைப்போல் தான் இருந்தது அவரது செயல்கள்.அழகான உடையணிந்திருந்தார். “இந்த உடல் நமக்கே சொந்தமில்லை.ஆன்மா பரிசுத்தமானது.ஆன்மாவை வணங்குவோம்“ என்றார்.

“எங்கிருந்து வந்தோமோ அங்கேயே செல்கிறோம்“ என்று போதனைகள் நீண்டன.இருக்கும் போது எப்படி இருக்க வேண்டும் என்கிற போதனைகள் இங்கு மிகவும் குறைவுதான்.எல்லாம் இறந்தகாலத்திற்கான போதனையும்,கண்ணுக்கே தெரியாத பிரபஞ்சத்தைப்பற்றியும்,சொர்க்கம் மற்றும் நரகம் பற்றிய ஆறுதல் வார்த்தையில் அவரது சொற்பொழிவு நடந்தது.

கருத்துகளை இசையோடும்,ரம்மியமான சூழலிலும் மக்கள் மனோபாவத்திற்கு ஏற்றவாறு சொல்லி விடுவதில் சாமியார்களும்,பாசிட்டிவ் மைன்ட் வகுப்பு எடுக்கிறவர்களும் வெற்றிபெற்று விடுகிறார்கள்.அதைத் தொடர்பவர்களின் வாழ்க்கை தொடராகவே இருக்கிறது.

ஒரு வழியாக மூன்று நாட்கள் வகுப்பை முடித்தவுடன், ஒரே கொண்டாட்டமாக இருந்தது

ஒரு சிலருக்கு.மனதில் பாரம் குறைந்ததைப்போன்று இருந்ததென்று பரிமாறிக்கொண்டார்கள். அதன் தொடர்ச்சியாக அடுத்தகட்ட உயர் நிலை வகுப்புகள் பற்றிய அறிவிப்பு வந்தது.அது வசூல் வேட்டை என்று இவர்களுக்குப் புரியாமல் போனது.

சிவானி,அடுத்த நிலை வகுப்பிற்குப் பதிவு செய்து கொண்டாள்.ஆன்மீகம் கூட ஏதோ கும்பிட்டோமா என்கிற திருப்பியில் அமைந்துவிட வில்லை.சோதிட பரிகாரம் என்கிற முறையில் நீண்டு கொண்டும்,அடுத்தடுத்த படிநிலைக்குத் தள்ளிக் கொண்டேயிருக்கும் அடுத்த நிலை வகுப்புகள்.இறுதியாகச் சந்நியாச வாழ்வில்,உயிர் இருக்கும் வரை சேவை என்று தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இன்றளவும் கூட தனக்கு நிகரான ஒரு மனிதர்களைக்கூடத் தயார் செய்து தனக்குப் பிறகு இவர்தான் என அறிவிக்கவில்லை நவீன சாமியார்கள்.இதையெல்லாம் யோசிக்க மனமில்லாமல் சிவானி, தன்னுடைய வாழ்வில் அடைந்த துன்பங்களிலிருந்து விடுதலை அடைய வேண்டும் என்று ஒவ்வொரு வகுப்பாக முடித்துக்கொண்டுபோனாள்.

இறுதியாகச் சந்நியாசம் வாங்கிக்கொள்ளத் துடித்தாள்.ஒருவாறு தன் மகனை அவள் தந்தையிடம் ஒப்படைத்து விட்டு சந்நியாசியாக மாறிப்போனாள்.அங்கு அவள் முழுக்க பிறர்க்குச் சேவை செய்யும் தன்னார்வ தொண்டராகவும்,சந்நியாசியாகவும் மாறிப்போனாள்.

நள்ளிரவு ஆசிரம வேலைகளைப்பார்த்துவிட்டுத் தூங்கச் சென்று காலையில் சீக்கிரம் எழுந்து வேலையைப்பார்க்க வேண்டும்.வேலை செய்யக் கட்டுப்பாடு நேரம் எதுவும் இல்லை. கடவுள் கூட சிறிது நேரம் ஓய்வெடுப்பார்.பெரும்பாலும் சந்நியாசிகள் அப்படியில்லை.

ஆசிரமத்தின் சொத்து மதிப்புகள் உயர்ந்து கொண்டே சென்றது.ஆனால் சந்நியாசிக்கு எதற்குப் பணம் என அவர்களுக்குச் சம்பளம் எதுவும் கொடுக்கப்படுவதில்லை.சந்நியாசிக்கு எதற்குப் பணம் என்ற கேள்வியும் இல்லை. வாழ்க்கை ஒரே சூழலில் பயணிக்குமா என்ன?

கதிர், வேலைபார்த்த அலுவலகம் ஆன்மிக வகுப்பிற்கு ஏற்பாடு செய்தது.அதுவும் சிவானி தங்கியிருந்த ஆசிரமத்தில் தான் அந்த வகுப்பு கதிரும் மறுப்பு தெரிவிக்க முடியாமல் அங்கு வந்தான்.அவனுக்கான மாற்றம் அங்கு ஆரம்பமானது.முதல் மனைவி சிவானியைப் பிரிந்து,உண்மையான அன்பைப் பருகத்தெரியாமல் சில பெண்களிடம் ஏமார்ந்து,தன் மகன் ரித்விக்கிற்கு செய்த துரோகத்திற்கு எதுவும் கைமாறு அளிக்கமுடியவில்லை அவனால். முடிந்தவை,முடிந்தவை தானே.திருந்தி வாழ்தல் என்பது தவறவிட்ட காலங்களை ஒரு போதும் திருப்பி பெற முடியாவிட்டாலும் ஆறுதல் அளிக்கும் அவ்வளவுதான்.

கதிர்,எதிர் பாராமல் மா, சிவானியாக வந்தாள்."மா" என்றால் தாய் என்று மரியாதையாகச் சந்நியாசி பெண்களை ஆசிரமத்தில் அழைப்பது வழக்கம்.சிவானியைப் பார்த்தான் கதிர். அவளுடைய முழு அழகும் குலைந்து போயிருந்தது.அவள் மொட்டை அடித்துக்கொண்டு காவி அங்கியை அணிந்து கொண்டிருந்தாள்.

கதிரையும் சந்தித்தாள்.அவளால் எதுவும் பேச முடியவில்லை.அனைவரையும் ஆசிரமத்தில் அடைமொழியில் அழைப்பார்கள்.கதிரை அவள் ஐயா என்று அழைத்தாள்.அவன் வகுப்பு ஏதுவும் கலந்துகொள்ளாமலேயே சிவானி அளவிற்கான பக்குவத்திற்கு வந்தான்.

இருவருக்கு மிடையில் மீண்டும் காதல் பிறந்தது.ஆசிரமத்தில் சந்நியாசிகள் காதலிக்கக் கூடாதா?அப்படியே காதலித்தாலும் அது அவர்களின் தெய்வீக நிலையில் அல்லவா இருக்கும்.தெய்வீக நிலையில் காதலித்தாள் சிவானி.கதிர் அங்கிருந்து வாழ்வைத் தொடங்க நினைத்ததும் காலத்தின் முடிவானது.

மா, சிவானி தன்னுடைய சந்நியாசத்தை முடித்துக்கொண்டு தன்னுடைய கணவனோடும் தன் மகனோடு வாழக் கேட்டிருந்த அனுமதி அவளுக்குக் கிடைக்காமல் வெகு நாட்கள் துன்பத்தில் இருந்தாள்.

சில நாட்களுக்குப்பிறகு ஆசிரம வளாகத்தில் சிவானி சமாதி அடைந்து விட்டதாகச் செய்திகள் வந்தது.அந்த அறையில் சிவானியின் வாழ்வு முடிந்தாலும் அவள் வாழ வேண்டும் என்கிற வேட்கை அந்த அறை முழுவதும் பரவியிருந்தது.அதைச் சாமியார் இறுதி வரை புரிந்து கொள்ளவேயில்லை.அந்த சாமியாரும் மனிதர்தானே.

அடுத்த வகுப்பிற்காக மக்கள் அனைவரும் வரத்தொடங்கினார்கள்.வகுப்பு நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கிறது.என்ன அவர் தலைமறைவு வாழ்க்கையைக் கூட மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

இன்று வரை எந்த சாமியாரும் சமூகத்திற்கான மாறுதலையும் வறுமையையும் மாற்றிவிடவில்லையெனவும் ஒரு சிலர் கதிரோடு பேசிக்கொண்டார்கள்.அன்றுமுதல் சிவானியை இன்னும் அதிகமாகக் காதலிக்க ஆரம்பித்தான் கதிர்,சிவானியின் நினைவாக ஆசிரமத்திலேயே தங்கிவிட்டான்.அந்த சாமியாரும் இறுதியில் மனிதராகவே இறந்துவிட்டார்.அந்த ஆசிரமம் முழுவதும் நிறைய வண்ணத்துப்பூட்சிகள் தன் நிறங்களைப் பார்க்க முடியாமல் சுற்றித் திரிகிறது.

❑

**● கார்த்திகா**

பெண்ணியம்
கரண்டி பிடித்த கையில்
காரோட்டுகிறாள் ஒருத்தி..

பைலட்டாகி பாரெங்கும்
பறக்கிறாள் இன்னொருத்தி..

ஆணுக்குப் பெண்
இளைப்பில்லை.,
கவிஞனின் கனவு நனவாகியதால்

முடங்கிக் கிடந்த
சிட்டுக்குருவிகள் வல்லூறாய் மாறி
வானில்
பறக்கின்றன.,

தட்சனை கேட்ட
காலமெல்லாம்
மலையேறிப் போய்
மகாலட்சுமியே
வீட்டுக்கு வர்றா.,
உச்சரிக்கின்றன உதடுகள் உலகெங்கும்..

அழகழகு தோரணங்கள்
அருகருகே கட்டினாலும்

நண்பகல் நேரத்தில்
நார்நாராய்க்
கிழிந்த
சேலையுடன்
கழிவறை நாற்றத்தில்
அடைக்கலம் தேடும்
அபலையொருத்தியின் கூக்குரலில்
உடைந்து சிதறிடும் சுதந்திரம்தான்
அந்தோ பரிதாபம். ❑